# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-13
Issue-6

ஜூன்-2020 (ஷவ்வால்-1441)

விலை ரூ. 20/-



## வேண்டாம் உங்கள் பெருநாள் வாழ்த்து..?

டெல்லி முஸ்லிம்கள்
முதலமைச்சர் கேஜிரிவாலுக்கு
எழுதிய கடிதம்

பாசிச ஆட்சியில்

## முஸ்லிம்கள் மீது தொடரும் குரூரங்கள்



ஆர்.எஸ்.எஸ். ஊழியரின்
ஒப்புதல் வாக்குமூலம்

பொது சேவைக்கான நிறுவனங்கள் இஸ்லாத்தின்
வரலாற்றில் மக்கள் நல்வாழ்வு கூறும் நிறுவனங்கள்

بسم الله الرحمن الرحيم

"

**தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்**
(அல்குர்ஆன் - 9:13)

"


| | |
|---|---|
| முஸ்லிம்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய சதிகள்! | - 6 |
| பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்... | - 11 |
| நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு செல்லும் மாணவி பர்ஹானா.! | -14 |
| இந்தியாவின் முதல் பெண் பல் மருத்துவர் பாத்திமா அலி ஜின்னா | - 15 |
| மக்கள் நீதி மைய்யத்தின் தலைவர் கமலஹாசன் அவர்கள் பாரத பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதம் | - 16 |
| மனித நீதிப் பாசறையும் கலைஞரும் | - 20 |
| கவிக்கோவிற்கு துஆச் செய்வோம் | - 22 |
| பயங்கரவாதிகளின் பயங்கரவாதிகளின் கைகளில் கோவை! | - 24 |
| பாசிச ஆட்சியில் முஸ்லிம்கள் மீது தொடரும் குரூரங்கள் | - 27 |
| இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம் | - 34 |
| கொரோனாவால் வெளிவந்தது மோடி லட்சணம் | - 39 |
| முஸ்லிம்களுக்கெதிராக தவறான செய்தியை கொடுத்து வெறுப்பை விதைக்கும் ஊடகம் | - 40 |
| தொற்று நோயை ஏற்கனவே எதிர்கொண்ட தமிழகம்..! | - 43 |
| இந்தியாவில் கொரோனா வைரஸை காட்டிலும் வெறுக்கப்படும் முஸ்லிம்கள் | - 44 |
| மாட்டு மூத்திரம், மாட்டுச்சாணி, சூரிய ஒளி போதும் கரோனா வராது | -46 |
| ஊரடங்கு மக்களின் உரிமைகளை பறித்து சிறையில் தள்ளுவதற்காக அல்ல | - 47 |
| வேண்டாம் உங்கள் பெருநாள் வாழ்த்து..? | - 48 |
| காஷ்மீர் - துயரத்தின் பூமி | - 51 |
| வெள்ளை மாளிகையை சுற்றி வன்முறை போராட்டம் | - 52 |
| யாரும் யாரையும் விட உயர்ந்தவர்கள் இல்லை | - 53 |
| ஆர்.எஸ்.எஸ். ஊழியரின் ஒப்புதல் வாக்குமூலம் | - 55 |
| பொது சேவைக்கான நிறுவனங்கள் இஸ்லாத்தின் வரலாற்றில் மக்கள் நல்வாழ்வு கூறும் நிறுவனங்கள் | - 54 |



ஜூன்-2020

# வைகறை
## வெளிச்சம்

ஷவ்வால்-1441)

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

தலையங்கம்

# அதிக தான தர்மங்கள் வழங்குவதில் உலக அளவில் முஸ்லிம்கள் முதலிடம் வகிப்பதாக மனித உரிமை ஆணையம் பாராட்டு

ஜனவரி 28, 2019-இல் நியூஸ் 7 என்ற செய்தி ஊடகம் தந்த செய்தி இது.

இது கொரோனா காலத்திற்கு முந்தைய செய்தி என்பதை மறப்பதற்கில்லை. கொரோனா காலத்தில், முஸ்லிம்கள் மீண்டும் ஒருமுறை இதை நிரூபித்துக் காட்டினார்கள்.

'கொரோனா'வை முன் கூட்டியே எச்சரித்த போது அதை நக்கலும், நையாண்டியும் செய்து, ஊதாசீனப்படுத்தியது, நமது மத்திய மோடி அரசு. அதையேதான் தமிழ்நாட்டை ஆட்சிச் செய்து கொண்டிருக்கும் மாநில அரசும் செய்தது.

இந்த கொரோனாவால் குரூரமாகப் பாதிக் கப்பட்டவர்கள், சொல்லொன்னா கொடுமை களுக்கு ஆளாக்கப்பட்டவர்கள் புலம் பெயர்ந்து வயிறு பிழைக்க வந்தவர்கள்தாம். அவர்கள் நடந்தே ஆயிரக்கணக்கான மைல்களைக் கடக்க முடிவு செய்தனர். பாதிபேர் சாலையோரங்களில் பிணமாக ஆனார்கள்.

இந்த மக்களுக்கு என்னென்ன தேவையோ அவற்றைக் கேட்டறிந்து ஆவண செய்திட வேண்டியது ஓர் அரசின் அடிப்படைக் கடமை. ஆனால் அரசு இதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. மாறாக, அந்த மக்களை கிண்டலும் கேலியும் பண்ணின.

சொந்த ஊர்களுக்கு நடை பயணம் எனத் தொடங்கி நடு வழியில் பிணமாய் ஆன அந்த மக்களுக்கு உதவி செய்திட வேண்டியவர் நிதி அமைச்சர் நிர்மலா சித்தாராமன். ஆனால், அவர்தான் மிகவும் கீழ்த்தரமாக அந்த மக்களை ஏகடியம் பேசினார்.

இந்த நிலையில் அந்த மக்களுக்கு அதிகமான உதவிகளைச் செய்தவர்கள் முஸ்லிம்கள்தாம் என்றால் அது மிகையாகாது.

சாலையோரங்களில் உணவு, உடை, பாத அணிகள் இவற்றை வைத்துக்கொண்டு இலவசமாக அதனைத் தந்து கொண்டிருந்தார்கள்.

தாங்கள் செய்யாவிட்டாலும் இந்த மக்களைப் பாராட்டி இருக்கலாம். ஆனால் இந்த பாசிச பரிவார அரசு, அதைச் செய்யவில்லை. காரணம் அவர்கள் முஸ்லிம்கள். (UAPA) என்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களின் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யாமலிருந்தால் போதும் என்பதுதான் இப்போதைய நிலவரம்.

தம்பி திருப்பூர் காதர் அவர்கள், மேலே நாம் சுட்டிக்காட்டிய செய்தியை முகநூலில் போட்டு, இந்த (முஸ்லிம்களிடம்) ஆட்சி இருந்தால் நாடு எப்படி இருக்கும் என்று ஒரு பதிவைப் போட்டிருந்தார். அதைப் பல லட்சம் பேர் விரும்பி இருந்தார்கள். பார்த்திருந்தார்கள். பகிர்ந்திருந்தார்கள்.

அடுத்த நாள் வீரமங்கை "ஸ்டீஸ்டா செட்டல்வாட்" அவர்கள் வேறொரு செய்தியை தன்னுடைய 'சப்ரங்' இணைய தள இதழில் நமக்குத் தந்தார்கள்.

அந்தச் செய்திக்கு இப்படித் தலைப்பிட்டிருந்தார்கள். Charity of a different Count. வித்தியாசமான இன்னொரு தானம்.

முஸ்லிம்கள் ரமழான் மாதத்தில் பகல் பொழுதெல்லாம், உண்ணுவதோ பருகுவதோ இல்லை. இந்த மாதத்தில் அவர்களின் வீடுகளில் பகல் பொழுதில் அடுப்பெரியாது. ஆனால், உணவு சமைத்தார்கள். அதையும் கூடி சமைத்தார்கள். அந்த உணவை உணவின்றி வாடிய ஏழைகளுக்குக் கொடுத்தார்கள். காய்ந்த வயிற்றோடு வீதிகளிலும், சாலைகளிலும் நடந்து சென்ற மக்களுக்குக் கொடுத்தார்கள். இவர்கள் (முஸ்லிம்கள்) விரதம் இருந்து கொண்டே காய்ந்த வயிற்றுக்கு உணவு வழங்கியதால் அது தர்மத்தில் தனி வகையானது. (Source : Subrag Communication)

இப்படி அவர்கள் தான தர்மங்களை வழங்குவது ஒரு சமயோகித உந்தலால் அல்ல. மாறாக அது அவர்களின் கொள்கை. இறைவனின் வழிகாட்டுதல்.

முஸ்லிம்களின் அடிப்படைக் கடமை முதல் கடமை தொழுகை, அதற்கு அடுத்தக் கடமை வழங்கி வாழ்வது.

இறைவன் தொழுகையை வலியுறுத்தும் இடமெல்லாம் வழங்கி வாழ்வதையும் இணைத்தே வலியுறுத்துகின்றான். இந்த இரண்டையும் ஒருங்கே நிறைவேற்றுபவன்தான் முஸ்லிம். வழங்கி வாழாதவன் தான் ஏற்றுக்கொண்ட தீனை - மார்க்கத்தை (இறைவனின் வழிகாட்டுதலை) வேறு சொற்களால் சொன்னால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதைப் பொய்யாக்குகின்றான் எனப் பிரகடனப்படுத்துகின்றான் அல்லாஹ்.

அவன் கூறுகின்றான்...

"நபியே! தீனைப் பொய்ப்பிக்கிறானே அவனை நீர் பார்த்தீரா? பின்னர் அவன்தான் அநாதையை விரட்டுகிறான். அவன் ஏழைகளுக்கு உணவளிக்க தூண்டுவதுமில்லை." (அல்குர்ஆன் - 107:1-3)

இதுபோல் இன்னும் பல இறை வசனங்களைச் சுட்டிக் காட்டலாம், விரிவஞ்சி விடுகின்றோம். இன்னும், இறைவன் ஏழைகளுக்குக் கொடுப்பதை எப்படிக் குறிப்பிடுகின்றான் என்றால் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும் அவர்களுக்கு உரியதை வழங்கி விடுங்கள் என்கின்றான்.

இதன் பொருள், நம்மிடம் உபரியாக இருக்கும் பொருள் ஏழைகளுக்கு உரிமைப்பட்டது என்கின்றான். அதை எடுத்து எழைகளுக்குக் கொடுத்து அந்தச் செல்வங்களைத் தூய்மைப் படுத்துங்கள் என்கின்றான். (அல்குர்ஆன் - 9:103)

இதைச் சொல்லும் இறைவன் தன்னிடம் சேரும் பொருளை ஒரு முஸ்லிம் எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால், அல்லாஹ் அவனுக்கு அருளியது என எடுத்துக் கொள்ள வேண்டும். அதனால்தான் இறைவன், இறைவன் உங்களுக்கு வழங்கியவற்றிலிருந்து கொடுங்கள் என்கின்றான். (பார்க்க அல்குர்ஆன் - 57:7. 63:10)

அதேபோல், நீங்கள் வழங்கிடும் தான தர்மங்கள், வீண்போக மாட்டா, அவை அல்லாஹ்வின் வழியில் நீங்கள் வழங்கிடும், அழகியக் கடனாகவே பார்க்கப்படும் என்கின்றான். அதற்கான அழகியக் கூலி மரணத்திற்குப் பின்னால் வரும், வாழ்க்கையில் தரப்படும் எனக் குறிப்பிடுகின்றான்.

"நிச்சயமாக தான தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும், இன்னும் அல்லாஹ்வுக்கு அழகான கடனாகக் கடன் கொடுத்தார்களே அவர்களுக்கு அதன் பலன் இரு மடங்காக்கப்படும். அன்றியும் அவர்களுக்கு அல்லாஹ்விடம் கண்ணியமான நற்கூலியும் இருக்கின்றது" (அல்குர்ஆன் - 57:18. 57:11)

இப்படி அல்லாஹ்விடம் அளப்பறிய கூலி கிடைப்பதால் முஸ்லிம்கள், தாங்கள் செய்யும் தான தர்மங்களுக்கு இந்த உலகில் எந்த பலனையும் எதிர்ப்பார்க்க மாட்டார்கள்.

தான தர்மங்களை வாங்குபவர்கள் நன்றி செலுத்த வேண்டும் என முஸ்லிம்கள் எதிர்பார்க்கக் கூடாது, என்கின்றார்கள், மனித குலத்திற்கு அறுதி தூதராகவும், அருட்கொடையாகவும் அருளப்பட்ட முஹம்மத் (ஸல்) அவர்கள்.

அதே நேரத்தில், தான தர்மங்களால் பயனடைபவர்களிடம், இப்படிக் கூறுகின்றார்கள், மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன், இறைவனுக்கும் நன்றி சொல்ல மாட்டான் எனக் கூறினார்கள்.

காலங்கடருவதற்குள் தான தர்மங்களைச் செய்து விடுங்கள்.

அல்லாஹ் எச்சரிக்கின்றான்...


"உங்களில் ஒருவருக்கு மரணம் வருவதற்கு முன்னரே நாம் உங்களுக்கு அளித்தவற்றிலிருந்து தர்மமாக செலவு செய்யுங்கள் (அவ்வாறு செய்யாது மரணிக்கும் சமயம்) என் இறைவனே, சிறிது காலம் வரை என்னை நீ பிற்படுத்தக் கூடாதா? (அப்படியாயின்) நானும் தான தர்மங்கள் செய்து நல்லவர்களில் ஒருவராக ஆகிவிடுவேனே! என்று கூறுவான்.

"ஆனால், அல்லாஹ் எந்த ஆத்மாவுக்கும், அதன் தவணை வந்துவிட்டால் அதனைப் பிற்படுத்த மாட்டான். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு தெரிந்தே இருக்கின்றான்" (அல்குர்ஆன் - 63:10.11)

ஆக தான தர்மங்களை வழங்கிடுவதும், வழங்கி வாழ்வதும் இஸ்லாத்தில் (Idecology) அல்லாஹ்வின் கட்டளை. அடிப்படை வணக்கம்!

இந்த கொள்கை கோலோச்ச வந்திடும் போதுதான், நாம் நாட்டில் சாலையோரங்களில் நடை பயணம் செல்வோர், வருவாய் இல்லாமல் குழந்தைகளோடு தற்கொலை செய்து கொள்பவர்கள், பிணமாக குவியும் அவலம் மாறும்.

- இன்ஷா அல்லாஹ்.




# முஸ்லிம்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய சதிகள்!

**புகுமுன்**

அன்பார்ந்த வாசகர்களே!

ஜான் பெஃப்பர் அவர்கள் இந்தத் தொடரில், இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்களின் மீதும் வெறுப்பை வளர்க்க, எப்படிப் பொய்களை இட்டுக் கட்டுகின்றார்கள் கிருஸ்தவ உலகத்தவர் என்பதைச் சுட்டிக்காட்டி வருகின்றார்.

முஸ்லிம்களைக் கொலை வெறிக் கொண்டவர்களாகவும், மனிதாபிமானம் அற்றவர்களாகவும், வரலாறு முழுவதும், கிருஸ்தவ உலகம் சித்தரித்தது.

ஆனால், போர்களின் போதுகூட முஸ்லிம்கள் மனிதநேயம் மிக்கவர்களாவும், இங்கிதம் தவறாதவர்களாகவும் நடந்து கொண்டார்கள். காரணம், இஸ்லாம் காட்டும் வழிகாட்டுதல்கள். இதனை ஜான் பெஃப்பர் அவர்கள் ஓரிருவரிகளில் தனது நூலில் அதனை சுட்டிக் காட்டிட இயலவில்லை. ஆனால் நாம் போர்களின் போது இஸ்லாம் வகுத்து வழங்கிய வழிகாட்டுதல்களை விரிவாகவே சுட்டிக் காட்டிட விரும்புகின்றோம்.

இந்த வரலாற்று உண்மைகள் இன்றைக்கு வளர்ந்து வரும் இஸ்லாமோ போஃபியாவை எதிர்கொள்ள அதிகமாகப் பயன்படும். இன்ஷா அல்லாஹ்.

இந்தத் தொடரில் அதை விரிவாகத் தந்திடுவோம் என்பதை சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

## போர்களில் இஸ்லாம் கடைப்பிடித்த இங்கிதங்கள் (போர்களில் இஸ்லாம் வெளிக்காட்டிய நாகரிகம்)

இஸ்லாமிய நாகரிகத்தின் தகத்தகாய மானதொரு பகுதியை முஸ்லிம்கள் கலந்துகொண்ட போர்களில் காணலாம்.

சுமூகமான சூழ்நிலையில், அமைதியான காலங்களில் பாதுகாப்பிற்குப் பங்கமில்லை என நம்பிடும் நல்ல சூழ்நிலைகளில் அடுத்தவர்கள் மீது அன்பு காட்டுவது, பெருந்தன்மையோடு நடந்து கொள்வது என்பனவெல்லாம் சாத்தியமாகின்றது.

அதேபோல் தோற்றுப்போன சமுதாயங்கள் வலுவிழந்த சமுதாயங்கள் பவ்வியமாக நடந்து கொள்கின்றன என்பது பெருமைக்குரிய ஒன்றல்ல. அங்கே தன்மையோடு நடந்து கொள்வதைத்தவிர அவர்களுக்கு வேறு வழியொன்று இல்லை.

ஆனால், வென்று நின்ற சமுதாயங்களின் மதமதப்பு வேறொரு வேதனைக்கு இட்டுச் சென்றது. பார்க்க அல்லது படிக்க இதயத்தைப் பிழியும் அநியாயத்தைச் செய்தன இந்த வெற்றி பெற்ற சமுதாயங்கள்.அவை கடின சித்தம் கொண்டவையாக இருந்தன. காட்டுமிராண்டிகளாகச் செயல்பட்டன.

வெற்றி பெற்ற சமுதாயங்கள் இப்படி நடந்து கொள்வது அன்றைய நாள்களில்தான் நடந்தன. அவை இன்றைய செய்திகளல்ல என்றில்லை.

அன்றைக்கு வெற்றி பெற்ற சமுதாயங்கள் எப்படி நடந்தனவோ அப்படியே இன்றைக்கும் வெற்றி பெற்ற சமுதாயங்கள் நடந்து கொண்டன. ஆதி மனிதராம் ஆதம் (அலை) அவர்களின் காலத்திலிருந்து இன்றுவரை நடந்து கொண்டிருப்பது இதுதான்.

ஆனால், இஸ்லாம் வெற்றி பெற்ற காலங் களில் காட்டியது முற்றிலும் வேறுபட்டதொரு பண்பாட்டைத்தான்! இஸலாம் மட்டுந்தான் வெற்றி பெற்ற காலங்களில் வேறுபட்ட மாறுபட்ட ஒரு தாராளத்தன்மையையும், தயாள குணத்தையும் வெளிக்காட்டியது.

அதேபோல் இஸ்லாம் நெருக்கடிகளையும், கடுமையான தாக்குதல்களையும் எதிரிகளி டமிருந்து பெற்றிருக்கின்றது.

எந்த நெருக்கடியிலும் அதுதான் போர்களின் போது கடைபிடிக்க வேண்டிய சாங்கியங் களையோ, இங்கிதங்களையோ கிஞ்சிற்றும் விட்டுக் கொடுக்கவில்லை.

போர்களின்போது இஸ்லாம் தாங்கொணா இழப்புகளைச் சந்தித்திருக்கின்றது. இந்த இழப்புகளால் வெறுப்புற்று அது வரம்புகளை மீறிச் செயல்பட்டதில்லை.

ஏனெனில், இங்கே வரையறைகளை நியமித்துத் தந்தது அனைத்தையும் அறிந்த அல்லாஹ்! அவனுடைய வரம்புகளை மீறி வன்மைகளை மேற்கொள்ள அவனுடைய அடியார்கள் விரும்புவதே இல்லை. அனுமதிக்கப்படவுமில்லை.

இஸ்லாம், அதன் முழுமையான வடிவில் வந்தபோது மக்கள் மாக்களாகவே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். காட்டில் வாழ்ந்த மிருகங்களுக்கும் அவர்களுக்கும் எந்த வேற்றுமையும் இருக்கவில்லை.

வலியவன் மெலியவனை இரக்கமின்றி கொன்று குவித்துக் கொண்டிருந்தான். மெலி யவர்களின் உடமைகளையெல்லாம் தனதாக்கிக் கொண்டிருந்தான். சண்டையிட்டு மடிவதும் சமருக்கு நிற்பதும் எல்லா சமுதாயங்களிலும் நிரந்தர விதியாக நின்று செயல்பட்டிருக்கின்றது. இதில் எந்த வரையறையும் இல்லாமல் எல்லா நெறிகளையும் மிஞ்சி நின்றிருக்கின்றது. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தை அடித்துப் பிடுங்கிக் கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, அந்தச் சமுதாயத்தின் ஆண்களையும், பெண்களையும் குழந்தைகளையும் அடிமைகளாக்கி, அல்லல் களுக்குள்ளாக்கி இருக்கின்றது. இங்கே மனிதாபிமானமோ, வெட்கமோ சற்றுமின்றி செயல்பட்டிருக்கின்றன வெற்றி பெற்ற சமுதாயங்கள்.

மனிதர்களை மிருங்களாக மாற்றிக் கொண்டி ருந்தவனுக்கு அறுதி முடிவைக் கொண்டு வந்தது இஸ்லாம். இதில் சீலமிக்கதொரு நாகரிகத்தை அறிமுகம் செய்தது இஸ்லாம். நாடுகளுக்கிடையேயும் பல்வேறு சமுதாயங் களுக்கிடையேயும் நல்லுறவுகள் மலர்ந்திட வேண்டும் என விதி வகுத்தது இஸ்லாம். இந்த நல்லுறவுகள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வது, ஒருவருக்கொருவர் உதவி செய்து ஒத்துழைப்பது என்பனவற்றால் அலங்கரிக்கப் பட வேண்டும். இது இஸ்லாத்தின் விருப்பம் வழிகாட்டுதல்.

இந்த நல்லுறவுகளை வடிவமைத்துக் கொள்வதில் யாரும் யாருக்கு அடிமையல்ல, 'எல்லா மனிதர்களும் சமமானவர்களே!' என்ற சமதர்ம சிந்தனையே மேலோங்கி நின்றிட வேண்டும். இஸ்லாத்தின் வழிகாட்டுதலின் அருமை பெருமைகளை உணர்ந்திடாத சமுதாயங்கள் - அடுத்தவர்களோடும், அண்டை நாடுகளோடும் சண்டையிடுவதும், போர்களை நடத்திடுவதையும் நித்திய நிகழ்ச்சிகளாக ஆக்கிக் கொண்டன. ஆக ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு சமுதாயமும் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்றொரு கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு சமுதாயமும் தன்னைத் தற்காத்துக் கொள்ளத் தவறுமே யானால் அக்கம் பக்கத்திலுள்ள நாடு அல்லது சமுதாயம், இந்த நாட்டை அல்லது சமுதாயத்தை ஆக்கிரமித்து அழித்துவிடும்.

இந்த யதார்த்தத்தை எந்த நிலையிலும் மறுத்திடாமல் இஸ்லாமும் இப்படி வழிகாட்டுகின்றது.

"அவர்களை எதிர்ப்பதற்காக, (ஆயுத) பலத்தையும், போர்க் குதிரைகளையும், உங்களுக்குச் சாத்தியமான அளவு (எந்நேரமும்) சித்தப்படுத்தி வையுங்கள். இதனால் அல்லாஹ்

*வுடைய எதிரிகளையும், உங்களுடைய எதிரிகளையும் நீங்கள் பயப்படச் செய்யலாம்" (அல்குர்ஆன் - 8:60)*

*ஆக்கிரமிக்க வருகின்றவர்கள் தங்களுடைய ஆக்கிரமிப்பைக் கைவிட்டு, அமைதியான நடவடிக்கைகளின் பக்கம் சாய்ந்தால், அப்போது அமைதியையே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என இறைவன் வலியுறுத்துகின்றான்.*

*இதனைத் தனது இறுதி வழிகாட்டுதலாம் இறைமறையில் இறைவன் இப்படிக் கூறுகின்றான் :*

**"அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்தால், நீங்களும் அதன் பக்கம் சாயுங்கள். அல்லாஹ்வை நம்புங்கள். நிச்சயமாக அவன் செவியுறுவோனும், நன்கறிவோனுமாக இருக்கின்றான்" (அல்குர்ஆன் - 8:61)**

*ஆனால், ஆக்கிரமிப்பையே வாடிக்கையாகக் கொண்ட நாடுகள், பலப்பரீட்சை நடத்தித்தான் பார்த்திட வேண்டும் என அடம் பிடித்தால் பலத்தைப் பலங்கொண்டுதான் சந்திக்க வேண்டும்.*

**"அல்லாஹ்வுடைய பாதையில் உங்களை எதிர்த்தோருடன் நீங்களும் யுத்தம் புரியுங்கள். ஆனால் நீங்கள் வரம்பு கடந்து விட வேண்டாம். ஏனென்றால் நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறியவர்களை நேசிப்பதில்லை" (அல்குர்ஆன் - 2:190)**

## போரின் நோக்கங்கள்

*போர் எதற்கு? அதன் நோக்கம் என்ன? அது எதுவரை? என்பன மேலே விளக்கப் பட்டு விட்டன. கொள்ளையடிக்க வேண்டும் என்பதற்காகவோ, மாற்றாரின் ஆவினங்களையும், பெண்களையும் கவர்ந்திட வேண்டும் என்பதற்காகவோ நடத்தப்படும் போர்களை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. அதேபோல் சமுதாயங்களை அலைக்கழிக்க வேண்டும். நிலைகுலையச் செய்திட வேண்டும் என்பன வற்றிக்காகப் போர்கள் நடத்தப்பட்டதுமில்லை, அனுமதிக்கப்பட்டதுமில்லை, இஸ்லாம் சொல்லத்தரும் நாகரிகத்தில்*

*இன்னும் இறைமறை கூறுகின்றது :*

**"கலகம் முற்றிலும் நீங்கி மார்க்கம் அல்லாஹ்வுடையதாக உறுதி பெறும் வரையில் அவர்களை எதிர்த்து யுத்தம் புரியுங்கள். ஆனால் அவர்கள் விலகிக் கொண்டால் (அவர்களிலும்) அக்கிரமம் செய்தவர்களைத் தவிர (மற்றவர்களைத் துன்புறுத்தி) வரம்பு மீறாதீர்கள்." (அல்குர்ஆன் - 2:193)**

*இங்கே இஸ்லாம் என்ற கொள்கை, முழு அளவில் செயல்பட்டிட அனுமதி கேட்டே போர்கள், இந்தப் போர்களின் இன்னொரு நோக்கம் அல்லாஹ்வின் திருநாமம் துதிக்கப் பட்டு அவனைத் தொழுது வரும் புனித இடங் களாகிய பள்ளிவாயில்களைப் பாதுகாப்பதே!*

*இதை இறைவன் இப்படிக் கூறுகின்றான் :*

**"இவர்கள் (எத்தகையோரென்றால், நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து (விரோதிகளால்) துரத்தப்பட்டார்கள். "எங்களுடைய இறைவன் அல்லாஹ்தான்' என்று கூறியதுதான் இவர்கள் செய்த குற்றம். மனிதர்களில் (அக்கிரமம் செய்யும்) சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால், கிறிஸ்தவர்களின் ஆலயங்களும், அவர்களுடைய மடங்களும், யூதர்களின் ஆலயங்களும், அல்லாஹ்வுடைய திருநாமம் அதிகமாக துதிக்கப்படும் மஸ்ஜிதுகளும் அழிக்கப்பட்டே போயிருக்கும். அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கின்றானோ, அவனுக்கு நிச்சயமாக அல்லாஹ் உதவி செய்கின்றான்" (அல்குர்ஆன் - 22:40)**

*இன்னொரு முத்து*

*இஸ்லாமிய நாகரிகத்தில் நின்று ஜொலிக்கும் இன்னொரு முத்து என்னவெனில், யாரையும் யாரும் எந்த விதத்திலேயும் அநியாயங்களுக்கு ஆட்படுத்திடக் கூடாது என்பதாகும்.*

*இப்படியொரு அநியாயம் நடக்குமே யோனால், அதைத் தடுத்து நிறுத்திடுவது முஸ்லிம்களின் கடமையாகும். சமுதாயத்தில் மெலியவர்கள் வலியவர்களால் கொடுமைக் குள்ளாக்கப்பட்டால், பாய்ந்து சென்று அதனைத் தடுத்திடுவது முஸ்லிம்கள் விரைந்து முடிக்க வேண்டிய பணியாகும்.*

*இதையே பின்வரும் இறைமறை வசனம் இப்படித் தெளிவுபடுத்துகின்றது:*

**பலவீனமான ஆண்களுக்காகவும், பெண்**

களுக்காகவும், சிறு குழந்தைகளுக்காகவும் (இவர்களைப் பாதுகாப்பதற்காக) அல்லாஹ் வுடைய பாதையில் நீங்கள் யுத்தம் புரியாதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்களோ, (இறைவனை நோக்கி) "எங்கள் இறைவனே! அக்கிரமக்காரர்கள் வசிக்கும் இவ்வூரிலிருந்து எங்களை வெளிப்படுத்தி வை, நீ எங்களுக்கு உன் புறத்தால் இரட்சகரையும், நீ எங்களுக்கு உன் புறத்தால் ஓர் உதவி செய்வோரையும் அளித்தருள்)" என்று பிரார்த்தனை செய்கின்றனர். (அல்குர்ஆன் - 4:75)



எங்கெல்லாம் நலிந்தவர்களின் கண்ணியம், உயிர், உடைமை, இறைவனின் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளும் உரிமை இவையெல்லாம் ஆபத்திற்குள்ளாகி நிற்கின்றனவோ, அங்கெல் லாம் அல்லாஹ்வின் வழியில் ஒரு போர் அவசிய மாகி விடுகின்றது. ஒழுக்க வரையறைகளைக் கொண்டு இருமருங்கும் கரையமைக்கப்பட்ட இந்தப் போரில் கலந்துகொள்ளும் முஸ்லிம், சொர்க்கத்தின் சுகவாசத்திற்குச் சொந்தக்காரன் ஆகின்றான். அவன் இறைவனுக்கு மிகவும் நெருக்கமானவனாகவும் ஆகி விடுகின்றான்.

"ஆதிக்கம் செலுத்த வேண்டும்; அது தரும் ஆணவத்தில் திளைக்க வேண்டும்" என்ற கீழான எண்ணங்களுக்காகச் செய்யப்படும் போர்கள் இறைவனின் பாதையில் செய்யப்படும் போர் களாக மாட்டா. அவை வரம்பு மீறிய செயல் களாகவே கருதப்படும். அவை இறைவழிப் போர்களல்ல ; ஷைத்தானின் வழியில் மேற் கொள்ளப்படும் போர்களாகவே கருதப்படும்.

இதையே இறைமொழி இப்படிச் சுட்டிக்காட்டுகின்றது:

**"உண்மை விசுவாசிகள் அல்லாஹ்வின் வழியில் (அவசியம்) யுத்தம் புரிவார்க்ள. நிராகரிப்போரோ (இவர்களுக்கெதிராக) ஷைத்தானுடைய வழியில்தான் யுத்தம் புரிவார்கள். ஆகவே, ஷைத்தானுடைய நண்பர்களுடன் நீங்களும் யுத்தம் புரியுங்கள். நிச்சயமாக ஷைத்தானுடைய சூழ்ச்சி மிகவும் பலவீனமானதே" (அல்குர்ஆன் - 4:76)**

## போரின்போது

மெலியவர்கள் மீது திணிக்கப்படும் அநியாயத்திற்கெதிராகவும், தங்கள் ஆணவத்தை நிலைநிறுத்த வேண்டும் ; அதற்காக அடுத்தவர் களை அடித்து அடிமைகளாக்கிட வேண்டும் என்பன போன்ற எண்ணங்களோடு செயல்படு கின்றவர்களைத் தடுப்பது, தாண்டி வந்தால் பாய்ந்து சென்று போரிடுவது - இவை முஸ்லிம்களின் கடமையாகும்.

உண்மை நிலை இவ்வாறிருக்க, முஸ்லிம்களே தாக்குதல்களுக்கும், அழிவுகளுக்கும் அவமானங்களுக்கும் ஆட்படுத்தப்பட்டால், அதற்கெதிராகப் போரிடுவதும் அவர்களின் கடமையாகும்.

ஆனால், இதில் வரம்புகளை மீறிவிடக் கூடாது. அந்நிலையில் முஸ்லிம்கள் தங்கள் மேல் திணிக்கப்பட்டு விட்ட போருக்கெதிராகப் போர் புரிந்திட வேண்டும்.

இதனை இறைமறை சுட்டுக்காட்டுகிறது இப்படி :

**"...எவரேனும் (வரம்பு) மீறி உங்கள் மீது வந்தால், அவர் உங்கள் மீது மீறிய விதமே, நீங்களும் அவர்கள் மீது மீறிச் செல்லுங்கள். ஆனால் நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்..." (அல்குர்ஆன் - 2:194)**

இதில் வரம்புகளையும், வரையறைகளையும் மீறுபவர்களை இறைவன் விரும்ப மாட்டான்.

இதையும் இறைவன் தெளிவுபடுத்துகிறான்

**"அல்லாஹ்வுடைய பாதையில் (நீங்கள் செல்வதைத் தடுத்து; உங்களை எதிர்த்தோ ருடன் நீங்களும் யுத்தம் புரியுங்கள், ஆனால்**

நீங்கள் வரம்பு கடந்துவிட வேண்டாம். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறியவர்களை நேசிப்பதில்லை" (அல்குர்ஆன் - 2:190)

இன்னொரு இடத்தில் இறைவன் இப்படிச் சுட்டிக் காட்டுகிறான் :

**"(ஆயினும், எவரேனும்) அக்கிரமத்திற்கு (அதே அளவு) பழி வாங்கினால், அதனால் அவர்களுக்கு எதிராகக் (குற்றஞ்சாட்ட) யாதொரு வழியும் இல்லை"**

**"ஆனால், (அளவு மீறி) மனிதர்கள் மீது அக்கிரமம் செய்து நியாயமின்றி பூமியில் கொலைசெய்வோருக்கு எதிராகத்தான்(குற்றஞ் சாட்ட) வழியிருக்கின்றது. இத்தகையோருக்கு மிகத் துன்புறுத்தும் வேதனையுண்டு." (அல்குர்ஆன் - 42:41,42)**

ஆகவே, ஒரு போர் முஸ்லிம்களின் மேல் திணிக்கப்பட்டுவிட்டது என்றால், முஸ்லிம்கள் அடுத்த கணம் முதல் மனதில் கொள்ள வேண்டியது அல்லாஹ் விதித்துத் தந்த வரையறைகளைத்தாம், இந்த வரையறைகளை மதிக்க மறந்தால் நாமே பூமியில் குழப்பங்களையும், கொந்தளிப்புகளையும் ஏற்படுத்தியவர்களாவோம். இதற்கு எந்த நிலையிலேயும் நாம் இடம்தந்து விடக்கூடாது. ஏனெனில் அல்லாஹ் வகுத்துத் தந்துள்ள விதிகளின் வழி மேற்கொள்ளப்படும் போர்கள் மட்டுமே அல்லாஹ்வின் வழியில் மேற்கொள்ளப்படும் போர்களாகும்.

காட்டுமிராண்டிகளை விஞ்சிடும் உத்திகளுடன் எதிரிகள் முஸ்லிம்கள் மேல் பாய்ந்தாலும் முஸ்லிம்கள் அல்லாஹ்வின் வரையறைகளை மீறிட முடியாது.

இதுபோன்ற விதிகளால் வழிகாட்டப்பட்டதால்தான் இஸ்லாம் கற்றுத்தந்த நாகரிகம் ஏனைய எல்லா நாகரிகங்களையும் விஞ்சி நின்றது என்பதைக் காண்கின்றோம்.

இந்த வழிகாட்டுதல்களின் வழிநின்று அன்று கலீஃபா அபூபக்கர் (ரழி) அவர்கள் ஒரு படையின் தளபதியாகப் பொறுப்பேற்று நின்ற உசாமா (ரழி) அவர்களிடம் பின்வரும் அறிவுரையை - வரையறையைத் தந்தார்கள். :

**- அடுத்த இதழில் தொடரும்**

இறைவனின் அழகியத் திருப்பெயரால்
நியூ மலேஷியா
டிராவல் சர்வீஸ்
பதிவு எண் : 2015/33/018/10098/ANSP
அரசு அங்கீகாரம் பெற்றது

உரிமை: S.B.S. பஷீர்
•பாஸ்போர்ட் ஆன்லைன்
•விமான டிக்கெட்
•விசா சர்வீஸ்
•ECNR & PCC
•எம்பஸி அட்டெஸ்டட்
•GCC மெடிக்கல் சர்வீஸ்
ECR நீக்கி ECNR மாற்றிட
கிளை அலுவலகம்:
12, கலைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389
68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com
தொலைப்பேசி:
04144 243267
04144 243440
செல்:
7708803789
7708503789

**பாகம்-5**

**- எஸ்.எம். முஷ்ரிப்**

# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்




பிராமிணிஸ்ட்டுகள் இந்தியா முழுவதும் குண்டு வெடிப்புகளை நடத்தினார்கள். பின்னர் முஸ்லிம்கள் தாம் அந்தக் குண்டுகளை வைத்தார்கள் என இடைவிடாமல் பிரச்சாரம் செய்தார்கள். ஏன் முஸ்லிம்கள் குண்டு வைக்கின்றார்கள் எனக் கேட்டால், பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதற்கு பழி தீர்க்கின் றார்கள் என்று முதலிலும், பின்னர் குஜராத் இனப்படுகொலைக்குப் பழிவாங்குகின்றார்கள் என்றும் கூறினார்கள்.

நான் என்னுடைய முந்தைய நூலாகிய கர்கரேயைக் கொலை செய்தது யார் என்ற நூலில் குறிப்பிட்டதைப் போல் கடந்த 10 ஆண்டுகளாக நாட்டில் நடந்த இந்து முஸ்லிம் கலவரங்கள். அதாவது 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த கலவரங்கள், இந்துக் களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயுள்ள தவறான எண்ணங்களால் அல்லது காழ்ப் புணர்ச்சிகளால் ஏற்பட்டவை அல்ல.

அதேபோல் அவை திடுதிப்பென ஏற்பட்ட காரணங்களால் நடந்தவையுமல்ல. மாறாக அவை சில பிராமிணிஸ்ட்டுகளால் வேண்டுமென்றே திட்டமிட்டு நடத்தப் பட்டவை.

இவை வகுப்புவாத வைரஸ் சமுதாயத்தை அரித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற கீழான எண்ணத்தால் நடத்தப்பட்டவை.

அவர்கள்-அந்த பிராமிணிஸ்ட்டுகள்-இந்த வழிமுறையை 19-ஆம் நூற்றாண்டில் இருந்தே கடைப்பிடித்து வருகின்றார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில்தான் மகாத்மா ஜோதிபாஸ் பூஃகலயும், பெரியார் இராமசாமி அவர்களும், இன்னும் பலரும் பிராமிணர் களுக்கு எதிராகத் தொடங்கிய இயக்கங்கள் நாட்டின் பல பகுதிகளுக்கு தழைத்தோங்கிக் கொண்டிருந்தன.

இந்தத் தலைவர்கள், பாமர இந்து மக்களிடம் உங்களுடைய எல்லாப் பின்னடைவுகளுக்கும் பிற்போக்குத் தனத்திற்கும் பிராமிண சமுதாய கட்டமைப்புத்தான் காரணம் என நம்ப வைத்திருந்தார்கள். இந்தப் பிரச்சாரத்தில் அவர்கள் வெற்றியடைந்திருந்தார்கள்.

இந்த இயக்கங்கள் மக்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றுக் கொண்டே இருந்தது.



மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வுகள், மக்களிடையே இந்த இயக்கங்களுக்குக் கிடைத்த வெற்றி இவை பிராமணர்களை மிகவும் கவலையடையச் செய்தது.

அவர்கள் பாமர இந்துக்களின் (மக்களின்) கவனத்தை இந்த இயக்கங்களிடமிருந்து திசை திருப்பிட வழிகளைத் தேடிக்கொண்டே இருந்தார்கள். இதில் மிகவும் அதிகமான முயற்சிகளைக் கொட்டினார்கள்.

இதில் இந்து முஸ்லிம் பிரச்சனை அவர்களுக்கு மிகவும் எளிதான தீர்வாகத் தென்பட்டது. இதனால் வகுப்பு வாதத்தை வளர்க்க தங்களால் இயன்றதையெல்லாம் செய்தார்கள். அதற்காகக் கடினமாக உழைத் தார்கள். இதைச் செய்யும் போது தாங்கள் இதில் மறைத்து வைத்திருக்கும் சதியை மக்கள் கண்டு கொள்ளாமலிருக்க என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் கவனமாக ஆய்வு செய்தார்கள். இதில் பாமர மக்களைச் சதா சர்வ காலமும் வகுப்பு வாதத்தில் மூழ்கிடச் செய்வதே அவர்களுக்கு சிறந்த உபாயமாகப்பட்டது. இதனால் அடிக்கடி வகுப்புக் கலவரங்களை உருவாக்கி அதில் பாமர இந்துக்களை ஈடுபடுத்திக் கொண்டே இருந்தார்கள். இதனால் காலப்போக்கில் வகுப்புக் கலவரங்கள் இடைவிடாமல் நடந்துகொண்டே இருந்தன.

இந்தச் சதியின் வழி அவர்கள் முதலில் சமுதாயங்களைத் தங்கள் கைகளில் வைத்துக் கொள்வதற்கும், கலாச்சார ரீதியாக தாங்கள் சொல்வதே கலாச்சாரம் என்றும், மதம், மதச் சடங்குகள் இவற்றிற்கு மக்கள் தங்களையே சார்ந்திருக்க வேண்டும் என்றே விரும்பினார்கள்.

இடைவிடாமல் நடந்த இந்து முஸ்லிம் வகுப்புக் கலவரங்கள், அவர்களுக்குப் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தித் தந்தது.

இந்தக் கலவரங்கள் பாரம மக்களின் கவனத் திற்கு திசை திருப்பியதுடன், அவை தாங்கள் விரும்பும் அரசியல் அதிகாரத்தைப் பெறவும் பன்படும் என்ற நம்பிக்கையைத் தந்தது.

இந்தக் கலவரங்களால் பாமர இந்து இளைஞர்கள் அவர்கள் பக்கம் திரும்பினார்கள். காலப் போக்கில் அவர்களின் கைத்தடிகளாகப் பயன்பட்டார்கள். அதில் பெருமைக் கொண்டார்கள். இதில் எல்லா ஜாதியைச் சார்ந்தவர்களும், ஒன்றுபோல் அவர்களைச் சுற்றி வந்தார்கள்.

இந்நிலையில் அரசியல் அதிகாரத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கை மிகவும் அழுத்தமானது.

இப்போது அரசியல் அதிகாரத்தை மனதில் வைத்துக்கொண்டு, அவர்கள் வகுப்புவாதத் தீயை முடிந்த மட்டும் மூட்டி விட்டார்கள். இதற்காக பாபரி மஸ்ஜித் (காசி-மதுரா பள்ளி வாசல்கள்) இதுபோன்றவற்றைப் பயன்படுத் தினார்கள், தீவிரப்படுத்தினார்கள்.

இறுதியாக அவர்கள் மத்தியில் அதிகாரத்தைப் பிடிப்பதில் வெற்றி பெற்றுவிட்டார்கள். அதேபோல் இன்னும் பல மாநிலங்களிலும், அதிகாரத்தைப் பிடித்துக் கொண்டார்கள். இத்தனையும் பாபரி மஸ்ஜித்-ஐ இடித்தபின் அவர்களுக்குச் சாத்தியமானது. இவற்றை இந்தியா விடுதலையடைந்த பின் பிராமிணிஸ்ட்டுகள் நிறைவேற்றிய வகுப்புவாத அரசியலின் விளைவுகள் எனலாம்.

பாபரி மஸ்ஜித்-ஐ இடித்தபின் ஒரு பொது கருத்து நிலவியது. அது முஸ்லிம்கள் அதிகமாக ஆத்திரமடைந்திருக்கின்றார்கள். இதனால் அவர், ஒரு வகையில் அல்லது இன்னொரு வகையில், பழி தீர்ப்பார்கள் என்பதே அது.

மும்பையில் 1993-இல் கோவையில் 1998-இல் நடந்த குண்டு வெடிப்புகள் இந்தப் பொது கருத்தை உறுதிப்படுத்தின. இந்த இரண்டு குண்டு வெடிப்புகளுக்குப் பின்னாலும் ஒரு பெரிய சதி உண்டு, இவற்றில் பயன்படுத்தப்பட்டவர்கள் பல கிரிமினல் கும்பல்களைச் சார்ந்தவர்கள். இந்த குண்டு வெடிப்புகளில் எந்தத் தீவிரவாத அமைப்புகளும் ஈடுபடவில்லை. ஆனால் பொதுமக்கள் இவையெல்லாம் தொடக்கம் தான் என்றே எடுத்துக் கொண்டார்கள். பொதுமக்கள் இப்படி எடுத்துக் கொண்டதற்கான காரணங்கள் இல்லாமல் இல்லை.

மக்களின் இந்த மன ஓட்டத்தை சில பிராமிண அமைப்புகளும், மத்திய உளவுத் துறையும், கடவுள் தங்களுக்கு அனுப்பிய பொன்னான வாய்ப்பாக எடுத்துக் கொண்டார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அவர்களை மிகப்பெரிய பேய்களாகக் காட்டிடத் தலைப்பட்டார்கள். பின்னர் அவர்களே குண்டு வெடிப்புகளை நடத்தினார்கள். பழியை முஸ்லிம்களின் மேல் போட்டார்கள்.

பின்னர் 2002-இல் குஜராத் இனப்படு கொலை (அன்றைய முதலமைச்சர் மோடியின் தலைமையில் இது நடந்தது) இதில் குழந்தைகள், பெண்கள், வயோதிகர்கள் என 2000 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் காயம்பட்டார்கள், லட்சக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். வீடற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

குஜராத் இனப்படுகொலைகள் விதர்ப்பமாகச் சிந்திக்கும் பிராமிணிஸ்ட்டுகளுக்கும் மத்திய உளவுத் துறைக்கும் மிகுந்த மன தைரியத்தைத் தந்தது. அது நாம் என்ன செய்தாலும் நம்மீது எந்த நடவடிக்கையும் இருக்காது. ஏன் நம்மைச் சந்தேகப்படக்கூட மாட்டார்கள் என்பது தெளிவானது. இதனால் நாம் குண்டு வெடிப்பு நடத்தலாம். பழியை முஸ்லிம்கள் மேல் போடலாம் என்ற நெஞ்சுரத்தைப் பெற்றார்கள். 'Bomb Blast Muslims' குண்டு வைப்போம். முஸ்லிம்களைக்குற்றம் சாட்டுவோம் என்பது ஒரு நிரந்தரக் கொள்கையாகவே மாறிப்போனது.

## இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை உடைத்தெறிய ஓர் இயக்கம்

இதனிடையே பிரிதோர் இயக்கம் தோன்றியது, அதன் முக்கிய நோக்கம் இந்திய நிர்ணயச் சட்டத்தை உடைத் தெறிவதாகும்.

இது ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பிலுள்ள பயங்கரவாத பிராமணர்களால் தொடங்கப் பெற்றது. இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை உடைத்தெறிந்து விட்டு, இந்த ஜனநாயக முறையை சீர்குலைப்பது, இந்தியாவை ஆரியவர்த் இந்து ராஷ்ட்டிரமாக மாற்றுவது அதன் இறுதி இலக்கு. இந்த அமைப்புதான் அபிநவ்பாரத். இந்த ஆரியவர்த் இந்து ராஷ்ட்டிரம், வேதங்களையும், ஸ்மிருதிகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதாகும்.

இதில் முக்கிய மூளையாகச் செயல்பட்டவர்கள் இணை இராணுவ அதிகாரியாக நமது இந்திய இராணுவத்தில் பணியாற்றிய கலோனல் பிரசாத் புரோகித், தயானந்த் பாண்டே இவர் ஜம்மு பீத் என்ற ஆசிரமத்தின் தலைமை மகந்த்-புஜாரி.

இணை இராணுவ தளபதி பிரசாத் புரோகித் நமது இராணுவ கூடங்களிலிருந்து ஆர்.டி.எக்ஸ். வகை, வெடி பொருள்களை திருடி பிராமிண அமைப்புகளில் உள்ள தீவிரவாதிகளுக்கு கொடுப்பார். அத்தோடு அவர்களுக்குக் குண்டுகளைத் தயாரிப்பது குறித்த குறுகிய காலப் பயிற்சிகளையும் அளிப்பார்.

**- அடுத்த இதழில் தொடரும்**

# நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு செல்லும் மாணவி பர்ஹானா.!



- ஹாஜி. பி.எம். அப்துல் கரீம், குளச்சல்



மாணவி பர்ஹானா

வரலாற்று சிறப்பு மிக்க கன்னியாகுமரி மாவட்டத் தில் இயற்கை துறைமுக நகரமான குளச்சல் நகவீர் சார்ந்த கல்லூரி மாணவி பர்ஹானா அமெரிக்கா விலுள்ள நாசா விண்வெளி மையத் திற்கு சென்றுவர தேர்ச்சிப் பெற்றி ருப்பதுஅறிந்து மகிழ்ச்சியடைந் தோம்

மாணவி பர்ஹானாவை நேரில் சந்தித்து பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப் பதற்க்காக குளச்சல் ஜும்மா பள்ளி எதிரில் அமைந்துள்ள ஆஸாத் நகருக்கு சென்றோம். அமெரிக்கா செல்ல ஆனந்தத்தில் இருந்த மாணவி பர்ஹானா எங்களை உற்சாகத்துடன் வரவேற்றார். அவர் படித்த புத்தகங்கள் விண்வெளி ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட நூல்கள் வரிசையாக வீட்டில் ஹாலில் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. எங்களிடம் அதிக நேரம் உரையாடினார்.

விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபாடு வரக் காரணத்தைப் பற்றிக் கூறும் போது,

நான் நான்காம் வகுப்பு படிக்கும் போதே எனக்கு விண்வெளியில் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று. அதற்கு முக்கிய காரணம் என் தாயாரின் தந்தை கேரளா மாநிலம் பூவாரில் மின்சார வாரியத்தில் பொறி யாளராக பணியாற்றி வந்த போது என்னிடம் அடிக்கடி நீ வளர்ந்து பெரிய விஞ்ஞானி ஆக வேண்டும் என்பார்.

நான் ஒரு விஞ்ஞானி ஆக வேண்டும் அவர் கண்ட கனவும் என் பெற்றோர் எனக்கு தந்த உற்சாகமும் எனது கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் சக மாணவ மாணவிகள் தந்த ஆர்வமும் எனது முயற்ச்சியும் பயிற்சியும் இறை அருளும் சேர்ந்து எனக்கு அமெரிக்க நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு சென்றுவர வாய்ப்பு கிடைத்திருக்கிறது 'அல்ஹம்துலில்லாஹ்".

மாணவி தற்போது கன்னியாகுமரி மாவட் டத்தில் சுங்கான்கடை பகுதியிலுள்ள புனித சேவியர் கல்லூரியில் EC பிரிவில் (Electronic & Communication) மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார்.

அவர் நாசாவிண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு சென்று வர கிடைத்த வாய்ப்பு பற்றி கூறும் போது இது உலகளவில் நடைபெறும் போட்டியாகும் வெறும் *45* நிமிடங்களில் *60* கேள்விகளுக்கு பதிலை ஆன்லைனில் எழுத வேண்டும். இந்தாண்டு நானும் திருச்சியை சேர்ந்த மற்றொருவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளோம் ஜுன் மாதத்தில் ஒரு வார காலம்அமெரிக்காசெல்லஇருக்கிறோம். கன்னியா குமரி மாவட்டத்திலிருந்து முதன் முறையாக நான் தேர்வு செய்யப்பட்டிருப்பது மகிழ்சியாக இருக்கிறது என்று மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்.

தனது எதிர்கால லட்சியத்தைப்பற்றி கூறும் போது, எதிர் காலத்தில் ஒருவிண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானியாக விளங்கவேண்டும் என்பதே எனது லட்சியம் என்று உற்சாகத்தோடு கூறினார்.

இஸ்லாமியப் பெண்கள் பற்றிக் கருத்து தெரி விக்கையில் இஸ்லாத்தில் பெண்களுக்கு எல்லா சுதந்திரமும் உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அதை பெண்கள் முழுமையாக பயன் படுத்திக் கொள்ளவில்லை என்றே நான் கூறுவேன்.

இஸ்லாமிய மார்க்க நெறி தவறாமல் நாம் ஆசைப்பட்டதை நமது லட்சியத்தை முழு முயற்சியின் மூலமும் பயிற்சியின் மூலமும் நாம் அடையலாம் அதற்கு பெற்றோரின் ஆதரவும் அன்பும் ஊக்குவித்தலும் மிக முக்கியம் என முடித்தார் பர்ஹானா.

பர்ஹானாவின் தந்தை கலீல்ரஹ்மான் சவுதியில் வேலைப்பார்க்கிறார். ஒரே ஒரு தங்கை மெஹர் பத்தாம் வகுப்பு படிக்கிறார் அவரும் எதிர்காலத்தில் ஒரு பைலட்டாக விரும்புகிறார்

மாணவி பர்ஹானா வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற்று சிறப்பாக வாழ இறை வனிடம் பிரார்த்தனையோடு பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் கூறி இ.இ.மு.சங்கத்தின் சார்பில் பரிசும் வழங்கினோம் இந்த சந்திப்பின் போது இ.இ.மு.சங்கத்தின் தலைவர் எம். பெரோஸ்கானும் குளச்சல் இபுராஹிமும் உடன் இருந்தனர்.



## இந்தியாவின் முதல் பெண் பல் மருத்துவர்

# பாத்திமா அலி ஜின்னா

உலகில் பெண்களுக்கு பல் மருத்துவத்தில் நீண்ட கால வரலாறு உள்ளது. உலகின் முதல் பெண் பல் மருத்துவராக அறியப் படுபவர் ஈரானைச் சேர்ந்த பத்ரி தெய் மௌர்தாஷ்.

1814ல் ஜோஷ் பெரின் ஷெர்ரி என்ற பெண் முறையாக பல் மருத்துவப் படிப்பை முடித்து பட்டம் பெற்றார்.

1859ல் எமக்லின் ராபர்ட் ஜோன்ஸ் (Emekline Robert Jones) முறையாக முதன் முதலில் மருத்துவமனை நிறுவி பல் மருத்துவம் பார்த்தார்.

இதே போல இந்தியாவின் பெண் மருத்துவத்திலும் பெண்களுக்கு நீண்ட வரலாறு இருக்கிறது.

இந்தியா பிரிக்கப்படுவதற்கு முன்பு ஒன்று பட்ட இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் பாத்திமா அலி ஜின்னா தான்.

இன்னொரு பெண் மருத்துவர் தாபிதா சாலோமான். இவர் 1929ல் பாத்திமா அவர்கள் படித்த மருத்துவ கல்லூரியில் பட்டம் முடித்தார். இவர் யூத இனத்தை சார்ந்தவர். இவர் தன் மருத்துவ சேவையை சுதந்திர இந்தியாவிலும் தொடர்ந்ததால் இவரையே இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் என்று சிலர் அங்கீகரிக்கிறார்கள்.

ஆனால், இந்தியாவில் 1923லியே முதன் முதலில் பல் மருத்துவம் பட்டம் முடித்த முஸ்லிம் பெண்மணி பாத்திமா அலி ஜின்னா ஆவார்.

தற்போது இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் 1944ல் பட்டம் பெற்ற விமலா சூத் என்றே பரவலாக பதிவு செய்யப் படுகிறது.

ஆனால் உண்மையில் இருபது வருடங்களுக்கு முன்பாகவே இரண்டு பெண் மருத்துவர்கள் இந்தியாவில் பல் மருத்துவ படிப்பை முடித்திருந்தனர்.

பாத்திமா அலி ஜின்னா, 1923ல் டாக்டர் அஹ்மத் பல் மருத்துவ கல்லூரியில் பட்டம் பெற்று பம்பாயில் 1929 வரை தனியாக மருத்துவமனை வைத்து நடத்தி வந்தார். பாத்திமா அலி ஜின்னா பாகிஸ்தானின் மிக முக்கிய தலைவரான முகமது அலி ஜின்னாவின் தங்கையாவார்.



# மக்கள் நீதி மைய்யத்தின் தலைவர் கமலஹாசன் அவர்கள் பாரத பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதம்

மக்கள் நீதி மய்யம்

6 ஏப்ரல் 2020
சென்னை

வணக்கத்துக்குரிய பிரதமர் அவர்களுக்கு,

மிகவும் ஏமாற்றத்துடன் அதே நேரத்தில் ஒரு பொறுப்பான குடிமகனாக எனது இரண்டாவது கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

23, மார்ச் எனது முதல் கடிதத்தின் முக்கிய நோக்கமே, இந்த நாட்டையும் நாட்டின் பொருளாதாரத்தையும் கட்டமைக்கும் இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பு கொண்டாடப்படாமல் போவது போல அவர்களின் வாழ்வாதார இழப்பும் கண்டுகொள்ளப்படாமல் சென்றுவிடக்கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான்.

நான் கடிதம் எழுதியதற்கு அடுத்த நாள், மக்களிடம், "லாக்டவுன்" என்கின்ற மிகக்கடுமையான ஒரு புதிய அறிவிப்பு செய்யப்பட்டது.

லாக்டவுன் என்றால் என்ன என்று புரிவதற்கான அவகாசம் கூட கொடுக்கப்படாமல் "டீமானிடைசேசன்" போன்றே இந்த புதிய அறிவிப்பையும் நாடு கேள்விப்பட்டது.

அந்த அறிவிப்பை கேட்ட பிறகு, ஒரு நிமிடம் திகைப்பிற்குள்ளானாலும், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் என்கின்ற முறையில் நீங்கள் சொல்வது சரியானதாக இருக்கும் என்கின்ற நம்பிக்கையில், உங்களை நம்பலாம் என்கின்ற முடிவிற்கு வந்தேன்.

டீமானிடைசேசன் போதும் கூட நான் உங்களை நம்பலாம் என்று தான் முடிவெடுத்தேன்.
ஆனால் காலம் எனது முடிவு தவறென்று உணர்த்தியது.
உங்களது முடிவும் தவறு என்றே காலம் கட்டியம் கட்டி சொன்னது.

முதலாவதாக, இந்த பெரும் தேசத்தின், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதமர் நீங்கள் தான் என்று உங்களிடம் நான் உறுதியளிக்கின்றேன். உங்கள் நானாகிய, நானும் இப்பேரிடர் காலத்தில் உங்கள் வழிகாட்டுதலின் படி செல்வதற்கு தயாராக உள்ளேன்.

இன்றைய காலகட்டத்தில் உங்களுக்கு அமைந்தது போல ஒரு பெரும் கூட்டம் வேறெந்த நாட்டின் தலைவருக்கும் அமையவில்லை. நீங்கள் சொன்னாலே அக்கூட்டம் கேட்கின்றது.

இன்றைய சூழலில், இந்த தேசமே நம்பிக்கையுடன் எழுந்து நின்று பிரதமர் அலுவலகம் சொல்வதைக் கேட்பதற்கு தயாராக உள்ளது.

இந்த நாட்டிற்காக தன்னலமின்றி சேவை செய்து கொண்டிருக்கும் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கும், மருத்துவர்களுக்கும், நாம் நமது நன்றியினை கைதட்டல் மூலம் தெரிவிக்க வேண்டும் என்று நீங்கள் சொன்னவுடன் உங்கள் கருத்திற்கு எதிர்கருத்து கொண்டோர் கூட கைதட்டி உற்சாகமூட்டினர் என்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

உங்களுடைய ஆணைக்கும் விருப்பத்திற்கும் இணங்கி நடக்க நாங்கள் தயாராக உள்ளோம் என்பதை உங்களுக்கு அடிபணிகின்றோம் எனத் தாங்கள் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது.

என் மக்களின் தலைவனாக உங்களைக் கேள்வி கேட்பது எனது ஜனநாயகக் கடமையாகும். எனவே எனது கேள்விகளில் நெறிமுறைகள் ஏதும் இல்லாமலிருப்பதாக நீங்கள் கருதினால் தயை கூர்ந்து மன்னிப்பீராக.....

## மக்கள் நீதி மய்யம்

நான் மிகவும் அச்சப்படும் ஒரு விசயம் என்னவெனில், டீமானிடைசேசன் நேரத்தில் நடந்தது போன்ற ஒரு பெரும் தவறு இம்முறை, அதை விட மிகப்பெரிய அளவில் நடந்து கொண்டிருக்கின்றது என்பது தான்.

டீமனிடைசேசன் ஏழை, அடித்தட்டு மற்றும் நடுத்தர மக்களின் சேமிப்பையும் வாழ்வாதாரத்தையும் அடித்து பிடுங்கியது. ஆனால் சரியாக திட்டமிடப்படாத, இந்த லாக்டவுன் நம் அனைவரின் வாழ்வையும், வாழ்வாதாரத்தையும் ஆபத்தை நோக்கி செலுத்துகிறது.

ஏழைமக்களுக்கு உங்களைத் தவிர கேட்பதற்கு வேறு யாரும் இல்லை அய்யா.

ஒரு புறம் நீங்கள் செல்வந்தர்களை குடும்பத்தினருடன் இரவு நேர கேளிக்கைகளை காண அழைக்கின்றீர்கள், மறுபுறம் ஏழைகளை அவமானமாக உணரும் ஒரு சூழலில் தள்ளுகின்றீர்கள்.

உங்களுடைய உலகம் எண்ணெய் விளக்குகளை தங்கள் பால்கனிகளில் ஏந்திகொண்டிருக்கின்ற பொழுது, ஏழைகள் தங்கள் வீட்டில் உணவு செய்வதற்குக் கூட எண்ணெய் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இறுதியாக நடந்த மக்களுடனான உங்கள் இரண்டு உரையாடல்களும், மக்களை அமைதிப்படுத்தும் நோக்கத்தில் அமைந்தது. அது மக்களுக்கு மிகவும் தேவையான ஒன்றும் கூட, ஆனால் அமைதியாக இருப்பதை விட மக்களுக்கு மிக முக்கியமான தேவைகள் இருக்கின்றது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இது போன்ற மனநல யுக்திகள் வளர்ந்த நாடுகளில் வாழும் பெரும் செல்வந்தர்கள் தங்கள் பால்கனியில் வந்து நின்று கைதட்டி தங்களுக்கு இருக்கும் கவலைகளை மறப்பதற்கு வேண்டுமானால் பயன்படும். ஆனால் தாங்கள் வசிப்பதற்கு ஒரு சிறு ஓலைக்குடிசை கூட இல்லாத ஏழை எந்த பால்கனியில் வந்து கைதட்டி விளக்கேற்ற முடியும்?

தனது உழைப்பினாலும், வியர்வையினாலும், ரத்தத்தினாலும் இந்த நாட்டையும் நாட்டு மக்கள் அனைவரின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக ஒரு பெரும் அடித்தளமாக இருக்கும், அடித்தட்டு மக்களை ஒதுக்கிவைத்து, வெறும் பால்கனிவாழ் மக்களின் பால்கனி அரசாக தாங்கள் தங்கள் அரசை நிர்வகிக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

தினசரி செய்தித்தாள்களின் முதல் பக்கத்தில் வேண்டுமாயின் தினசரிக் கூலிகள் குறித்த செய்திகள் வராமல் இருக்கலாம். ஆனால் நம் அனைவரின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அவர்களின் பங்கு அளப்பரியது. இந்த நாட்டின் மிகப் பெரும்பான்மையினர் அவர்கள் தான். இந்த நாட்டில் மிகப்பெரும் பங்கும் அவர்களுடையது தான்.

அடித்தளத்தை அசைத்துப்பார்த்தால், மேல்தட்டு சிதறிவிடும் என்பது தான் வரலாறு நமக்கு உணர்த்தும் உண்மை. அறிவியலும் அதை ஒத்துக் கொள்ளும்.

மேல்தட்டில் இருப்பவர்கள் அடித்தட்டில் இருப்பவர்கள் மீது திணித்த முதல் தொற்று நோயும், நெருக்கடியும் இதுதான்.

அய்யா, அதிலும் மிக முக்கியமாக தாங்கள் அடித்தட்டு மக்களை காப்பாற்றுவதை தவிர்த்து, மற்ற அனைத்து விசயங்களிலும் கவனம் செலுத்துவது போலவே இருக்கின்றது.

கோடிக்கணக்கான தினக்கூலிகள், வீட்டு வேலை செய்பவர்கள், டாக்சி டிரைவர்கள், மிதி வண்டி ஓட்டுநர்கள், சாலையோர சிறு கடை வைத்திருப்பவர்கள் என அனைவரும், எதேனும் ஒரு சிறு வெளிச்சமாவது தங்கள் வாழ்வில் கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருக்கையில் நன்கு கட்டமைக்கப்பட்டிருக்கும் மேல்தட்டு நடுத்தட்டு மக்களின் கோட்டைகளை காப்பாற்றுவதை மட்டும் நமது குறிக்கோளாய் வைத்திருக்கின்றோம்.

நடுத்தர மக்களையோ அல்லது மேல்தட்டு மக்களையோ ஒதுக்கிவைத்துவிட வேண்டும் என்று என்னை தவறாக புரிந்து கொள்ளவேண்டாம்.

## மக்கள் நீதி மய்யம்

நான் உங்களை கேட்டுக்கொள்வது எல்லாம் சமூகத்தில் எவரையும் ஒதுக்கிவைக்காமல் அனைவருக்கும் சமமமாக நடத்தவேண்டும் என்பது தான்.

என்னைப் பொறுத்தவரை "எந்த ஒரு மனிதனும் பசியுடன் உறங்கச் செல்லக்கூடாது" என்பது தான். அதை தான் நீங்கள் செய்திட வேண்டும் என நான் உங்களிடமும் பரிந்துரை செய்கின்றேன்.

கோவிட் 19 தொடந்து பல பேரை தொற்றிப்பரவும் என்றாலும், நாம் பசி, சோர்வு, இழப்பு எனும் பெரும் பிணிகளை பெற்றெடுக்கும் கருவறையை உருவாக்கிக்கொண்டிருக்கின்றோம்.

பசி, சோர்வு, இழப்பு (Hunger(H), Exhaustion(E) and Deprivation(D) என்பதைச் சுருக்கி HED '20 எனும் பிணி இன்று பார்ப்பதற்கு சிறிதாக தெரிந்தாலும் கோவிட்19 விட மிகக்கொடிய உயிர்கொல்லியாக இருக்கும். கோவிட்-19 நம்மிடம் இருந்து மறைந்த பின்னரும் இந்த HED'20 எனும் பிணி நம்மிடம் இருக்கும்.

சரிவுகளை சரி செய்வதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கின்றது என்று புரிந்துகொள்வதை விட்டு, தாங்கள் எப்பொழுதும் கையிலெடுக்கும் தேர்தல் நேரத்து பிரச்சார யுக்திகளிலேயே இருக்க விரும்புவதை நாம் காண்கின்றோம்.

பொறுப்புள்ள நடவடிக்கைகளை மக்கள் கையிலும், வெளிப்படைத்தன்மையை மாநில அரசுகளின் கைகளிலும் கொடுத்துவிட்டு நீங்கள் உங்களுக்கு வசதியான ஒரு நிலையில் இருந்து கொள்கிறீர்கள்.

இந்திய நாட்டிற்காக அல்லும் பகலும் அயராமல் தங்கள் நேரத்தையும் அறிவையும் பயன்படுத்தும் பல்வேறு அறிவாளிகளுக்கு தாங்கள் இதையே உணர்த்துகிறீர்கள்.

அறிவாளிகள் என்று சொல்லியது உங்களை புண்படுத்தியிருந்தால் மன்னிக்கவும், ஏனெனில் தங்களுக்கும் தங்கள் அரசுக்கும் அது பிடிக்காத வார்த்தை என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் பெரியாரையும் காந்தியையும் பின் தொடர்பவன் அவர்கள் அறிவாளிகள் என்பதும் எனக்குத் தெரியும்.

"நீதியையும்" "சம நிலையையும்" "வளர்ச்சியையும்" நோக்கி நம் அனைவரையும் வழிகாட்டுவது அறிவு மட்டுமே.

பிரச்சார யுக்திகளின் மூலமாக மக்களை உற்சாகத்தில் மட்டுமே வைத்திருக்க முயலும் உங்கள் நிறுவனத்தின் கவனமும் நோக்கமும், மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்காக செய்யவேண்டிய விசயங்களில் கவனம் செலுத்தமால் புறந்தள்ளுகிறது.

இது போன்ற ஒரு தொற்று நோய் பரவி இருக்கின்ற காலத்தில், நாட்டின் சட்டம் ஒழுங்கு பிரச்சனை முதன்மையாக இருக்க வேண்டிய ஒரு நேரத்தில், நாடு முழுதும் பல்வேறு இடங்களில் பல்வேறு மதரீதியான கூட்டங்களை தடுத்திருக்கவேண்டிய உங்கள் அரசு செய்யவில்லை. இது போன்ற இடங்களே சமூக தொற்றுகளை அதிகம் பரவச் செய்தது. இது போன்ற அலட்சிய போக்கினால் ஏற்பட்ட உயிர்பாதிப்புகளுக்கு யார் பொறுப்பேற்பது?

உலக சுகாதார அமைப்பிற்கு சீன அரசு , டிசம்பர் 8 ம் தேதி தான் கொரோனா பாதித்த முதல் நோயாளி குறித்தத் தகவலைத் தெரிவித்தது. கொரோனாவின் தீவிரத்தையும் வீரியத்தையும் மக்களும் அரசாங்கங்களும் புரிந்து கொள்ள ஓரளவு காலம் தேவைப்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டாலும், பிப்ரவரி முதல் வாரத்திலேயே , இந்தக் கொரோனா, உலகம் இது வரைக் கண்டிராத அளவு சேதம் விளைவிக்கப் போகும் அபாயத்தை உணர்ந்தது.

ஜனவரி 30 , இந்தியா , தனது முதல் கொரோனா நோயாளி குறித்த விவரங்களை வெளியிட்டது.

இத்தாலியில் என்ன நடந்தது என்பதைக் கண் கூடாகப் பார்த்த பின்பும், நாம் பாடம் கற்கவில்லை. திடீரென அறியாமை உறக்கத்திலிருந்து கண் விழித்த போது, நிலைமையின் தீவிரம் உணர்ந்து, நான்கே மணி நேர கால அவகாசம் கொடுத்து, 1.4 பில்லியன் மக்களைக் கொண்ட ஒரு தேசத்தை முடக்கினோம்.

# மக்கள் நீதி மய்யம்

நான்கு மாதங்கள் யோசிக்கவும் செயல்படவும் இருந்த போதிலும் , அந்த நான்கு மாதங்களைக் கடந்து, திடீரென தீவிரம் புரிந்து, 1.4 பில்லியன் மக்களுக்கு 4 மணி நேரம் மட்டுமே கால அவகாசம் கொடுத்து, லாக்டவுன் அறிவிக்கப்பட்டது .

பிரச்சனைகள் தீவிரம் அடையும் முன்பே தீர்வுகளைத் தயார் நிலையில் வைப்பவர்கள் தான் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர்கள். மன்னிக்கவும் ஆனால் இந்த முறை உங்கள் தொலைநோக்குத் தோற்று விட்டது.

மக்களிடமிருந்து வரும் ஆக்கப்பூர்வமான எதிர்மறை விமர்சனங்களைக் கையாள்வதிலும், அத்தகைய விமர்சனங்களுக்கு பதில் விமர்சனம் அளிப்பதிலும் உங்கள் அரசும், அரசு அதிகாரிகளும் செலவிட்ட நேரத்தையும், பலத்தையும் சற்று திசை திருப்பி ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் செலவழித்திருக்கலாம்.

தேசத்தின் நலனை முன்னிறுத்தி, சில நல்உள்ளங்களின் தன்னலமற்றக் குரல்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றை செவிமடுக்காமல், அக்குரல்களை மாற்றுக் குரல்களாலும் , நையாண்டிகளாலும் புதைத்து, அக்குரல்களுக்கு சொந்தமானவர்களை தேசத்திற்கு எதிரானவர்கள் என்று முத்திரைக் குத்தும் பணியில் அயராது ஈடுபட்டுவருகின்றனர் உங்கள் சேனைப் படையினர்.

தைரியம் இருந்தால் என்னை இந்த தேசத்திற்கு எதிரானவன் என்று வேண்டுமானால் அழைத்துப் பாருங்கள்!!

இவ்வளவு பெரிய / தீவிரமான ஒரு தேசிய இக்கட்டிற்கு சரியான முறையில் தயாராகவில்லை என்று மக்களை குறை சொல்ல முடியாது.

ஆனால் உங்களை குறை சொல்லலாம் ; சொல்லுவோம் .

மக்களின் அடிப்படை வாழ்வையும் வாழ்வாதாரத்தையும், ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்துக் கொள்வதற்காகத் தானே இந்த அரசும், அரசு அதிகாரிகளும்.....?

இது போன்ற பேரிடர்கள் இரண்டு காரணங்களுக்காக வரலாற்றின் பக்கங்களில் பதிவிடப்படுகின்றன,

ஒன்று : இதன் விளைவால் ஏற்படும் உயிர் சேதமும், நோயின் வலிகளும். இரண்டாவது, இதன் தாக்கம் ஏற்படுத்தும் சமூக - கலாச்சார மாற்றங்கள் மக்களுக்குக் கற்றுத் தரும் பாடம்.நீண்ட காலத்திற்கு மக்களிடையே மிகப்பெரும் பாதிப்பேற்படுத்தக் கூடிய இந்த கரோனா, நம்மைத்தீண்டியது எனக்கு மிகவும் கவலையளிக்கிறது.

இது வரை இது போன்று இயற்கை நம்மிடம் சீறியதில்லை.
உண்மையான அக்கறையுடன் இருக்கும் குரல்களை கேட்க வேண்டிய காலமிது. அனைத்து பிரிவினைக் கோடுகளையும் அழித்து, சங்கநாதமிட்டு அனைவரையும் உங்கள் பக்கத்தில் வைத்திருந்து உதவிகளை பெறவேண்டிய நேரமிது.


மக்கள் பலமே நாட்டின் பலம், எத்தனையோ பேரிடர்களை எதிர் கொண்டு, அவற்றை ஒன்றாகக் கடந்துள்ளோம், இதையும் கடப்போம் ஒன்றாக.... சிதறிப்பிரிந்தல்ல.......

இப்பேரிடர் நம் அனைவரையும் இணைக்கவேண்டுமே தவிர எந்தப்பக்கத்தில் யார் பிரிந்து நிற்கவேண்டும் என்பதை தேர்ந்தெடுப்பதற்கான நேரமல்ல.

நாங்கள் கடுங்கோபத்தில் இருக்கின்றோம், இருந்தாலும் உங்களுடன் இருக்கின்றோம்.

**ஜெய்ஹிந்த்**

**கமல் ஹாசன்**
**தலைவர்**
**மக்கள் நீதி மய்யம்.**



# மனித நீதிப் பாசறையும் கலைஞரும்

வேகமாக தமிழகத்தில் வளர்ந்து கொண்டிருந்த ஒரு போராளிகளின் பாசறை மனித நீதி பாசறை. இந்தப் பாசறையை ஒழிக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டு செயல் பட்டார்கள் உளவுதுறையினர்.

பல பொய்களையும் புணைந்துரைகளையும் பத்திரிகைகளுக்குத் தந்து கொண்டே இருந்தார்கள்.

அது மட்டுமல்ல பல கட்டுரைகளை ஆங்கில நாளிதழ்கள், தமிழ் நாளிதழ்கள், வார பத்திரிகைகள், வாரம் இருமுறை பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் இவற்றில் இடம் பெறச் செய்தார்கள்.

அதாவது சில கட்டுரைகளை காவல் துறையே தயார் செய்து பத்திரிகைகளில் இடம் பெறச் செய்தார்கள்.

இதனை நான் அப்போது POLICE JOURNALISM - காவல் துறையின் இதழியல் என அழைத்தேன். மனித நீதிப் பாசறையைத் தொடங்கி அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த எனக்கு பெரிய நெருக்கடிகளைத் தந்தார்கள். அவற்றையெல்லாம் எதிர் கொண்டு வென்று வந்தோம்.

இடைவிடாமல் பத்திரிகைகளில் வந்து கொண்டிருந்த தவறான செய்திகளுக்கு விளக்கம், மான நஷ்ட வழக்கு என எங்கள் போர் பயணத்தை தொடர்ந்து கொண்டிருந்தோம்.

## மான நஷ்ட வழக்கு

இந்த வகையில் தினமலருக்கு எதிராக ஒரு வழக்கை நடத்தி ஒரு இலட்ச ரூபாய் நஷ்ட ஈடுக்கான தீர்ப்பை பெற்றோம். (சுற்றியிருந்த துரோகிகள் அந்த பணத்தைப் பெற முடியாமல் தீர்ப்பைத் திருடி சென்று விட்டார்கள். அதனால் அந்தப் பணத்தை இன்றளவும் வாங்கிட இயலவில்லை.)

## அதிர்ச்சியில் ஒரு செய்தி

ஆனால் திடுதிப்பென 2006 ஜூலை திங்கள் 22 ஆம் நாள் ஒரு பெரும் செய்தியை அனைத்து ஊடகங்களும் "Flash News" உடனடி செய்தியாக வெளியிட்டன. இதில் NDTV (என்.டி.டி.வி) மிக முக்கியமான பங்கு வகித்தது. அந்த செய்தி மனித நீதி பாசறையைச் சார்ந்தவர்கள் ஐந்து பேர் கைது. இவர்கள் கோவை மாவட்டத்தின் முக்கிய எட்டு இடங்களில் குண்டு வைத்திட சதித்திட்டம் தீட்டி நிறைவேற்றிட இருந்தவர்கள் என்பதாகும்.

இந்தச் செய்தியைப் பார்த்த மனித நீதிப் பாசறையைச் சார்ந்தவர்கள் என்னிடம் சொன்னார்கள். நான் உடனே NDTV - அலுவலகத்தைத் தொடர்பு கொண்டேன்.

இதற்கு NDTV - இன் சாம் டேனியல் (இவர் சென்னை செய்தி பீரோ வின் தலைவர்). கோவை உளவுதுறை நடத்திய பிரஸ் மீட்டில் தான் இதைச் சொன்னார்கள் என்றார்.

நான் "செய்தி உண்மையல்ல நிறுத்துங்கள்" என்றேன். உளவுதுறை எங்கேயும் பிரஸ் மீட் பத்திரிகையாளர்கள் சந்திப்பை நடத்த மாட்டார்கள். அதற்கு சட்டத்தில் இடமில்லை.

அவர் சாம் டேனியல் "இதைச் சொல்ல நீங்கள் யார்?" எனக் கேட்டார்.

"நான் தான் மனித நீதி பாசறையின் தலைவர்" என்றேன். "அப்படியானால் நான் உங்களை நேரில் சந்திக்க வேண்டும் என்றார். நேரில் வந்தார். அது ஒரு பேட்டி.

## NDTV பேட்டி

அதில் கோவை காவல் துறையில் கொட்டை போட்டு காவல் துறையிலிருந்து கொண்டே கோவையில் ஒரு பெரும் தொழிலதிபராகவும், உளவுதுறை அதிகாரியாகவும் கோலோச்சும் ரத்தினசபாபதிக்கும், மனித நீதி பாசறைக்கும் உள்ள பகையை தெளிவுப்படுத்தினேன்.

அந்தப் பகை கோவை உளவுத்துறையில் மட்டுமல்லாமல் காவல் துறையிலேயே ஒரு சர்வதிகாரியாக ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் இரத்தின சபாபதி மீது மனித நீதி பாசறை பதிவு செய்த மனித உரிமை மீறல் புகார். இந்தப் புகாரின் மீது மனித உரிமைகள் ஆணையம் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. அவரது கொட்டம் ஆட்டம் கண்டது. உடனேயே அவர் மனித நீதி பாசறையை ஒரு தீவிரவாத அமைப்பாகக் காட்டிட முயற்சிகளை மேற்கொண்டார். அதன் விளைவே கோவையில் நடக்கும் வெடிகுண்டு நாடகம். அவரே முன் நின்று சில வெடிக்காத குண்டுகளை மனித நீதி பாசறையின் உறுப்பினர்களிடமிருந்து கைப் பற்றியதாகப் பொய் சொன்னார். எனது பேட்டியை NDTV ஏழு முறை ஒளிப்பரப்பியது.

## கலைஞருடன் சந்திப்பு

ஊடகங்கள் அனைத்தும், தினப் பத்திரிகைகள் அனைத்தும், வெறும் வாய்க்கு அவல் கிடைத்த கதையாக பலப்பல கட்டுக் கதைகளை கட்ட விழ்த்து விட்டன. இந்நிலையில் தாம் நாம் முதல்வர் கலைஞர் அவர்களை சந்தித்து உண்மையை எடுத்துரைத்திடுவது என முடிவு செய்தோம்.

உடனேயே தி.மு.க. அலுவலகச் செயலாளர் T.K.S இளங்கோவன் வழியாக நேரம் வாங்கினார்கள் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள். உண்மையை உரக்கச்சொன்னோம். ஒரு பத்திரிகையாளர் சந்திப்பையும் நடத்தினோம்.

## சுவரொட்டி

இதனிடையே தமிழகமெங்கும் சுவரொட்டிகளை ஒட்டி "மனித நீதி பாசறையின் மீது வீண் பழி போடும், கோவை காவல்துறையின் மீது தமிழக அரசே நடவடிக்கை எடு."

எனக் கோரினோம். எங்கள் சந்திப்பிற்கு பின் தன் சொந்த முயற்சியில் உண்மையைக் கண்டறிந்த கலைஞர் அவர்கள் இரத்தினசபாபதியை இட மாற்றமும், பணிமாற்றமும் செய்தார்கள்.

கோவை காவல்துறை ஆணையர் அவர்களை எந்த பணியையும் தராமல் விடுப்பில் விட்டு விட்டார். நெடியதொரு காலம் அவர் Compulsory Leave - கட்டாய விடுமுறையில் இருந்தார்.

## நீதியின் பக்கம் கலைஞர்

கலைஞர் அன்று நீதியின் பக்கம் நிற்கவில்லை என்றால் எல்லோரும் தூற்றுகின்ற ஓர் இயக்கமாக மனித நீதி பாசறை ஆகியிருக்கும். இதனை இன்றளவும் நன்றியுடன் நினைவு கூறுகிறோம்.

அப்போதும் நாங்கள் கலைஞர் அரசுக்கு நன்றி சொல்லி சுவரொட்டிகளைப் போட்டோம். கலைஞரை மீண்டும் நேரில் சந்தித்து நன்றி சொல்லிட விழைந்தோம். நேரம் வாங்கிடும் பொறுப்பை மீண்டும் போராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்களிடம் ஒப்படைத்தோம்.

போரா. இல்யாஸ் ரியாஜி அவர்கள் தி.மு.க தலைமைகழகச்செயலாளர் T.K.S. இளங்கோவன் அவர்களிடம் பேசினார். அவர்கள் டெல்லியில் தமிழ்நாடு ஹவுஸ் - தமிழ்நாடு இல்லாத்தில் முழுமையாக உங்களைப் பற்றித்தான் பேச்சு நடை பெறுகின்றது.

இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸில் இன்றைய தினம் முகப்புக் கட்டுரையே உங்களைப் பற்றியதும், உங்கள் அறிவகத்தைப் பற்றியதும் தான் எனக் கூறினார்கள்.

அதன் பிறகு டெல்லி இந்தியன் எக்ஸ்பிரஸுடன் ஒரு நீண்ட சண்டை நடந்தது. இறுதியில் இந்தியன் எக்ஸ்பிரஸ் மன்னிப்புக் கேட்டது. ஆனால் இப்போதும் கலைஞர் நேரம் தந்தார். நாங்கள் கலைஞருக்கு அதாவது அன்றைய தமிழக அரசுக்கு நன்றி சொல்லும் சுவரொட்டியுடன் சென்றோம். T.K.S. அவர்கள் இதனை கலைஞர் ஏற்கனவே பார்த்துவிட்டாரம். உங்கள் நன்றிக்கு நன்றி எனக் கூறி தேனீர் தந்து அனுப்பி வைத்தார்.

- மு.குலாம் முஹம்மது



# கவிக்கோவிற்கு துஆச் செய்வோம்

தாருல் இஸ்லாமுக்கும் மறைந்த கவிஞர் கவிக்கோ அப்துர்ரஹ்மான் அவர்களுக்கும் ஒரு இறுக்கமான பிணைப்புண்டு. குறிப்பாக குலாம் அண்ணன் அவர்களுடனும் இல்யாஸ்ரியாஜி அவர்களுடனும். .

இவர்கள் அடிக்கடி கவிக்கோவை சென்று சந்திப்பது வழக்கம். நானும் அவர்களுடன் உடன் செல்வது வழக்கம்.

நிறைகுடம் தளும்பாது என்பதற்கு ஓர் உதாரணம் அவர். பல நேரங்களில் அவர் குலாம் அண்ணன் அவர்களை பேசவிட்டு கேட்டுக்கொண்டிருப்பார். கலைஞர் கருணாநிதி அவர்களே பாராட்டிய கவிஞர் என்றோ தனது தமிழ் புலமை குறித்தோ கர்வம் கொண்டு பேசியதை நான் கண்டதில்லை. சமூக அக்கறை அதிகம் கொண்டவர். இதை அவருடன் நெருங்கி பழகியவர்கள் அறிவர்.

குலாம் அண்ணன் அவர்கள் உருவாக்கி நடத்திய விடியல் வெள்ளி பத்திரிகையை விட்டு விலகிய போது உங்கள் எழுத்துக்கள் இனி எங்களுக்கு கிடையாதா? என கேட்டு ஆர்வமூட்டியவர். அதனை தொடர்ந்தே குலாம் அண்ணன் அவர்கள் வைகறை வெளிச்சம் பத்திரிகையை உருவாக்கி நடத்தி வருகிறார்கள். சிலர் செய்த தவறின் காரணமாக பலருக்கு கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போக்கூடாது என்பதற்காக இந்த பத்திரிகையை உருவாக்கினார்கள். அதற்கான தூண்டு கோல் கவிக்கோ என்றால் மிகையல்ல. தவறாமல் அனைத்து இதழ்களையும் படித்து கருத்து சொல்லிவிடுவார்.

குலாம் அண்ணன் அவர்களின் நெருக்கடி யான கால கட்டத்தில் பலர் குலாம் அண்ணன் அவர்களுக்கு சலாம் சொன்னாலே எங்கே காவல்துறை நம்மையும் குறிவைத்துவிடுமோ என்று பயந்து ஓடி ஒளிந்து கொண்ட சந்தர்ப் பத்தில், புத்தக கண்காட்சியில் குலாம் அண்ணன் அவர்களின் தோளில் கைகளை போட்டு குலாம் ஸாப், என்ன ஏதாவது சிக்கலா? ஏதும் உதவ வேண்டுமா என்று கேட்டு நம்மை நெகிழ வைத்தவர்.

குலாம் முஹம்மது அவர்களுக்கு இலக்கிய சுடர் என்ற பட்டத்தை தந்து மகிழ்ந்தவர்.

மாதம் ஒரு முறை வந்து போக மாட்டீர்களா என உரிமையுடன் கேட்பார். புது புத்தகங்கள் வெளியிடும் போதெல்லாம் அவரை சென்று சந்தித்து அதனை தந்து வந்தோம். இந்த முறை நோன்பு மாதம் என்பதால் நோன்பு முடிந்த வுடன் சென்று பார்க்கலாம் என்று இருந்தோம். அதற்குள் இறைவன் அவரை அவன்பால் அழைத்து கொண்டான். இன்னா லில்லாஹி.

கடைசியாக ஜனவரி, 15 2017ல் சென்று சந்தித்து விட்டு வந்தோம். அப்போதும் ஒரு குழந்தையை போல சிறு கர்வம் கூட இல்லாமல்

பேசிக் கொண்டு இருந்தார். குலாம் அண்ணன் அவர்கள் Samuel Huntington எழுதிய Clash of Civilisation (சாமுவேல் ஹன்டிங்டன் எழுதிய கலாச்சாராங்களின் மோதல்) என்ற புத்தகத்தை பற்றியும் மேற்கத்தைய கலாச்சாரம் எப்படி நம் மீது தாக்குதல் தொடுக்கிறது என்பதை பற்றியும் 2025-ல் உலகில் முஸ்லிம் இளைஞர்களே அதிகமாக இருப்பார்கள் என ஹன்டிங்டன் கணக்கிட்டு எனவே அவர்களை எப்படியாவது அழித்து குறிப்பாக குழந்தைகளை அழித்து அவர்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்த வேண்டும் என்று எழுதி வைத்துள்ளான். மேற்கத்திய நாடுகளும் அதன் படியே



நேரிடையாகவோ அல்லது முஸ்லிம்களுக்குள் பிரிவினையை உண்டு பண்ணியோ முஸ்லிம் களை அழித்து வருகின்றன. குறிப்பாக இளைய தலைமுறையை அழித்து வருகிறது.

முஸ்லிம்களுக்குள் சண்டையை உருவாக்கி இரண்டு குழுக்களுக்கும் ஆயுதம் கிடைக்குமாறு பார்த்து கொள்கின்றன. சிரியா. ஈராக், பலஸ்தீன் போன்ற நாடுகளில் முஸ்லிம் குழந்தைகள் குறி வைத்து கொல்லப்படுவதற்கு இதுவே காரணம் என கூறிக்கொண்டிருந்ததை கேட்டுவிட்டு அப்படியா நேரிடையாக இப்படியே எழுதியுள் ளானா, உண்மையாகவா என ஆச்சரியப்பட்டு கேட்டு விட்டு இது போன்ற விஷயங்களை எப்பாடுபட்டாவது புத்தகமாக கொண்டு வந்து விடுங்கள் அப்போது தான் அது எங்களை வந்தடையும் என கேட்டுக்கொண்டார்.

போகும் போதெல்லாம் இல்யாஸ் ரியாஜி அவர்களை குர்ஆன் தப்ஸீர் எழுத கேட்டுக் கொண்டே இருந்தார். அந்த புத்தகங்கள் எல்லாம் வருவதற்குள் அவர் ஓர் இலக்கியமாகிப்போனார்.

விழுந்தாலும் விதைபோல் வீழ்வேன் என்ற வைர வரிகளைக் கூறி அண்ணாவின் மனதிலும் கலைஞர் கருணாநிதி மனதிலும் இடம் பிடித்தவர். அவரின் வார்த்தைகளைப்போலவே விதையாகத்தான் வீழ்ந்துள்ளார்.

கவிக்கோ எங்களது பலம். எம் வலிமையாக இருந்த கவிக்கோ அவர்களின் இழப்பை தாங்கும் உள்ளத்தை வல்லோன் அல்லாஹ் எங்களுக்கு தருவானாக..

- ஆக்கம் அபூ அஃப்ரஹ்

# பயங்கரவாதிகளின் கைகளில் கோவை!

## மெத்தனத்தில் போலீசார்!

### தொடர் சம்பவங்கள்

சிஏஏக்கு ஆதரவான போராட்டம் என்ற பெயரில் இந்துத்துவா அமைப்புகள் காந்திபுரத்தில் பஸ் ஸ்டேண்டிற்கு எதிராக போராட்டத்திற்கான பந்தலை *02.03.2020* அன்று அமைத்தனர். அந்த வழியாக சென்ற எம்.டி.எஸ் (முஸ்லிம்களின்) ஆட்டோக்களை குறிவைத்து தாக்கினர். *03.03.2020* அன்று இரவு இந்து முண்ணணியின் மாவட்ட செயலாளர் ஆனந்த் நஞ்சுண்டாபுரத்தில் தாக்கப்பட்டார்.

*04.03.2020* அன்று இந்துத்துவா அமைப்புகள் ஆனந்த் தாக்கப்பட்டதை கண்டித்து கடை யடைப்பு நடத்தினர். அப்போது வன்முறையில் இறங்கிய இந்துத்துவா அமைப்பினர் ரயில்வே ஸ்டேஷன் வாசலில் நின்றிருந்த ஆட்டோக் களையும், ஆட்டோ ஓட்டுநர்களையும் அதே போல் ஜி.ஹெச். வாசலில் நின்று பாசஞ்சர்களை ஏற்றிக் கொண்டிருந்த ஆட்டோக்களையும் ஆட்டோ ஓட்டுநர்களையும் குறிவைத்து தாக்கினர். இரவு கணபதி வேதாம்பாள் நகரிலுள்ள பள்ளிவாசல் மீது பெட்ரோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தினர். இவ்வளவு நடந்தும் முஸ்லிம்கள் அமைதி காத்தனர். எந்த எதிர் தாக்குதலிலும் ஈடுபடவில்லை.

*07.03.2020* முஸ்லிம்களும் பள்ளிவாசலும் தொடர்ந்து தாக்குதலுக்குண்டானதை கண்டித்து முஸ்லிம்கள் கடையடைப்பு அறிவித்தனர். இதைக்கண்ட இந்துத்துவா அமைப்பினர் அதே தினத்தன்று கடையடைப்பை அறிவித்தனர். இவர்களின் கலவரம் உண்டாக்க வேண்டும் என்ற சதியை அறிந்த முஸ்லிம்கள் தங்களின் அறிவிப்பைவாபஸ்பெற்றனர். இந்துத்துவாவினர் ஏமாற்றம் மற்றும் ஆத்திரமடைந்தனர்.

*09.03.2020* அன்று மதியம் *12:30* மணி யளவில் காட்டுரிலுள்ள இந்து முண்ணணி அலுவலகம் தாக்குதலுக்குள்ளானது. *3:15* மணி யளவில் அதே பகுதியிலுள்ள டயர் கடை நடத்தி வரும் முகமது இக்பால் மற்றும் அவரது நண்பர் ஷாஜஹான் இருவரையும் 7 பேர் கொண்ட இந்துத்துவா கும்பல் கூர்மையான ஆயுதங்களால் (ஓம்காளி ஜெய்காளி என்று கூறி) கடுமையாக தாக்கினர். பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

*10.03.2020* அனைத்து முஸ்லிம் ஜமாத் கூட்டமைப்பினர் காவல் ஆணையரை சந்தித்து தொடர்ச்சியாக முஸ்லிம்கள் தாக்குதலுக் குள்ளாவதையும் முஸ்லிம்களின் ஆட்டோக்கள் தாக்கப்படுவதையும் தடுத்து அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்றும் மனு அளித்தனர்.

### போலீசாரின் அலட்சியப் போக்கு

*11.03.2020* அன்று மாலை சுந்தராபுரம் சூரி தன்னுடைய கடையில் வைத்து தாக்கப் பட்டது சந்தேகத்தை கிளப்பியுள்ளது. ஏடிஎம் கொள்ளை, திருட்டு போன்றவற்றை சிசிடிவி உதவியுடன் கண்டுபிடித்து விடுவர் போலீசார். ஒரு முறை ஹெல்மெட் திருடியதை கூட சிசிடிவியை வைத்து கண்டுபிடித்த போலீசார் மேற்சொன்ன எந்த சம்பவத்தையும் சிசிடிவியின் உதவியால் குற்றவாளிகளை கைது செய்ய வில்லை. வெறுமனே விசாரணை நடத்தி ஒவ்வோர் சம்பவத்திற்கும் ஓரிரு குற்றவாளிகளை பேரளவிற்கு கைது செய்தனர்.

மாபெரும் கலவரத்தை நடத்தியே தீர வேண்டும் என்ற திட்டத்தோடு அலைந்து கொண்டிருக்கும் இந்துத்துவாவினருக்கு போலீ சாரும் மறைமுகமாக உதவி செய்கின்றனரோ என்ற சந்தேகம் முஸ்லிம்களுக்கு எழுந்தது. அதனை ஊர்ஜிதப்படுத்தும் முகமாக 13.03.2020 அன்று மாலை ஒரு தெரு முனை கூட்டத்தில் பேசிய இந்து முண்ணணி மாநில தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் ஏப்ரல் 5ம் தேதி ஒரு லட்சம் பேர் கொண்ட பேரணி உக்கடத் திலிருந்து துவங்கும். இது 1998 கலவரத்தைப் போலல்லாமல் வேறு வகையில் நடக்கும். காவல்துறையால் கட்டுப்படுத்த முடியாது என்று கூறியதை கேட்டும் காவல்துறை அவனை கைது செய்யவில்லை. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை காவல்துறை.

15.03.2020 அன்று இரவு நஞ்சுண்டாபுரம் - போத்தனூர் சாலை சந்திப்பு ராமநாதபுர சிக்னலில் ஒரு குவாலிஸ் காரில் 6பேர் கொண்ட கும்பல் ஆயுதங்களுடன் பிடிபட்டனர். அவர்கள் எதற்காக வந்தனர், என்ன சதிச் செயலை செய்ய வந்தனர் என்ற செய்தியை இன்று வரை போலீசார் வெளியிடவேயில்லை. அதே பகுதியில் வைத்து தான் ஆனந்த் தாக்கப்பட்டதை இங்கு நினைவு கூற விரும்புகிறோம். ஆக ஒரு பெரும் கலவரத்தை நடத்தியே தீர வேண்டும் என்று காடேஸ்வரா மற்றும் இந்துத்துவ அமைப் பினரின் திட்டத்தை நோக்கி நகர ஆரம்பித்தனர். அதற்காக குறிச்சி காந்திநகரில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் 22.03.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று பயிற்சியும் எடுத்தனர். (ஆதாரம்: தினத்தந்தி 23.03.2020)

## மாபெரும் சூழ்ச்சிக்காரன்

“அவர்களும் சூழ்ச்சி செய்தனர். இறைவனும் சூழ்ச்சி செய்தான். இறைவன் சூழ்ச்சிக்காரனுக் கெல்லாம் சூழ்ச்சிக்காரன்” என்ற குர்ஆனின் வசனத்திற்கேற்ப அல்லாஹ்வின் சூழ்ச்சியால் லாக்டவுன் ஆரம்பமானது. முஸ்லிம்கள் தற்காலிகமாக தப்பித்தனர் இந்துத்துவாவினரின் தொடர் சதித் தாக்குதல்களிலிருந்து இதில் ரமளான் மாதமும் உள்ளடக்கம். எந்த பிரச்னைகளுமின்றி ரமளான் நிம்மதியாக இறைவணக்கத்தில் கழிந்தது எனலாம்.

## மீண்டும் தொடங்கிய தாக்குதல்கள்

ஆனால் இந்துத்துவாவினர் விடுவதா யில்லை. அவர்கள் போட்ட திட்டங்கள் எல்லாம் அப்படியே நிலுவையிலிருந்தது. லாக்டவுன் முடிந்ததும் மறுபடியும் ஆரம்பித்தன ருசி கண்ட பூனைகள். 07.05.2020 பெரியநாயக்கன் பாளையத்திலுள்ள பள்ளிவாசல் கல் வீசி தாக்கப் பட்டது. போலீசார் வழக்கம் போல எந்தப் பிண்ணணியையும் ஆராயாமல் அதே பகுதியை சேர்ந்த மனோஜ் என்பவன் குடிபோதையில் கல்லை வீசினானாம்! அவனை கைது செய்து விட்டோம் என்றனர் காவல்துறையினர்.

## போலீசாரின் மருத்துவ சான்றிதழ்

29.05.2020 அன்று காலை வைசியாள் வீதியிலுள்ள வேணுகோபால கிருஷ்ணசாமி கோவிலிலும் அதன் அருகேயுள்ள ராகவேந்திரா கோவிலிலும் பன்றி கறியை வீசி விட்டு சென்ற ஆசாமி ஹரி பிடிபட்டான். இவன் பிடிபட்ட



பன்றி கறியை வீசிய ஹரி

வுடன் இறைச்சியை வீசிய இன்ஜினியர் கைது என்று தலைப்பிட்டன பத்திரிக்கைகள். இதே ஒரு முஸ்லிம் செய்திருந்தால் தீவிரவாதி, தேச விரோதி, பயங்கரவாதி என்று தலைப்பிடுவர். இது தான் ஊடக தர்மமாம்! அவன் மனநோயாளி என்று போலீசாரே மருத்துவ சான்றிதழ் தந்து வழக்கை முடிக்கப் பார்க்கின்றனர். மிகத் தெளிவாக இரு சக்கர வாகனத்தில் வந்து இரண்டு கோவில்களை தேர்வு செய்து அதில் இறைச்சியை வீசியவன் மனநோயாளியாம். கோவை போலீசாரிடத்தில் மகாத்மா காந்தி கொலை வழக்கு கொடுக்கப்பட்டிருந்தால் “கோட்சே துப்பாக்கிப் பயிற்சி செய்து கொண்டிருக்கும் போது காந்தி குறுக்கே வந்து

விட்டார்" என்று சர்வ சாதாரணமாக வழக்கை முடித்திருப்பார்கள்.

## தாக்குதலுக்குள்ளான மதரஸா

*02.06.2020* அன்று இரவு *8* மணியளவில் மைல்கல் அறிவொளி நகரிலுள்ள மதரஸா தாக்குதலுக்குள்ளானது. உள்ளே நுழைந்த அயோக்கியர்கள் அங்கிருந்த குர்ஆனை கிழித்து டியூப்லைட், மின் விசிறிகளை உடைத்து தண்ணீர் குடத்தை நொறுக்கி உள்ளே சிறுநீர் கழித்து வெறியாட்டம் ஆடியுள்ளனர். பேசுகின்றேன்" என்று அழைத்து வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற நபர்களின் செல்போன் நம்பர் மற்றும் தற்போதைய முகவரியை கேட்டு அழுத்தம் கொடுக்கின்றனர். இது சந்தேகங்களை வலுப்படுத்துவதாக உள்ளது.

## நடக்கப்போகும் ரெய்டுகள்

இந்தியாவில் நடந்த அத்துனை கலவரங்களின் போதும் கலவரம் நடப்பதற்கு முன்னால் அந்த பகுதியில் ஒரு ரெய்டு நடக்கும். அந்த ரெய்டின் போது இளைஞர்களையும் அவர்கள்



தாக்கப்பட்ட மதரஸா

இத்தனைக்கும் சுற்றிலும் ஏராளமான வீடுகள். போலீசார் என்ன செய்வர்? வழக்கம்போல கஞ்சா அடித்து சுற்றிக் கொண்டிருப்பவர்களையோ அல்லது யாரேனும் இருவரை கைது செய்து வழக்கை முடிக்கப் பார்ப்பார்கள்.

இந்த செய்தி கூட *03.06.2020* அன்று எந்த பத்திரிக்கையிலும் வரவில்லை. எவ்வாறு செய்தியை வெளியிட வேண்டும் என்ற உத்தரவு போலீசாரிடமிருந்து வரவில்லை போலும். முஸ்லிம்களைப் பற்றிய செய்தியை வெளியிட வேண்டுமென்றால் உளவுத்துறையின் உத்தரவில்லாமல் வெளியிடுவதில்லை என்பது அப்பட்டமாக தெரிகின்றது.

## புதுப்புது மிரட்டல்கள்

சசிக்குமார் கொலையின் போது ஏற்பட்ட கலவரத்தின் போதும் சரி, தற்போது தொடர்ச்சியாக நடந்து வரும் தாக்குதல்களின் போதும் சரி முஸ்லிம்கள் அமைதியாக இருப்பதின் காரணத்தால் புதிய கோணத்தில் ஒரு ஆபத்து புறப்பட்டிருக்கிறது. அது: கடந்த ரமளான் பெருநாளைக்கு பத்து நாட்களுக்கு முன்பிருந்து என்.ஐ.ஏவால் வழக்கில் சிக்க வைக்கப்பட்ட நபர்களின் செல்போனிற்கு *7708628457* என்ற செல்போன் எண்ணிலிருந்து அழைப்பு வருகின்றது. "நான் முருகன். ஐபியிலிருந்து

வீட்டிலுள்ள அத்துணை பொருட்களையும் அள்ளிச் சென்றுவிடுவார்கள் காவல்துறையிலுள்ள சில கறுப்பாடுகள். அந்த ரெய்டுகள் முறையான அனுமதி பெற்றதா இல்லையா என்பதை கூட பார்க்க தவறிவிடுவர் முஸ்லிம்கள் பதற்றத்தில். இதை சாதகமாக பயன்படுத்திக் கொள்வர் காவல்துறையினர்.

இதுவரை கலவரங்கள் நடந்த இடங்களை பற்றிய செய்தியை கலவரம் நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் தொடர்ச்சியாக, கலவரம் நடந்த பின் அந்த இடத்தைப் பற்றிய செய்தியையும் படித்தாலே அறிந்து கொள்ளலாம். அது போன்ற ஒரு ஒத்திகை தான் இப்போது கோவையில் நடந்து வருவதுபோல் தெரிகிறது.

கோவை பயங்கரவாதிகளின் சூழ்ச்சியில் சிக்கித் தவிக்கிறது. காவல்துறையினர் உண்மையிலேயே பயங்கரவாதிகளுக்கு உதவுகிறார்களா அல்லது கலவர சூழ்நிலையிலிருந்து மக்களை காப்பாற்றுவார்களா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஒவ்வொரு நிகழ்வுகளையும் உன்னிப்பாக கவனித்து பதிவு செய்து வருகிறது வைகறை.

"அல்லாஹ் அவன் விதித்ததைத் தவிர வேறொன்றும் எங்களை அணுகாது" - குர்ஆன்.

**- கோவையிலிருந்து வைகறை நிருபர்கள்**

பாசிச ஆட்சியில்

# முஸ்லிம்கள் மீது தொடரும் குரூரங்கள்

இந்தியா சுபிட்சமான நாடு, அமைதியான நாடு என்று உலகம் முழுக்க பேசப்பட்டது. ஆனால், கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவின் பெரும் பலமாக இருந்த ஒற்றுமை, பல்வேறு மதங்களுக்கு இடையேயான ஒற்றுமை, மொழிகளுக்குள் இருந்த ஒற்றுமை என பெரிதும் பாதித்து வன்முறை அதிகரித்திருப்பதை உணர முடிகிறது.

*உதாரணத்திற்கு இந்த மே மாதத்தில் மட்டும் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆபத்து விளைவித்த நிகழ்வுகள் எத்தனை என்று பாருங்கள்.. இந்த சம்பவங்களுக்கு பிண்ணனியில் இருப்பவர்கள் யார் என்று பாருங்கள். நம் நாட்டின் ஒற்றுமையை, அமைதியை குலைப்பது யார் என்று நம் அனைவருக்கும் தெரியும்.*

*நம் இந்திய நாட்டில் உள்ள அனைவரும் மிக அமைதியுடனும் மகிழ்வுடனும் வாழ்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா?... இந்த மே மாத காலத்தை மட்டும் உதாரணமாக எடுத்து நாட்டின் நிலையை அலசி பாருங்கள். உண்மை விளங்கும்.*

## மே மாதத்தில் இந்தியாவில் நடந்த நிகழ்வுகள்


### மே 1

**சம்பவம் 1 -** *கொரோனா நோயிலிருந்து மீண்ட சென்னையை சேர்ந்த 55 வயது இஸ்லாமிய பெண்மணி அண்டை வீட்டார் களால் புறக்கணிக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை உருவாக்கியது.*

*இந்த நிகழ்வை பற்றி வெளியில் தெரிவித்த 55 வயது தாயாரின் கணவருடைய சகோதரர், இவர்கள் யாரும் தப்லீக் ஜமாத்திற்கு சென்று வந்தவர்கள் கிடையாது. இவர்களுக்கு நோய்த் தொற்று எப்படி வந்தது என்றும் தெரியவில்லை.*

*ஆனால். வீட்டை விட்டு வெளியே வந்தாலே அருகிலிருக்கும் அனைவரும் மிக மோசமாக நடந்து கொள்கிறார்கள். தீ விபத்து பிரிவுக்கு போன் செய்து வீட்டை சுத்தம் செய்ய சொல்கிறார்கள். வீட்டின் அத்தியாவசியமான தேவைக்கான பொருளையும் நடு இரவில் உறவினர்கள் வீட்டிலேயே வாங்குகிறார்கள்.*

*இந்த நிகழ்வை கவனத்திற்கு கொண்டு வந்து காவல்துறை உயர் அதிகாரிகள் அண்டை வீட்டாரை எச்சரித்து சென்றனர்.* (News Minute 01.05.2020)


Bjp Coimbatore Thondamuthur Assembly

வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் பகுதியில் ஜும்மா மசூதி தெருவில் கடந்த இரண்டு நாட்களாக,

நள்ளிரவு 1 மணிக்கு நடு ரோட்டிலேயே சுமார் 700நபர்கள் தொழுகையில் ஈடுபட்டு வருகின்றனர்.

காவல்துறையினர் உயரதிகாரிகளின் உத்திரவிற்கு கட்டுப்பட்டு அவர்களுக்கு எந்த தொந்திரவும்!!! மற்றும் அங்கு இரவு பணியில் இருக்கும் காவலர்கள் எவரும் தமது தொலைபேசியில் புகைப்படமோ அல்லது வீடியோவை எடுக்கக்கூடாது!!?... See more

For the last two days at jumma mosque street in vellore district, Vellore District.

At Midnight 1 PM, about 700 people are involved in prayer.

Police are controlled by the order of high officials, no trouble for them!!!! and none of the police at night work should not take photo or video on their phone!!?... See more



**சம்பவம் 2 -** குஜராத்தின் அஹமதாபாத்தில், 2 வயது குழந்தையை உடல் சரியில்லாத காரணத்தால் ஜமியத் உலமா ஹிந்த் அமைப்பினரின் ஆம்புலன்சில் ஏற்றிச் சென்றபோது காவலர்கள் ஆம்புலன்சையும் பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## மே 2

**சம்பவம் 1 -** 2018ம் ஆண்டு உத்திரபிர தேசத்தில் நடந்த தொழுகையின் படத்தை தமிழ்நாட்டில் வேலூரில் 700 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தொழுது கொரொனாவை பரப்பு வதாக கூறி முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பை சமூக ஊடகங்கள் முழுக்க பரப்பினர்.

பிஜேபி தொண்டாமுத்தூர் தொகுதியின் முகநூல் பக்கத்திலும் இந்த பொய்ச்செய்தியை பரப்பி கலவரத்தை உருவாக்க முனைந்தனர்.

## மே 3

**சம்பவம் 1 -** உத்திரபிரதேசத்தின் அலஹாபாத் நகரின் ஹண்டியா கிராமத்தில் முஸ்லிம்கள் நுழையக்கூடாது என எல்லையில் பலகையை ஒட்டியிருக்கிறார்கள்.



**சம்பவம் 2 -** உத்திரபிரதேசத்தில் உள்ள மதுரா பகுதியில் பிரகாஷ் நர்சிங் ஹோமிற்கு மருத்துவத்திற்காக சென்ற முஸ்லிம்களிடம் நாங்கள் இந்துக்களுக்கு மட்டும் தான் மருத்துவம் பார்ப்போம். இங்கே முஸ்லிம்களுக்கு மருத்துவம் பார்க்க மாட்டோம் என மருத்துவ ஊழியர் ஒருவர் சொல்லும் வீடியோ வெளியானது.

**சம்பவம் 3 -** வடநாட்டு ஊடகமான TV9 என்ற தேசிய ஊடகம் டெல்லி தப்லீக் மர்கஸில் ரகசிய சுரங்கம் உள்ளது. தப்லீக் தலைவர் மசூர் சாத் அறைக்கும் இந்த சுரங்கத் திற்கும் நேரடியான பாதை உள்ளது. இந்த சுரங்கம் எதற்காக பயன்படுத்தப்படுகிறது. கொர்னாவின் மாஸ்டராக இருந்த சாத் தற்போது கிரிமினல் களின் மாஸ்டராக மாறியிருக்கிறாரா?.. இதோ டிவி9-ன் பிரத்யேக காட்சி என்று ஒளிபரப்பி யது. இந்த வீடியோவை பாஜக பக்தர்கள் முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்பை பரப்ப மேலும் பயன்படுத்திக் கொண்டனர்.

ஆனால், உண்மையில் டிவி9 சொன்ன செய்தி அத்தனையும் முழுக்க முழுக்க பொய்யானது. மர்கஸில் சுரங்கம் என்று ஓடவிட்ட வீடியோ கூகுள் பிளே ஸ்டோரில் கிடைக்கும் "Hills Legend Action Terror" என்ற கேமுடைய வீடியோ.

அதுமட்டுமல்ல, தப்லீக் மர்கஸில் அப்படி யொரு சுரங்கம் கிடையாது என்று Alt News என்ற செய்தி நிறுவனம் கள ஆய்வு செய்தும் அதனை வெளிக்கொண்டு வந்தது.

**சம்பவம் 4 -** மத்தியபிரதேசத்தில் உள்ள இந்தோர் கிராமத்தில் முஸ்லிம் வணிகர்கள் உள்ளே வரக்கூடாது என அறிவிப்பு பலகைகள் ஒட்டப்பட்டிருக்கிறது.




**சம்பவம் 5 -** டெல்லி சிறுபான்மை கவுன்சிலின் தலைவர் ஜஃபருல் இஸ்லாம், அரபு நாடுகளில் முஸ்லிம்களின் மீது வெறுப்பு பிரச்சாரத்தை கட்டமைத்த இந்தியர்கள் மீது எடுத்த நடவடிக்கையை வரவேற்று சமூக வலைத் தளத்தில் பகிர்ந்த காரணத்தால் அவர் மீது தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## மே 4

பாட்னா, பீகாரில் உள்ள சரோஜ் மருத்துவ மனையில் முஸ்லிம்களுக்கு சிகிச்சை அளிக்க மாட்டோம் என்று சிகிச்சைக்கு வந்த முஸ்லிம் களிடம் கூறி அனுப்பி விட்டனர்.

## மே 5

**சம்பவம் 1 -** அஸ்ஸாமின் சச்சார் நகரில் அஸ்ஸாமில் வேலை பார்க்கும் காஷ்மீர் இளைஞர்கள் இந்துத்துவா மற்றும் பிஜேபி அமைப்பை சார்ந்தவர்களால் கடுமையாக தாக்கப்பட்டார்கள்.

**சம்பவம் 2 -** தப்லீக் ஜமாத்தினர் தவறாக நடந்து கொண்டதால் செவியலியர்கள் தங்களை வேலையை ராஜினாமா செய்து விட்டனர் என்று போலிச்செய்தியை பரப்பி முஸ்லிம்கள் மீது வெறுப்பு சமூக வலைத்தளத்தில் பரப்பப் பட்டது.

இந்த குற்றச்சாட்டு பொய் என்று Alt news என்ற செய்தி நிறுவனம் விரிவாக ஆராய்ந்து வெளியிட்டது.

**சம்பவம் 3 -** 2015ல் பாகிஸ்தானில் மக்கள் கூட்டமாக திரண்டு ரம்ஜான் தினத்தன்று தொழுத வீடியோவை முஸ்லிம்கள் கொரோனா கட்டுப்பாடை மதிக்காமல் தொழுததாக பொய்ச் செய்தியை பரப்பி முஸ்லிம்கள் மீது வெறுப்பு பிரச்சாரம் கட்டமைக்கப்பட்டது. இதனை Alt news விரிவாக விசாரித்து வெளியிட்டது.

## மே 6

**சம்பவம் 1 -** நியூஸ் 18 செய்தி தொலைக் காட்சியின் நெறியாளர் அஜய் தேவ்கான் முஸ்லிம்கள் அதிகமாக கூடி தொழுவதாகவும், மருத்துவமனை ஊழியர்களிடம் தவறாக நடந்து கொண்டதாகவும் சமூக வலைத்தளங்களில் வெளியான போலிச் செய்தியை நியூஸ் 18 செய்தி தொகுப்பில் முஸ்லிம்களின் மீது வெறுப்பை உருவாக்கும் விதமாக பேசினார். இதற்காக இவர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

**சம்பவம் 2 -** ஜாமியா மில்லியா கல்லூரி யின் பெண் அறிஞரான சஃபூரா சர்கார் டெல்லி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருக் கிறார். சஃபூரா கர்ப்பிணியாக இருக்கும் போது கைது செய்யப்பட்டார். இதனை எதிர்த்து சமூக ஆர்வலர்கள் கண்டித்து வரும் நிலையில் சஃபூராவின் மீது பல்வேறு பொய் செய்திகளை இட்டுக்கட்டி பரப்பிவந்தனர் இந்துத்துவாவினர்.

இதனை Alt news என்ற செய்தி நிறுவனம் ஒவ்வொரு குற்றச்சாட்டையும் பொய்யென நிரூபித்தது.

## மே 7

**சம்பவம் 1 -** ஜார்க்கண்ட் மாநிலத்தில் கத்ராஸ் காவல்துறையினர் விழிப்புணர்வு நாடகம் ஒன்றை நடத்தினார்கள். அதில், முஸ்லிம்கள் தொழுவதை போலவும் அதன் பிறகு கரொனா அதன் மூலம் பரவுவதாகவும் காட்டப்பட்டி ருந்தது.

இது முஸ்லிம்கள் தொழுவதாலேயே கொரோனா பரவும் என்று சொல்வது போல இருந்தது. இதனை பலரும் கண்டித்தார்கள்.

**சம்பவம் 2 -** முசாபர்பூர், பீகாரில் உள்ள ஒரு கிராமத்தில் சூனியம் வைத்ததாக கூறி தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த மூன்று பெண்களை கட்டி வைத்து சிறுநீர் மற்றும் மலத்தை சாப்பிட வைத்து வீடியோ எடுத்து வலைத்தளத்தில் வெளியிட்டனர்.

## மே 8

அஸ்ஸாமைச் சேர்ந்த சமூக ஆர்வலர் சம்சர் அலி முஸ்லிம்களின் மீது வெறுப்பை விதைக்கும் விதமாக பேசிய பிஜேபி தலைவர்களை கேள்வி கேட்டதற்காக கைது செய்யப்பட்டார்.

## மே 9

**சம்பவம் 1 -** குஜராத் அஹ்மதாபாத்தில் காவலர்கள் முஸ்லிம்களின் வீடுகளுக்குள் புகுந்து வீட்டில் உள்ள பொருட்களை உடைத்து முஸ்லிம் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்றும் பாராமல் கொடூரமாக தாக்கியுள்ளனர்.

**சம்பவம் 2 -** பெங்களூரில் முஸ்லிம் இளைஞர்கள் இருவர் பைக்கில் சுற்றிய காரணத் தால் காவல்துறையினால் மனிதாபிமானமற்ற முறையில் கொடூரமாக தாக்கப்பட்ட வீடியோ வெளியானது.

## மே 10

மேற்கு வங்காளத்தின் தெளினிபாரா நகரில் முஸ்லிம்களின் வீடுகள், சொத்துக்கள், கடைகள் அனைத்தும் திட்டமிட்டு கலவர சூழல் உருவாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

இப்பகுதியில் உள்ள முஸ்லிம்கள் கரொணாவால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இதை தொடர்ந்து அப்பகுதியில் உள்ள முஸ்லிம்கள் இந்துக்களின் வீடுகளை கொழுத்துவதாகவும் சமூக வலைத்தளத்தில் பாகிஸ்தானில் வெளியான மூன்று ஆண்டு பழமையான வீடியோக்களை வெளியிட்டு பிஜேபி தலைவர்கள் உட்பட இந்துத்துவாவினர் பிரச்சாரப்படுத்த அப்பகுதி கலவரமயமானது.

கலவரத்தை உருவாக்கிய இந்துத்துவாவினர் ஏற்கனவே நன்றாக திட்டமிட்டபடி முஸ்லிம் களின் வீடுகளை மட்டும் குறிவைத்து நாசப் படுத்தினர். இதனை நேரடி கள ஆய்வு செய்த wire என்ற செய்தி நிறுவனம் இது முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்டு நடத்தப்பட்ட கலவரம் என்று குறிப்பிட்டிருக்கிறது.

இந்த சம்பவத்தில் முஸ்லிம் வெறுப்பை சமூக வலைத்தளத்தில் பரப்பியதற்காக பாஜகவை சேர்ந்த இரண்டு எம்.பிக்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

## மே 11

**சம்பவம் 1 -** நாக்பூரில் மருத்துவர் ஒருவர் வெளிப்படையாக தனது சமூக வலைத்தள பக்கத்தில் முஸ்லிம்கள் இந்தியாவில் இருக்க கூடாது, இனப்படுகொலை செய்யுங்கள் என்று பேசினார். இந்த வீடியோ பரவலானதை தொடர்ந்து அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

**சம்பவம் 2 -** கர்நாடகாவில் சிமாகோ பகுதியில் வயதான வாய் பேச முடியாத முஸ்லிம் முதியவர் சாலையின் ஓரத்தில் தொழுகையில் ஈடுபட்டிருக்கும் போது கொடூரமாக தாக்கப் பட்ட வீடியோ ஊடகங்களில் வெளியானது.

**சம்பவம் 3 -** தெலுங்கானாவில் முஸ்லிம்கள் 5 பேர் இரவு தொழுகையில் ஈடுபட்டிருந்தார்கள். அப்போது இந்துத்துவ கும்பலால் மிக கடுமை யான முறையில் தாக்கப்பட்டனர், அதில்



ஒருவர் மிக மோசமான நிலையில் உயிருக்கு போராடி வருகிறார்.

## மே 12

**சம்பவம் 1 -** ஆக்ராவில் 60க்கும் மேற்பட்ட தப்லீக் ஜமாத் அமைப்பை சேர்ந்தவர்களை சிறையில் வைத்திருப்பதை போல் அடைத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இரு முறை கரொனா டெஸ்ட் எடுத்து நெகடிவ் என வந்த பிறகும் அவர்களை கைதிகளை போல நடத்து கிறார்கள். இதைப்பற்றி டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கை காவல்துறையினரிடம் கேட்டதற்கு அவர்கள் மீது எந்த வழக்குமில்லை என்கின்றனர். ஆனால், மாவட்ட மாஜிஸ்டிரேட் அவர்கள் கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறியிருக் கிறார். ஆனால் காவலர்கள் இதை மறுக் கின்றனர்.

**சம்பவம் 2 -** பிஜேபியின் சட்ட வல்லுனர் அஜய் நிஷாத் தப்லிக் ஜமாத் தான் இந்தியாவில் கரொணாவுக்கு காரணமென்றும், அவர்களெல் லாம் தீவிரவாதிகள் என்றும் ஊடகங்களுக்கு பேட்டி அளித்தார். இது கடுமையாக கண்டிக் கப்பட்டது.

**சம்பவம் 3 -** ஜார்க்கண்ட், தம்கா மாவட்டத் தில் முஸ்லிம்கள் இருவர் ஆட்டை திருடியதாக அவர்கள் மீது போலியான குற்றம் சுமத்தி கடுமையாக தாக்கியிருக்கிறார்கள். இதில் ஒருவர் அங்கேயே மரணித்து விட்டார், மற்றொருவர் உயிருக்கு போராடி வருகிறார்,

**சம்பவம் 4 -** உத்திரபிரதேசம், பதுவான் நகரில் அப்துல் பஷீர் என்ற 60 வயது நபர் மாட்டுக்கறி வைத்ததாக கூறி காவலர்கள் தாக்கியதில் உயிரிழந்தார்.

**சம்பவம் 5 -** உத்திரபிரதேசத்தில் தனது கடமையை சரியாக செய்து ஆக்சிஜன் இல்லாத

போது பல குழந்தைகளின் உயிரை காப்பாற்றிய டாக்டர் கஃபில் கான் RSS அமைப்பை பற்றி பேசியதற்காக சிறைப்படுத்தப்பட்டார். தற்போது அவர் மீது தேசிய பாதுகாப்பு சட்ட பிரிவு பதிவு செய்யப்பட்டு மூன்று மாதத்துக்கு சிறை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

## மே 13

**சம்பவம் 1 -** தப்லீக் ஜமாத்தினர் செவிலியர்கள் தவறாக நடந்து கொண்டதாக கூறி தப்லீக் ஜமாத்திற்கு தொடர்பில்லாத சம்பவத்தின் வீடியோவை பயன்படுத்தி வட இந்திய ஊடகமான கிஙிறி மற்றும் ஜிஸ்9 உடன் இன்னும் சில ஊடகங்கள் பொய்ச் செய்தி வெளியிட்டன.

**சம்பவம் 2 -** கொரோனாவின் கால்த்தில் போடப்பட்ட ஊரடங்கை பயன்படுத்தி டெல்லியில் சாஹின் பாக் போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள், ஆசிரியர்கள், அறிஞர்களை கடுமையான வழக்குகளின் கைது செய்தனர் காவலர்கள்.

**சம்பவம் 3 -** காஷ்மீரில் இந்திய ராணுவத் தினர் ஒரு அப்பாவி இளைஞனை சுட்டுக் கொன்றனர்.

## மே 14

**சம்பவம் 1 -** முஸ்லிம்கள் கூட்டமாக ஊரடங்கிற்கு முன் தொழும் வீடியோவை முஸ்லிம்கள் கூட்டமாக கொரோனாவை பரப்ப தொழுகிறார்கள் என இந்துத்துவாவினர் பரப்பினர்.

**சம்பவம் 2 -** உத்திரபிரதேச மாநிலத்தில் தப்லீக் ஜமாத் சென்று வந்ததாக தனிமைப்படுத் தப்பட்ட பெண் ரிஸ்வானாவின் கரு மருத்துவ வசதி தரப்படாததால் கலைந்தது. ஏற்கனவே இரண்டு முறை கருச்சிதைவுக்கு உள்ளாகிருந்த ரிஸ்வானா மூன்றாவது முறை கர்ப்பம் தரித்த போது மிக கவனமாக இருந்திருக்கிறார். ஆனால் வலி ஏற்பட்டு தேவைப்படும் நேரத்தில் மருத்துவ மனையில் மருத்துவம் மறுக்கப்பட்டதால் கரு கலைந்து போனது. தன்னை அதிகாரிகள் சிறைப் படுத்தி வைத்திருப்பதாக ரிஸ்வானா கூறுகிறார்.

நான்கு முறை கொரொனா சோதனை எடுக்கப்பட்டு நெகடிவ் என வந்த பிறகும் எங்களை அடைத்து வைத்திருக்கிறார்கள் என்கிறார் ரிஸ்வானா.

**சம்பவம் 3 -** ஹரியானாவில் சில நாட்களுக்கு முன் முஸ்லிம்கள் மீது கும்பல் வன்முறை நிகழ்த்தப்பட்ட பின் அப்பகுதியில் உள்ள சில முஸ்லிம்கள் கட்டாயமாக இந்து மதத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

**சம்பவம் 4 -** முஸ்லிம் பழ வணிகர்கள் உத்திரபிரதேசத்தின் அலஹாபாத் பகுதியில் வியாபாரம் செய்ததற்காக தாக்கப்பட்டனர்.

## மே 15

**சம்பவம் 1 -** பிஜேபி ஆளும் திரிபுரா மாநிலத்தில் முஸ்லிம் இளைஞன் கடுமையாக தாக்கப்பட்டார், நீ இந்து மதத்திற்கு மாறினால் மட்டுமே இங்கு நிம்மதியாக வாழ முடியும் எனவும் மிரட்டி விட்டு சென்றது கும்பல்.

**சம்பவம் 2 -** முஸ்லிம்கள் தான் எங்களுக்கு உதவுகிறார்கள். ஆனால் காவலர்கள் எங்களுக்கு உதவும் போது அவர்களை கடுமையாக தாக்கி விரட்டுகிறார்கள். கேட்டால் அவர்கள் கரோனாவை பரப்புகிறார்கள் என்கிறார்கள். நாங்கள் பசியிலேயே இறந்து விடுவோம் போலிருக்கிறது. எங்களை பசியிலிருந்து காப்பாற்றுபவர்களையும் அடிக்கிறார்கள் என்று புலம் பெயர் தொழிலாளர் ஒருவர் பேசும் காணொளி பரவலாக பரவியது.

## மே 16

**சம்பவம் 1 -** உத்திரபிரதேசத்தில் உள்ள கான்பூரின் சிவகஞ்ச் கிராமத்தில் முஸ்லிம் களுக்கு வேலை கிடையாது என்று அறிவித் திருப்பதால் அப்பகுதி முஸ்லிம்கள் வெளியில் வேலை தேடி அலைகிறார்கள்.

**சம்பவம் 2 -** உபி.யின் பரேலி பகுதியில் காவலர்கள் 12 வயது சிறுவனை மிக மோசமாக தாக்கும் காணொளி வெளியானது.

சம்பவம் 3 - உத்திரபிரதேசம் அலஹாபாத் பகுதியில் சஹாபூர் நகரில் காவலர்கள் முஸ்லிம்கள் வாழும், பகுதிக்குள் சென்று கடுமை யாக தாக்குதல் நடத்தினர், இதில் கர்ப்பிணி பெண்கள். குழந்தைகள் என பார்க்காமல் அனை வரையும் சராமாரியாக தாக்கியிருக்கிறார்கள்.

## மே 17

காஷ்மீரின் வணிகர் மும்பையில் கடுமையாக தாக்கப்பட்டார்.

## மே 18

**சம்பவம் 1 –** முஸ்லிம்கள் நோன்பு திறக்கும் நேரத்தில் உத்திரபிரதேசம், அஹமதாபாத்தில் காவலர்கள் வீட்டுக்குள் புகுந்து கடுமையாக தாக்குதல் நடத்தினர்.

**சம்பவம் 2 –** முஸ்லிம் இளைஞர் ஒருவர் தனது மொபைல் போன் திருடு போனதற்கு புகார் கொடுக்க உத்திரபிரதேச காவலர்களிடம் சென்ற போது புகாரை வாங்காமல் புகார் கொடுக்க சென்ற சிறுவனை கொடூரமாக தாக்கியிருக்கின்றனர்.

## மே 19

**சம்பவம் 1 –** பிஜேபி ஆதரவு ஊடகமாக இயங்கக்கூடிய OPINDIA என்ற ஆன்லைன் ஊடகம் அதிக அதிக பொய்ச்செய்திகள் வெளியிடுவதால் அதன் மீது பல புகார்கள் தொடந்து கொண்டே இருக்கிறது.

இந்நிலையில் பீகார் கோபால்கஞ்ச் பகுதியில் ஒரு இளைஞனின் மரணத்தை வைத்து கலவரத்தை உருவாக்க முனைந்திருக்கிறது. இந்து இளைஞன் ஒருவர் புதிய மசூதி கட்டுவதற்காக பலி கொடுக்கப்பட்டிருக்கிறார் என்று பொய்ச் செய்தியை வெளியிட்டு முஸ்லிம்கள் மீதான வெறுப்பு பிரச்சாரத்தை கட்டமைத்தது.

**சம்பவம் 2 –** வயதான முஸ்லிம் நபர் காவல் துறையால் கடுமையாக தாக்கப்படும் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

**சம்பவம் 3 –** ஜீ செய்தி தொலைக்காட்சியில் விவாத நிகழ்ச்சியின் போது முஸ்லிம் மௌலானா ஒருவரை ஜெய் ஸ்ரீ ராம் சொல்லுங்கள் என மிரட்டிய காணொளி வெளியானது.

## மே 20

**சம்பவம் 1 –** விஜயநகர், பெங்களூருவில் இந்துத்துவாவினர் முஸ்லிம்கள் அல்லாத கடைக்கு முன்னால் காவிக்கொடியை நட்டு வைத்தனர். இந்து – முஸ்லிம் பிளவை உருவாக்க இதுபோல் பலவற்றை செய்வதாக குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

**சம்பவம் 2 –** காஷ்மீரில் தீவிரவாதிகள் மீதான தாக்குதல் எனக் கூறி அப்பாவிகள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதை காஷ்மீர்வாலா பத்திரிக்கை ஆதாரங்களுடன் வெளிக்கொண்டு வந்தது, இந்த செய்தியை வெளியிட்டதற்காக இப்பத்திரிக்கை ஆசிரியருக்கு சம்மன் அனுப்பப் பட்டிருக்கிறது.

**சம்பவம் 3 –** புலம்பெயர் தொழிலாளி ஒருவர் பசியின் காரணமாக ராஜஸ்தான் ரோட்டில் வண்டியில் அடிபட்டு இறந்த நாயின் இறச்சியை பச்சையாக சாப்பிடும் வீடியோ வெளியனது.

**சம்பவம் 4 –** தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் வசிக்கும் *44* வயதான பால்ராஜ் *14* வயது சிறுமியை கட்டாயப்படுத்தி திருமணம் செய்தும், பாலியால் ரீதியான தொந்தரவுகள் கொடுத்தும் வந்த காரணத்தால் கைது செய்யப்பட்டார்.

**சம்பவம் 5 –** மத்திய பிரதேசத்தில் காவலர்கள் ஒரு வழக்கறிஞரை கொடூரமாக தாக்கி விட்டு அவர் முஸ்லிமல்லாதவர் என தெரிந்தவுடன், மன்னித்து கொள்ளுங்கள் நீங்கள் தாடி வைத்திருப்பதால் முஸ்லிம் என்று நினைத்து தாக்கி விட்டோம் என்று கூறியுள்ளனர் ம.பி காவலர்கள். இதற்கு பல்வேறு தரப்பினரிட மிருந்து கண்டனங்களும் எழுந்திருக்கிறது.

## மே 21

**சம்பவம் 1 –** உ.பி பிஜ்னோர் பகுதியில் காவ லர்கள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

**சம்பவம் 2 –** தெலுங்கானாவில் தலித் இளைஞர் ஒருவர் BC வகுப்பை சார்ந்த ஒரு பெண்ணிடம் பேசியதால் கட்டி வைத்து அடிக் கப்பட்டதுடன் சிறுநீரை குடிக்க வைத்தும் அந்த இளைஞனை சித்ரவதைப்படுத்தியுள்ளனர்.

**சம்பவம் 3 –** உ.பி.யில் பதஹ்பார்ஹ் பகுதியில் உள்ள மசூதி இந்துத்துவ கும்பல் ஒன்றால் சூரையாடப்பட்டது.

## மே 23

**சம்பவம் 1 –** டெல்லி கலவரத்தில் பாதிக்கப் பட்ட முஸ்லிம்கள் மீதே வழக்கு பதிந்து சிறைக்கு அனுப்பும் நிகழ்வு நடந்து வருகிறது என பல்வேறு சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**சம்பவம் 2 -** டெல்லியின் ஜாக்பூத் பகுதியில் மாம்பழம் விற்கும் முஸ்லிம் வியாபாரி இந்துத்துவா நபர்களால் தாக்கப்பட்ட அதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் அவரின் கடையில் இருந்த மாம்பழங்களை திருடி சென்றனர். இது அங்கிருக்கும் கேமராக்களில் பதிவானது. 30 ஆயிரத்துக்கும் அதிகமான மாம்பழங்கள் பறிபோனதாக வியாபாரி கூறியிருக்கிறார்.

## மே 24

முஸ்லிம் கர்ப்பிணி ஒருவருக்கு முஸ்லிம் என்ற காரணத்தால் மருத்துவம் மறுக்கப்பட்டதால் பீகாரின் பக்ஷார் நகரில் அவரது உயிர் பிரிந்தது.

## மே 26

**சம்பவம் 1 -** இந்துத்துவ ஆதரவாளர்கள், டெல்லி சிஏஏ போராட்டத்தில் கலந்து கொண்ட காரணத்தால் கைது செய்யப்பட்ட லதீதா ஃபர்சானாவை மோசமாக சித்தரிக்கும் போலியான படங்களை உருவாக்கி அருவறுப்பான செய்திகளுடன் பரப்பினர். இதனை Alt news சரிபார்த்து பொய் என்று விரிவாக செய்தி வெளியிட்டிருக்கிறது.

**சம்பவம் 2 -** குஜராத்தில் ருக்சானா என்ற முஸ்லிம் பெண்மணி சரியாக மருத்துவம் கொடுக்கப்படாமல் கொரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் கவனிப்பாரற்று மலத்தின் மீதே தன்னை சுத்தம் கூட செய்து கொள்ள முடியாமல் உயிர் போன செய்தி பலரை கவலையில் ஆழ்த்தியது.

## மே 27

புலம்பெயர் தொழிலாளர்களின் துயர்த்தின் உச்சக்கட்டமாக ஒரு குழந்தை தனது தாய் இறந்து விட்டது தெரியாமல் அவரது உடையை விலக்கிக் கொண்டு அழுகும் வீடியோ சமூக வலைத்தளத்தையே கவலையில் ஆழ்த்தியது.

## மே 28

**சம்பவம் 1 -** காஷ்மீரின் 298வது நாளாக 4ஜி இண்டர்நெட் சேவை தடை செய்யப்பட்டிருக்கிறது. ஜூன் 17 வரைக்கும் இது தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## மே 29

**சம்பவம் 1 -** உத்திரபிரதேசத்தில் உள்ள முசாபர்நகரில் இருக்கும் சிறிய கிராமத்தில் வசிக்கும் முஸ்லிம்களையும் அவரது சொத்துக்களையும் காவல்துறையினர் சூரையாடியிருக்கின்றனர்.

அப்பகுதியில் உள்ள அஃப்சல் என்பவர் மாட்டுக்கறி வைத்திருந்தார் அவரை கைது செய்ய வேண்டும் என்று கிராமத்திற்குள் நுழைந்த காவலதிகாரிகள் கிராமத்தில் இருக்கும் முஸ்லிம்களை தாக்குவதும், அவர்களின் வீடுகளின் உள்ள பொருள்களை உடைப்பதும் என கலவரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

5000 முதல் ஒரு லட்சம் வரை பணம் காவலர்களால் கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது. வீடுகளில் புகுந்து வீட்டிலிருக்கும் நகைகளையும் திருடி சென்றார்கள் என்றார்கள் கிராமத்தினர்.

முஸ்லிம் பெண்களையும் கடுமையாக தாக்கியிருக்கிறார்கள். பெண் காவலர் ஒருவர் கூட காவலர்களின் கூட்டத்தில் இல்லை. ஆனால், வீடுகளுக்குள் புகுந்து பெண்களை ஆபாசமாக பேசியிருக்கிறார்கள். இதில் ஒரு பெண்ணை ஆண் போலீசார் கைது செய்து சிறிது நேரத்திற்கு பின் விடுவித்திருக்கிறார்கள்.

இதைப்பற்றி ஊடகத்தினர் தொடர்பு கொண்ட போது காவலர்கள் அது போல் ஒரு சம்பவம் நடந்ததாகவே எங்களுக்கு தெரியாது என கூறிவிட்டனர்.

**சம்பவம் 2 -** டெல்லியில் அஸ்மா பானு என்ற ஆறு மாத கர்ப்பிணி முஸ்லிம் பெண் ஒருவருக்கு உடல்நலம் மோசமான நிலையிலும் கூட மருத்துவமனையில் அனுமதிக்கப்படாததால் அவரது உயிர் பறிபோனது.

## மே 30

**சம்பவம் 1 -** ஜாமியா கல்லூரின் மாணவர் ஜுல்ஃபிகா பாத்திமா மீது டெல்லி காவல்துறையினர் டெல்லியில் நடைபெற்ற சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட காரணத்திற்காக UAPA சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

- அபூ சித்திக்

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்)
# நூருத்தீன் ஸங்கி (ரஹ்)
# சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)



## ஓர் அறிமுகம்

**வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.**

*நபி (ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.*

*ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர் களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித் தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095-இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம் களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.*

*இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம் களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர்.*

*சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர் களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்பவர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.*

*அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு*

நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப் பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங் கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹூத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹூத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட் டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று சொன்னதிலிருந்து ஸலாஹூத் தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை.

*2020 ஏப்ரல் இதழின் தொடர்ச்சி...*

## நூருத்தீன் ஸங்கி உயிர் தப்பினார்

அது ஹிஜ்ரி 558ம் வருடம். கி.பி.1163. இந்த வருடம் நூருத்தீன் ஸங்கி அவர்கள் தன்னுடைய படைகளை சிலுவைப்படையினர் இருந்த பகுதியின் பக்கம் நகர்த்த திட்டமிட் டார். இதுவரை தங்களிடம் இருந்த பகுதிகளை காப்பாற்ற முயன்று வந்தவர் இப்போது அவர் களை முன்னேறி சென்று அவர்கள் இருக்கும் பகுதிக்கே சென்று தாக்க திட்டமிட்டார்.

எனவே, தன் படைகளை ஃபிரான்குகள் இருந்த பகுதிக்கு நகர்த்தி குர்துகள் இருக்கும் கோட்டையில் தங்கினார். அவருடைய நோக்கம் ஃபிரான்குகளை வெற்றி கொண்டு திரிபோலியை கைப்பற்றுவது. குர்துகளின் கோட்டை ஒரு மலையின் மீது அமைக்கப்பட்டு இருந்தது. ஒருநாள் நண்பகலில் அந்த மலையின் பின்புறம் சிலுவைப்படையினர் தங்கள் சிலுவை களுடன் இவர்களை தாக்க கூடி இருந்தனர். அதாவது நூருத்தீன் ஸங்கி அவர்களின் திட்டம் எப்படியோ வெளியில் தெரிந்து அவர்கள் முன் கூட்டியே முஸ்லிம்களை தாக்க வந்துவிட்டனர்.

இப்போது முஸ்லிம்களின் பின்னாலும் சிலுவைப்படையினர், முன்னாலும் சிலுவைப் படையினர் என சிலுவைப்படையினர் அவர்களை சூழ்ந்துவிட்டனர். எனவே, முஸ்லிம்களின் படை ஆட்டம் கண்டுவிட்டது. முஸ்லிம்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள

பலம் கொண்டு போரிட்டு பார்த்தனர். ஆனாலும் அது பலனளிக்கவில்லை.

இவர்களை ஒட்டுமொத்தமாக அழித்து விடுவது என்ற முடிவுடன் படையை திரட்டி வந்த சிலுவைப்படையினர் முஸ்லிம்களின் பெரும்பகுதியினரை கொன்றுவிட்டு பலரை கைது செய்தனர். சிலுவைப்படையினரில் சிலர் நூருத்தீன் ஸங்கியை கொன்றுவிடும் எண்ணத் துடன் அவர் தங்கியிருந்த கூடாரத்தை நோக்கி வேகமாக சென்றனர். அவரை கண்டு கொலை செய்ய முயற்சியும் செய்தனர். ஆனால் நூருத்தீன் ஸங்கி அவர்கள் அந்த கூடாரத்தின் பின்புறமாக தப்பித்து வேகமாக தன் குதிரையை நோக்கி வேகமாக ஓடினார். குதிரையின் மீது ஏறினார்.

அவருடைய குதிரையின் கால்கள் அந்த கூடாரத்தில் கட்டப்பட்டு இருந்தது. எதிரிகளிட மிருந்து தப்பிப்பதற்காக வேகமாக ஓடி வந்து குதிரையில் ஏறிய நூருத்தீன் ஸங்கி அவர்கள் இதனை கவனிக்கத் தவறி விட்டார். ஆனால்



அல்லாஹ்வின் மிகப்பெரிய கருணையின் காரணமாக குர்து வீரன் ஒருவன் இதனை கவனித்து விட்டான். நூருத்தீன் ஸங்கி அவர்கள் தடுமாறி விழ இருந்த வேளையில் வேகமாக பாய்ந்து வந்த குர்து வீரன் தன் கைகளில் இருந்த வாளை குறிபார்த்து வேகமாக கட்டப் பட்டிருந்த கயிற்றை நோக்கி வீசினான். கயிறு வெட்டப்பட்டது. நூருத்தீன் ஸங்கி அவர்கள் எதிரிகளிடமிருந்து தப்பித்தார். ஆனால் அவர் தப்பிக்க காரணமாக இருந்த குர்து வீரன் கொல்லப்பட்டான். அந்த போர்வீரனின் உயிர் இறைவழியில் பிரிந்தது.

அந்த குர்து வீரனின் தியாகத்தை நூருத்தீன் ஸங்கி அவர்கள் தன் வாழ்வாளில் மறக்கவே இல்லை. அந்த வீரனின் குடும்பத்தை வர வழைத்து அவர்களுக்கு பல்வேறு உதவிகளை நூருத்தீன் ஸங்கி அவர்கள் செய்தார். அந்த குடும்பத்தின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்தார்.

இப்போது நூருத்தீன் ஸங்கி வேறுவழியின்றி ஹிம்சை நோக்கி சென்றார். அந்தப் போரில் உயிர்பிழைத்த வீரர்கள் அங்கு ஒன்று கூடினர்.

அவருடைய தோழர்களில் ஒருவர் ஸங்கியை நோக்கி, "இத்தகைய மோசமான சூழலில் நீங்கள் இங்கிருப்பது நல்லதல்ல. நீங்கள் சென்று விடுங்கள். பாதுகாப்பற்ற இந்த சூழலில் ஃபிரான்குகள் உங்களை தாக்கி கொன்று விடக்கூடும்" என்று கூறினார்.

இதனை கூறியவர் நூருத்தீன் ஸங்கி அவர்களின் நலனிலும் முஸ்லிம்களின் நலனிலும் அக்கறைக் கொண்டு தான் இவ்வாறு கூறினார். என்றாலும் நூருத்தீன் ஸங்கி அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் அதனை கண்டித்தார்.

மேலும் "அல்லாஹ்வின் மீது ஆணையாக இன்னும் ஆயிரம் வீரர்கள் மட்டுமே என்னிடம் எஞ்சி இருந்தாலும் நான் அதனை கண்டு கவலைப்பட மாட்டேன். என்னிடம் எண்ணிக் கையில் வீரர்கள் அதிகமாக இருந்தாலும் சரி, குறைவாக இருந்தாலும் சரி அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை. அல்லாஹ்வின் மீது சத்தியமாக இஸ்லாத்திற்காக எதிரிகளை பழிவாங்கும் வரையில் நான் ஒருபோதும் ஓய

மாட்டேன்" என்று கூறிவிட்டார்.

## போர்வீரர்களுக்கு இழப்பீடு

இதன் பிறகு நூருத்தீன் ஸங்கி அவர்கள் அலெப்போவிற்கும் டமாஸ்கசுக்கும் தன்னுடைய ஆட்களை அனுப்பி பணம், குதிரைகள், ஆயுதங்கள், கூடாரங்கள் போன்றவற்றையும் இன்னும் படைவீரர்களுக்கு தேவையானவற்றையும் கொண்டுவரச் செய்தார், இந்த பொருட்களெல்லாம் வந்த பின்னர் இவற்றை உயிர் தப்பிப் பிழைத்த தன்னுடைய படைவீரர்களுக்கு பகிர்ந்து அளித்தார்.

போரில் இறந்து விட்ட வீரர்களை பொறுத்தமட்டில் அவருடைய வாரிசுகளுக்கு தேவையான பொருட்களை வழங்கினார். ஒருவேளை இறந்துவிட்ட போர்வீரர்களுக்கு வாரிசுகள் இல்லாமல் இருந்தால் அவர்களுடைய உறவினர்களுக்கு அவர்களுடைய பங்குகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இப்படி உயிர் உள்ளவர்கள் இறந்தவர்கள் என அனைவரின் மத்தியிலும் அவர் நீதமாக நடந்து கொண்டார்.

இதற்கிடையே சிலுவைப் படையினர் ஹிம்சை நோக்கி தங்கள் படைகளை கொண்டு செல்ல தீர்மானித்தனர். ஆனால் நூருத்தீன் அவர்கள் ஹிம்சில் இருப்பதை எவ்வாறோ அறிந்துகொண்ட அவர்கள், தங்கள் முடிவை மாற்றிக் கொண்டனர். "நிச்சயமாக நூருத்தீன் அங்கே ஒரு பெரும்படையை தன்னிடம் வைத்துக் கொள்ளாமல் இவ்வாறு இருக்க வாய்ப்பே இல்லை, எனவே இப்போது நாம் அங்கே சென்றால் நமக்கு தான் இழப்பு ஏற்படும்", என்று கூறி அவர்கள் அங்கே செல்லாமல் நின்றுவிட்டனர்.

இதற்கிடையே நூருத்தீன் அவர்கள் தங்களுடைய படைவீரர்களுக்கு தன் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து பணத்தையும் பொருளையும் வரவழைத்து அவர்களுக்கு வழங்கிக் கொண்டே இருந்தார். எந்த அளவுக்கு அவர் வழங்கினார் என்றால் ஒரே நாளில் இரண்டு லட்சம் தினார்களை (தங்க காசுகள்) அவர்களுக்கு நட்ட ஈடாக வழங்கினார். அதுமட்டுமன்றி அத்துடன் குதிரைகள், ஆடுகள், மாடுகள், கூடாரங்கள், ஆயுதங்கள் போன்றவற்றையும் நட்டஈடாக வழங்கினார்.

இதன்பின்னர் அவர் தன்னுடைய திவானை வரவழைத்து பாதிக்கப்பட்ட போர்வீரர்களை தன்னிடம் அழைத்துவரும்படி கூறினார். அப்படி அழைத்து வரப்பட்ட போர் வீரர்களிடம் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து அல்லது சிலுவைப்படை வீரர்களால் அபகரித்துச் செல்லப்பட்ட அவர்களின் பொருட்கள் பணம் ஆயுதங்கள் போன்றவற்றை குறித்து வினவினார்.

இதற்கு காரணம் ஒவ்வொரு போர்வீரருக்கும் சரியான முறையில் அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டதா என்பதை அறிந்து கொள்ளவே. எனவே ஒவ்வொரு போர் வீரரும் அவரவருக்கு என்ன இழப்பு ஏற்பட்டது என்று கூறினாரோ அந்த அளவிற்கு அவருக்கு பொருட்கள் நட்ட ஈடாக வழங்கப்பட்டு அவர்களுடைய இழப்பு சமன் செய்யப்பட்டது.

## பொய் சொன்னவருக்கும் இழப்பீடு

இப்போது வேறொரு பிரச்னை ஏற்பட்டது. அந்தப் போர் வீரர்களில் சிலர் நூருத்தீன் அவர்களின் இந்த கருணையை தவறாக பயன்படுத்திக் கொள்ள நினைத்தனர். அவர்கள் பொய் சொல்ல ஆரம்பித்தனர். அப்படி ஒரு போர்வீரர் அவர் இழந்ததற்கு மேலாக இழப்பீட்டை கோரினார். அவர் பொய்தான் சொல்கிறார் என்பதை நன்கறிந்த நூருத்தீன் அவர்களின் பிரதிநிதிகள் இந்த விஷயத்தை நூருத்தீன் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். மேலும் அந்த போர்வீரரை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யும்படி நிபந்தனை விதிக்க அனுமதி கேட்டனர். ஆனால் நூருத்தீன் அவர்கள் இதனை மறுத்து விட்டார்கள்.

"இதன் மூலம் எனக்கு கிடைக்க கூடிய நன்மைகளை அழித்து விடாதீர்கள். அவர்கள் பெறுவது அதிகமாக இருந்தாலும் சரியே. அதை அப்படியே விட்டு விடுங்கள்" என்று கூறிவிட்டார்.

## இலக்கு தவறாத அம்பு

அவருடைய தோழர்களில் சிலர் அவரிடம் வந்து, "நீங்கள் நீதிமான்களுக்கும், ஏழைகளுக்கும், இறைநேசர்களும், குர்ஆனை மனனம் செய்தவர்களுக்கும் அதிகமாக வழங்குகிறீர்கள்.

அதற்கு பதிலாக உங்களுடன் சேர்ந்து போர் புரியும் எங்களுக்கு இவற்றை வழங்குவீர்கள் என்றால் அது மிக நன்றாக இருக்கும் என்று கோரிக்கை வைத்தனர்.

நூருத்தீன் அவர்களின் பக்கம் கோபமாக திரும்பி பார்த்து, "அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் வெற்றிபெற்றது இவர்களை கொண்டுதான். உங்களில் பலஹீனமாவர்களை கொண்டே அல்லாஹ் உங்களுக்கு வெற்றி களையும் உதவிகளையும் வழங்குகின்றான்.

எனவே எவ்வாறு அவர்களுக்கு என் உதவிகளை மறுக்க முடியும். நான் போர்க் களத்தில் நிற்கும் போது உங்களில் சிலர் எனக்காக எதிரிகளை நோக்கி குறிவைத்து அம்புகளை செலுத்துகிறீர்கள். அதில் சில இலக்கை தாக்குகின்றன. சில இலக்குகளை தவற விடுகின்றன.

நீங்கள் குறை சொல்லும் இவர்களும் நான் போர்க்களத்தில் நிற்கும்போது எனக்காக பிரார்த்தனையின் வாயிலாக எதிரிகளை நோக்கி அம்புகளை செலுத்துகின்றனர். அவர்களில் குறி ஒருபோதும் விலகுவதுமில்லை, தவறுவதும் இல்லை. குறி தவறாதவர்களின் பங்கை குறி தவறக்கூடியவர்களுக்கு எவ்வாறு வழங்க இயலும். இருப்பினும் இலக்குகளை தவறவிடும் உங்களுக்கும் என்னுடைய கருவூலத்தில் பங்குகள் வழங்கப்பட்டே வருகின்றன. உங்களுக்கும் நான் ஒருபோதும் குறை வைப்பதில்லை" என்று கூறினார். இதைக் கேட்டவுடன் தங்களுக்கு அதிகமாக வேண்டும் என்று கோரிக்கை வைத்தவர்கள் அமைதியாகி விட்டனர்.

இந்த நிகழ்வுகளுக்குப் பின்னர் சிலுவைப் படையினர் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் சமாதான உடன்படிக்கை கோரி செய்தி அனுப்பினர். ஆனால் நூருத்தீன் ஸங்கி அவர்கள் சிலுவைப் படையினரின் கோரிக்கைக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை. இதன்பின்னர் சிலுவைப் படையினர் சில படைவீரர்களை நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் இருந்து கைப்பற்றிய கோட்டையை பாதுகாக்க நிறுத்தி வைத்துவிட்டு திரும்பிவிட்டனர்.

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.







குஜராத் மாடல்

# கொரோனாவால் வெளிவந்தது மோடி லட்சணம்

கோவிட்-19 எனும் கொரோனா வைரஸுக்கு இந்தியா முழுவதும் பாதிப்பு இருந்தாலும் குஜராத்தில் தான் உயிரிழப்பு அதிகமாக இருக்கிறது. இந்தியா முழுக்க கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட வர்களின் இறப்பு விகிதம் 2.87%. ஆனால் அதுவே குஜராத் மாநிலத்தில் மட்டும் 7.88% ஆக இருக்கிறது.

சுகாதாரத்துறையில் குஜராத் எந்தளவு பின் தங்கியிருக்கிறது என்பதையே இந்த புள்ளி விவரம் உணர்த்துகிறது.

மோடி குஜராத் முதல்வராக 2001-2014வரை மொத்தம் 13 ஆண்டுகள் இருந்தார். அந்த காலக்கட்டத்தில் தொடங்கி இன்று வரை குஜராத்தின் சுகாதாரத்துறை வளர்ச்சி பெறவில்லை.

1000 நபருக்கு 0.33 பெட்களை கொண்ட மருத்துவ வசதியே குஜராத்தில் இருக்கிறது. இது மிகவும் பின் தங்கியுள்ள பீகார் மாநிலத்தை விட குறைவு. பீகார் மாநிலத்தில் 1000 நபருக்கு 0.55 பெட் வசதி இருக்கிறது. இந்தியா முழுக்க கணக்கிடும் போது 1000 நபருக்கு 0.77 பெட் வசதி இருக்கிறது. இதுவே தமிழ்நாட்டில் 1000 நபருக்கு 1.1 பெட் வசதி என சுகாதாரத்துறை வளர்ச்சியில் முன்னனியில் இருக்கிறது.

குஜராத், 1999-2000 காலக்கட்டத்தில் சுகாதாரத் துறை வளர்ச்சியில் இந்தியாவில் 4வது மாநிலமாக இருந்தது. ஆனால், 2009 - 2010 காலக்கட்டடத்தில் 9 வது மாநிலமாக பின்தங்கியது. அதாவது மோடி ஆட்சிக் காலத்தில்சுகாதாரத்துறையில் மிகவும் பின்தங்கிய மாநில மாக மாறியது.

அதே போல், 1999-2000 காலக்கட்டத்தில் குஜராத்தின் மொத்த பட்ஜெட்டில் 4.39% சுகாதாரத்துறைக்கு செலவிடப்பட்டது. ஆனால், மோடி ஆட்சிக்காலத்தில் அது 0.77% ஆக குறைந்தது.

இன்றளவும் மிகவும் பின்தங்கியுள்ள மாநிலமாக கருதப்படும் பீகாரை விட மிக குறைந்த கிராம சுகாதார நிலையங்களே குஜராத்தில் இருக்கின்றன. அதுவும், குஜராத்தை விட பீகாரில் மூன்று மடங்கு அதிகமாக கிராம சுகாதார நிலையங்கள் இருக்கின்றன.

இந்த இக்கட்டான நேரத்தில் இந்தியாவின் மாநிலங்களின் சுகாதார கட்டமைப்பை நாம் உணர முடிகிறது. அவற்றில் தமிழகம் சிறந்த இடத்திலும், தென் மாநிலங்கள் சிறப்பான நிலையில் இருப்பதும் தெரிய வருகிறது. குஜராத் மாடல் என்று நாம் எந்தளவு ஏமாற்றப் பட்டிருக்கிறோம் என்றும் புரிந்து கொள்ளலாம்.

இந்தியாவில் இதுவரை மொத்தம் 7,13,986 மருத்துவமனைகள் உள்ளன. அவற்றில் மொத்தம் 20,000 வெண்டிலேட்டர்வசதிகள்இருக்கின்றன. கொரோனா நோயால் பாதிக்கப் பட்டவர்களில் 5% பேருக்கு வெண்டிலேட்டர் அவசியம் தேவைப்படும் நிலை வரலாம். தற்போதுள்ள நிலை தொடருமானால் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மே 15ல் இந்தியாவில் கொரோனா பாதித்தவர்களின் எண்ணிக்கை 22 லட்சமாக இருக்குமென்று எச்சரித்திருக்கிறது.

இந்த கொரோனா வைரஸின் தாக்கம் இந்தியா தனது சுகாதார கட்டமைப்பை எவ்வளவு தூரம் உயர்த்த வேண்டும் என்று உணர்த்தியிருக்கிறது.

- அபூ சித்திக்.

# முஸ்லிம்களுக்கெதிராக தவறான செய்தியை கொடுத்து வெறுப்பை விதைக்கும் ஊடகம்

# TIMES OF INDIA

உலகம் முழுக்க கொரோனாவின் அச்சம் பெரிதாக இருந்தாலும் இந்தியாவில் கொரோனாவின் வழியாக முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரத்தை தொடங்கி முஸ்லிம்கள் மீதான அச்சத்தை இந்தியா முழுக்க விதைக்க தயாராகியிருக்கிறார்கள்.

வாட்சாப், ட்விட்டர் என சமூக வலைத் தளங்களில் போலியான வீடியோக்களை கொண்டு முஸ்லிம்கள் மீது தவறான பிம்பத்தை உருவாக்க இந்துத்துவாவினர் முனைய அதற்கு இணையாக வெகுஜன ஊடகங்களும் கள மிறங்கியிருக்கிறார்கள்.

Times of India ஒரு பிரபலமான வெகுஜன ஊடகம். அதில் 06.04.2020ல் வெளியான செய்தியில்,

"புனேவில் 40 மருத்துவர்கள் கொரோனா பாதிப்பு இருக்கலாம் என தனிமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். இதற்கு காரணம், டெல்லி யில் நடந்த தப்லிக் ஜமாத் மாநாட்டில் கலந்து கொண்டவர் விபத்து காரணமாக மருத்துவ மனையில் சேரும் போது அவருக்கு கொரோனா இருப்பதை வேண்டுமென்றே மறைத்து விட்டார்." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த செய்தியை அப்படியே பிரதியெடுத்து பாஜக ஆதரவு இணையதளங்கள் பரப்ப தொடங்கி விட்டன.

தமிழகத்தில் பாஜக ஆதரவு நபர்கள் இதனை முஸ்லிம்களுக்கெதிராக பயன்படுத்தியும் வருகின்றனர்.

இப்படி வெறுப்பு பிரச்சாரத்தை நிகழ்த்த Times Of India வெளியிட்ட செய்தியே காரணமாக அமைந்தது. ஆனால், அந்த செய்தி உண்மையில்லை.

மஹாராஷ்டிராவின் புனே நகரில் இருக்கும் DY பட்டில் மருத்துவமனையில் கொரோனா பாதித்த ஒரு நோயாளியுடன் தொடர்பு இருந்த காரணத்தால் மருத்துவமனை ஊழியர்கள் 40 மருத்துவர்கள் உட்பட 92 பேர் தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

இதைப்பற்றி மருத்துவமனையின் தலைமை அதிகாரி ஜித்தேந்திரா பஹவால்கர் கூறும் போது,

மார்ச் 31ம் தேதி ஆட்டோ ரிக்ஷாவில் விபத்து ஏற்பட்டு ஒரு நபர் அனுமதிக்கப்பட்டார். 30 வயது மதிக்கத்தக்க அந்த நபருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இரண்டு நாளைக்கு பிறகு அவருக்கு காய்ச்சல் அறிகுறி தென்பட்டது. பிறகு அவரது மாதிரிகளை சோதனைக்கு அனுப்பிய போது அவருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட நபர் தப்லிக் ஜமாத்தை சேர்ந்தவரா என்ற கேள்விக்கு பதிலளித்த அதிகாரி,

அவருக்கும் தப்லிக் ஜமாத்திற்கும் எந்த வித தொடர்பும் இல்லை. மேலும், அவர் முஸ்லிம் மதத்தை சார்ந்தவரும் கிடையாது என்று குறிப்பிட்டார். (LIve mint 06.04.2020)

முஸ்லிமல்லாத நபர் ஒருவருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதற்கே முஸ்லிம் களுடன் இணைந்து கண், காது, மூக்கு என சேர்த்து பல கதைகள் பரப்பட்டது. வெறுப்பு பிரச்சாரம் கட்டமைக்கப்பட்டது.

இதனை வெகுஜன ஊடகங்கள் முன்னெடுத்து செய்கிறது என்றால் நம் நாட்டின் ஊடகங்கள் எந்த கீழ் நிலைக்கு சென்று விட்டன என்று உணர முடிகிறது.

*சரி, அந்த மனிதர் முஸ்லிமல்லாத நபராகவே இருக்கட்டும். அவர் மறைத்து அனுமதிக்கப்பட்டார் என்பது எவ்வளவு பெரிய பொய். விபத்தில் சிக்கி அவசர சிகிச்சையில் சேர்க்கப்படும் அளவுக்கு இருக்கும் ஒரு நபர் தனக்கு காய்ச்சல் இருக்கிறது என்றெல்லாம் மருத்துவரிடம் சொல்வாரா?.. இதனை மருத்து வர்கள் தானே சோதனை செய்திருக்க வேண்டும்.*

**எம்மதத்தை சேர்ந்தவராக இருந்தலும் அது பெரிதில்லை. அவர் பாதிக்கப்பட்ட தற்கான சிகிச்சையை கொடுப்பதே மனித நேயம். இந்த சம்பவத்தில் முஸ்லிம் அல்லாத வேறு மதத்தை சார்ந்தவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக முஸ்லிம்கள் எவரும் அவர்களை ஆபத்தாக பார்ப்பதில்லை. ஆனால், முஸ்லிம் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பதற் காக முஸ்லிம்களை தவறாக பார்க்கும் குணம் இருக்கிறது என்றால் உங்கள் வாழ்க் கையை சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.**

- *அபூ சித்திக்*

# பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி





***26-05-2020** அன்று மேட்டுப்பாளையத்தில் தாருல் இஸ்லாம் நடத்திய பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி*

# சாதிக்கொடுமையால் தற்கொலை செய்து கொண்ட AIIMS மருத்துவர்

AIIMS மருத்துவர்கள் சங்கம் மருத்துவமனை உயர் அதிகாரிகளாலும், நிர்வாகத்தாலும் சாதி கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்ட AIIMS பெண் மருத்துவரின் மரணத்திற்கு விரிவான விசாரணை வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஸ் வர்தன் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் மருத்துவர், தான் சாதிய கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுவதாக பெண்கள் குறைதீர்க்கும் ஆணையம், AIIMS மருத்துவமனையில் உள்ள SC, ST நலவாரிய பிரிவு மற்றும் SC, ST மக்களுக்கான தேசிய ஆணையம் என்ற மூன்று முக்கிய பிரிவுகளுக்கு புகார் கடிதம் அனுப்பினார். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நடவடிக்கை எடுக்காத விரக்தியில் தன்னைத்தானே காயப்படுத்திக்கொள்ள முனைந்து தற்கொலை செய்து கொண்டார்.

இதைப் போலவே கடந்த ஆண்டு பாயல் தாத்வி என்ற பெண் மருத்துவர் பட்டியல் இனத்தவர் என்பதால் நிகழ்த்தப்பட்ட சாதி கொடுமையின் காரணமாக தற்கொலை செய்து கொண்டார்.

மருத்துவமனைகளில் சாதிய கொடுமைகள் எப்படி விரிந்திருக்கிறது என்பதற்கு இந்த நிகழ்வுகள் சான்றாக அமைகின்றன.

ஒரு தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்தவர் தான் முன்னேறி விட்டால், படித்து விட்டால், பொருளாதாரத்தில் உயர்ந்து விட்டால் இந்த சாதி கொடுமையிலிருந்து மீண்டு விடலாம் என்று கனவு கொண்டு தங்கள் வாழ்க்கையை நகர்த்துகிறார்கள்.

மற்றவர்கள் தங்கள் வாழ்க்கையை வளமாக்கு வதற்காக படித்து, பொருளா தாரத்தில் வளர வேண்டுமென்று நினைக்கும் சூழலில் தாழ்த் தப்பட்ட வகுப்பினர் மட்டும் தங்களை சாதிய கொடுமையிலிருந்து மீட்டுக் கொள்ள வேண்டும் என்ற காரணத்திற்காக படித்தும், பொருளாதாரத்திலும் முன்னேறி விட வேண்டும் என நினைக் கிறார்கள்.

ஆனால், AIIMS மருத்துவரே ஆனாலும் IITல் முனைவர் பட்டமே படித்தாலும் இந்தியாவில் சாதிய கொடுமையிலிருந்து மீள முடியாது என்பதை நிகழ்காலம் உணர்த்துகிறது.



# தொற்று நோயை ஏற்கனவே எதிர்கொண்ட தமிழகம்..!

## - சுவாரஸ்யமான தகவல்கள்

தமிழகம், பிளேக் நோய், பிளேக் மாரியம்மன், கொரோனா வைரஸ் தாக்குதலில் இருந்து தமிழகம் மீண்டு வர பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பறையிசை, ராப் பாடல்கள், கானா பாடல்கள் கூட பயன்படுத் தப்படுகிறது. இதைப்போலவே தமிழகத்தில் பிளேக் நோய் தாக்கிய சமயத்திலும் பல்வேறு விழிப்புணர்வு பாடலகளையும், பிளேக் நோய் தொடர்பான பாடல்களையும் பயன்படுத்தி யிருக்கிறோம். சில கலாச்சார நிகழ்வுகளும் அக்காலத்தில் நிகழ்ந்திருக்கிறது.

*1903* காலக்கட்டத்தில் தான் தமிழகத்தில் முதலில் பிளேக் நோயின் தாக்கம் தொடங்கியது. அதுவும் கோயமுத்தூர் மாவட்டத்தில் தான் முதலில் தொடங்கியது.

இந்த நோயின் தீவிரம் கருதியும் மீளவும் மக்கள் கோவில்களை அதிகம் நம்பினார்கள். அதனால் தான் மாரியம்மன் கோவில் பிளேக் மாரியம்மன் கோவில் என்று மாற்றப்பட்டது. அதனாலேயே, கோயபுத்தூரில் மட்டும் இரண்டு பிளேக் மாரியம்மன் கோவில் இருக்கிறது.

குறிப்பாகவே மாரியம்மன் கடவுள் நோய்களில் இருந்து காப்பாற்றுபவராக கருதப்படுவார். இன்னும் கிராமப்புறங்களில் அம்மை போன்ற நோய்களுக்கு இந்த கடவுளின் கோபமே காரணம் என்று நம்பப்பப்படுவதுண்டு.

மாரியமன்னுக்கு உகந்ததாக வேப்பிலையும், மஞ்சலுமே பின்பற்றப்படுகிறது. அதனாலேயே இன்னும் கிராமங்களில் வேப்பில்லையை கடவுள் பிரசாதமாக கருதி கிருமி நாசினியாக அதிகளவில் பயன்படுத்துகிறார்கள்.

பிளேக் மாரியம்மன் கோவிலாக மாறிய கதை இன்றும் உயிர்ப்புடன் இருக்கிறது." அன்று நோய் தீவிரம் அடைந்த பிறகு வீட்டிலிருக்கும் நபர்கள் குழந்தைகளுடன் காடுகளுக்கு சென்று விடுவார்கள். இறந்த எலியை பார்த்தால் நோய் வரப்போகிறது என்று பயந்து வீட்டை விட்டு வெளியேறுவார்கள். அப்போது மாரியம்மன் கோவிலை நிர்வகித்த குடும்பத்தினர் கடவுளிடம் சரணடைவோம் என்று மாரியம்மன் கோவிலை பிளேக் மாரியம்மன் என்று மாற்றி வழிபட ஆரம்பித்தனர். "

அப்போது ஏற்பட்ட பிளேக் நோயின் தீவிரத்தை பற்றி பலர் தமிழில் புத்தக வடிவிலும், பாட்டு வடிவிலும் கொண்டு வந்தனர். சிந்து பாடல்கள், காலான பாட்டு புத்தகம், தந்தானே பாடல்கள் என பிளேக் பற்றி விவரிக்கும் பாடல்கள் நிறைய இருக்கின்றன.

நாட்டுப்புற வரலாற்றாசிரியர் ஏ.கே. பெருமாள் கூறும் போது,

இந்த பிளேக் நோயை பற்றி விரிவாக *46* பக்கத்தில் பிளேக் சிந்து என்ற பெயரில் அந்தோனி முத்து பிள்ளை என்ற ஒருவர் வெளியிட்டார். அது தேனிக்கு அருகில் உள்ள கம்பம் பகுதியில் பிளேக் நோயினால் எப்படி பாதிப்பு இருந்தது என்று கூறுகிறது.

எப்படி இப்பகுதிக்கு கோயம்புத்தூரில் இருந்து பிளேக் பரவியது என்று அழகாக *46* பக்க புத்தகம் கூறுகிறது.

இந்த புத்தகத்தில் "கருப்பு ராவுத்தர்" என்ற தலைப்பில் ஒரு பாடல் வருகிறது. அதில் ஒரு முஸ்லிம் பெரியவர் எவ்வாறு பிளேக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செலவளித்து மருந்துகள் வாங்கி கொடுத்தும், தனியாக ஆட்களை வேலைக்கு வைத்தும் உதவி செய்தார் என்று குறிப்பிடுகிறது.

இப்படி தமிழகம் ஏற்கனே ஒரு பெரிய தொற்று நோயை எதிர்கொண்டு மீண்டு வந்திருக்கிறது. இப்போதும் அதிக பாதிப்பில் லாமல் கொரோனாவிலிருந்தும் மீள்வோம் என்று நம்புவோம். பிரார்த்திப்போம்.

(SOURCE - WIRE 20.04.2020)

# இந்தியாவில் கொரோனா வைரஸை காட்டிலும் வெறுக்கப்படும் முஸ்லிம்கள்

இந்தியாவில் கொரோனா பரவுதல் ஜனவரி 30ம் தேதி தொடங்கியது. அதன் பிறகு ஆங்காங்கே பலர் கொரோனாவினால் பாதிக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், மார்ச் 30க்கு பிறகு டெல்லியில் நடைபெற்ற தப்லீக் ஜமாத் மாநாடு மட்டும் பெரும் சர்ச்சையாக மாற்றப்பட்டது.

தப்லிக் ஜமாத் மாநாடு மார்ச் 10-15 வரை நடைபெற்றது. அதன் பிறகு இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு அடுத்த 21 நாட்களுக்கு மார்ச் 23ம் தேதி பிறப்பிக்கப்பட்டது. தப்லீக் ஜமாத் மாநாடு நடந்த காலத்திலும் இந்தியா முழுக்க பல்வேறு மத நிகழ்வுகள் நடந்து கொண்டு தான் இருந்தன. நமது நாடாளு மன்றமும், சட்டமன்றமும் கூட நடந்து கொண்டு தான் இருந்தன.

ஆனால், தப்லீக் ஜமாத் மாநாடு விவகாரம் முஸ்லிம்களின் மீது திருப்பப்பட்டு இன்று வரை டிவிட்டரில் coronajihad, Biojihad என்ற பெயரில் பல்வேறு விஷம கருத்துகள் பரப்பப் பட்டு வருகின்றன. தப்லீக் ஜமாத் மாநாடு நடத் தப்பட்டது. தப்லீக் ஜமாத்தின் அறியாமையின் விளைவு தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று தான் பெரும்பாலான முஸ்லிம்களும் கூட கருத்து தெரிவித்தனர்.

இதுவரை coronajihad என்ற அடையா ளத்தை பயன்படுத்தி டிவிட்டரில் மூன்று லட்சம் (3,00,000) தடவை பதிவுகள் போடப்பட்டிருக் கிறது. இந்த பதிவுகளை மொத்தம் 16.5 கோடி (165000000) மக்கள் பார்த்துள்ளனர். (washington post: 07.04.2020)

தாயின் இந்து மத இறுதி சடங்கு: 26000 பேருக்கு கரொனா தொற்று இருக்கக்கூடும் என தனிமைப்படுத்தல்

தப்லிக் ஜமாத் மாநாட்டினால் மட்டும் இந்தியாவில் கொரோனா தொற்று ஏற்பட வில்லை. பல்வேறு மத நிகழ்வின் காரண மாகவும் கொரோனா தொற்று ஏற்பட்டிருக் கிறது.

மார்ச் 17 ம் தேதி துபாயிலிருந்து இந்தியா வந்த சுரேஷ் என்ற நபர் தனது இறந்த தாய்க்கு இந்து மத முறைப்படி இறுதி சடங்கு நிகழ்ச்சியை மார்ச் 20ம் தேதி நடத்தினார். இந்நிகழ்ச்சியில் ஆயிரம் பேருக்கு மேல் கலந்து கொண்ட னர். இதன் பிறகு மார்ச் 25ம் தேதி சுரேசுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட பிறகு இவர் நெருங்கிய வட்டா ரத்தில் சோதனை நடத்திய போது 22 பேரில் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டது. இதனை தொடர்ந்து அந்நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களின் தொடர்புகள் என மொத்தம் 26,000 நபர்கள் மத்தியபிரதேசத்தின் மொரெனா நகரில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப் பட்டனர். இதன் பிறகு இந்த நிகழ்ச்சி தொடர் பானசெய்திகள்ஊடகங்களில்வெளிவரவில்லை. (Firstpost 04.04.2020)

ஒரு சீக்கிய மத குருவால் 40,000 பேர் கொரொனா தொற்று இருக்கக்கூடும் என தனிமைப்படுத்துதல்

இத்தாலியில் இருந்து இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்துக்கு வந்த பல்தேவ் சிங் 70, மார்ச் 18ம் தேதி உயிரிழந்தார். இவர் இறப்புக்கு காரணம் கொரோனா வைரஸ் தான் என பின்பு கண்டறியப்பட்டது.

இத்தாலியில் இருந்து வந்த பல்தேவ் சிங்கிற்கு சுய தனிமைப்படுத்துதலை செய்து கொள்ளுங்கள் என அதிகாரிகள் கூறியும் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்திருக்கிறார்.

மார்ச் 10- 12 வரை நடைபெற்ற ஹொலா மொஹல்லா திருவிழாவில் பங்கேற்றிருக்கிறார். இத்திருவிழாவுக்கு நாளுக்கு 3 லட்சம் மக்கள் கூடுவார்கள். இவரது இறப்புக்கு பிறகு கிட்டத் தட்ட 20 கிராமங்களை சேர்ந்த 40,000 நபர்கள் கொரொனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற காரணத்திற்காக தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர்.

மார்ச் 29ம் தேதி கணக்கின்படி, சீக்கிய புனித ஸ்தலமான முக்கிய கோவில்கள் ஏதும் மூடப்படவில்லை. இதைப்பற்றி சீக்கியத்

தலைவரிடம் கேட்ட போது. எங்கள் கோவில்களை நாங்கள் எப்போதும் மூடுவதில்லை. ஆனால், கொரோனா பாதிப்பால் மக்கள் வருகை பெருமளவு குறைந்திருக்கிறது என்றார். இந்த சம்பவத்தை பற்றியான செய்திகளும் பின்னாட்களில் வெளிவரவில்லை. ( bbc news 29.03.2020)

இது போல இன்னும் பல இஸ்லாம் அல்லாத மத நிகழ்கவுகள் காரணமாகவும் கரொனா தொற்று ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அவையெல்லாமல் பிரச்சனையாக்கப்படாமல் முஸ்லிம்கள் மட்டும் பிரச்சனையாக்கப்படுகிறார்கள் என்றால் முஸ்லிம்கள் குறி வைக்கப்படுகிறார்கள் என்று நாம் புரிந்து கொள்ள முடியும்.

சீக்கிய மத நிகழ்வாகட்டும், இந்து மத நிகழ்வாகட்டும், கிறிஸ்துவம், இஸ்லாம் என எந்த மத நிகழ்வாகட்டும் அதன் மூலம் கொரோனா தொற்று நிகழ்கிறது என்றால் நாம் பரிதாப்பப் பட வேண்டும். அந்த நிகழ்வை நடத்த அனுமதி அளித்த அரசை நோக்கி கேள்வி எழுப்ப வேண்டும்.ஆனால், அந்த மதத்தை குற்றவாளியாக்கினால் அது மிகப்பெரும் மூடத்தனம். இதுவே தற்போது இந்தியாவில் நடந்து வருகிறது.

## முஸ்லிம்களின் மீது வெறுப்பை ஏற்படுத்தும் போக்கு

முஸ்லிம்கள் மீது பழி சுமத்தி டிவிட்டர், வாட்சாப் போன்ற சமூக வலைத்தளங்களில் போலியான தவறான செய்திகளுடன் பதிவுகள் வருகின்றன. இது இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் பரவி முஸ்லிம்கள் மீதான வெறுப்பு அதிகமாக்கப்படுகிறது. அதற்கு சமீபத்தில் நடந்த சில சம்பவங்கள் உதாரணங்களாக இருக்கின்றன.

இதனை வெறும் சமூக வலைத்தளங்கள் மட்டும் செய்யவில்லை. பல்வேறு ஊடகங்களும் இதனை செய்தனர். தேசிய ஊடகமாக அறியப்படும் இந்தியா டுடே கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை காட்டிட முஸ்லிம்களின் தலைப்பாகையை உபயோகித்து கொரோனாவுடன் முஸ்லிம்களை சித்தரிப்பது போல ஒரு புகைப்படத்தை வெளியிட்டார்கள். பெரும் ஊடக நிறுவனங்களும், அரசியல் தலைவர்கள் கூட பொய்யான தகவல்களை வெளியிட்டு முஸ்லிம்களின் மீது வெறுப்பை அதிகப்படுத்தினர். (washington post 07.04.2020)

இந்த வெறுப்பின் காரணமாகவே இந்தியா முழுவதும் முஸ்லிம்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகினர்.

நம் தமிழகத்தில் உள்ள திருப்பூரில் ஒரு முஸ்லிம் கர்ப்பிணி பெண்ணுக்கு முஸ்லிம் என்ற காரணத்தால் மருத்துவம் பார்க்க முடியாது என்று திருப்பி அனுப்பப்பட்டார்.

ராஜஸ்தான் மாவட்டத்தில் முஸ்லிம் கர்ப்பிணி ஒருவரை முஸ்லிம் என்ற காரணத்தினால் மருத்துவமனையில் அனுமதிக்க மறுத்து குழந்தை ஆம்புலனசில் பிறந்து இறந்தது.

ஏப்ரல் 3ம் தேதி, ஹிமாச்சல் மாநிலத்தை சேர்ந்த முஹம்மத் தில்சாத் என்ற முஸ்லிம் ஒருவர் தப்லீக் ஜமாத் உடன் தொடர்பு வைத்துக்கொண்டார் என்று கூறி ஒட்டுமொத்த கிராமும் அவரை ஒதுக்கி விட அந்த நபர் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் இறப்பிற்கு பிறகு அவருக்கு கொரோனா தொற்று இல்லையென்று மருத்துவமனையில் அறிவிக்கப்பட்டது.

இதுபோல் ஊடகங்களில் செய்தி வராமல் நாடு முழுக்க பல்வேறு பகுதிகளில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் நடைபெற்று வருகின்றன.

பிரதமர் மோடி, ஏப்ரல் 5ம் தேதி இரவு 9 மணிக்கு 9 நிமிடம் விளக்கு அணைக்கச் சொன்னார். இதனை பல்வேறு எதிர்கட்சிகள் உட்பட பல்வேறு பிரிவினர் விமர்சித்தனர். அதனை பின்பற்றாமலும் இருந்தனர். ஆனால், முஸ்லிம் என்பதற்காகவே விருப்பம் இல்லாவிட்டாலும் நாம் இப்பகுதியில் வாழ வேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் தங்கள் வீடுகளில் விளக்குகளை அணைத்ததாக சமூக வலைத்தளங்களில் எழுதினார்கள்.

விளக்குகளை அணைக்காமல் இருந்ததற்காக கர்நாடகாவில் ஒரு மசூதி சூரையாடப்பட்டது. இப்படியான சம்பவங்களும் நடந்து கொண்டு தான் இருந்தன.

இந்தியா தனது பல்லாண்டு பெருமையை இழந்து வகுப்புவாத நாடாக மாறிக் கொண்டிருக்கிறது. இதனை மோடி தலைமையேற்று செய்து கொண்டிருக்கிறார். இதில் பங்கேற்றுக் கொள்பவர்களில் நீங்களும் ஒருவர் என்றால் வெட்கப்பட்டு கொள்ளுங்கள்.

-அபூ சித்திக்

இந்தியா மட்டுமல்ல உலகளவில் கொரோனா பெரும் அச்சத்தை உருவாக்கியிருக்கிறது. மக்கள் தங்கள் வீடுகளுக்குள் முடங்கி கிடக்கிறார்கள். மருத்துவர்களுக்கோ கொரோனாவுக்கான மருந்தை கண்டுபிடிப்பதில் எந்த முன்னேற்றமும் இல்லை.

ஆனால், நம் நாட்டின் ஆட்சியாளர்களும், சாமியார்களும் கொரோனாவா கவலையில்லை இதை செய்யுங்கள் போதும் என பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

மாட்டு மூத்திரத்தை குடித்தால் போதும் கரோனா வராது என்று பாஜகவை சேர்ந்த பல தலைவர்கள் கூறினார்கள். அதை தொடர்ந்து இந்து மகாசபா மாட்டு மூத்திர விருந்து என்று ஏற்பாடு செய்து கெத்து காட்டியது.

மத்திய அமைச்சர் ஒருவர் கொரோனா போ, கொரோனா போ வென போராட்டம் செய்து கொரோனாவை விரட்ட முயன்று வீடியோ எடுத்து வெளியிட்டார்.

மாட்டு மூத்திரத்துடன், மாட்டுச்சாணியும் கொரோனாவை போக்கும் என சொல்லி விருந்தில் மாட்டுச்சாணியும் இணைத்து கொண்டார்கள் சிலர்.

இதற்கிடையில் ISKON என்ற பெரிய கல்வி நிறுவனம் கொரோனாவிலிருந்து தப்பிக்க கல்லூரிக்குள் நுழையும் போது மாட்டு மூத்திரத்தால் கை கழுவி நுழைய வேண்டும் என்று உத்தரவிட்டு வாசலில் மாட்டு மூத்திரத்தை வைத்தது.

அதன் தொடர்ச்சியாக தற்போது பிஜேபியை சேர்ந்த சுகாதரத்துறை அமைச்சர் அஸ்வினி குமார் மதியம் 11 மணி முதல் 2 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் சூரிய வெயிலில் 10 நிமிடம் உட்கார்ந்தால் கொரோனா வராது என்று சொல்லியிருக்கிறார்.

இப்படி நாளுக்கு நாள் அரசு பொறுப்பில் இருப்பவர்களே இப்படி பேசுகிறார்கள். காவல்துறையினர் வதந்திகளை பரப்புவோர் மீது தற்போது கடுமையாக நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். ஆனால் வதந்தியை உருவாக்குபவர்கள் அரசு அதிகாரிகளாக இருக்கும் போது அமைதியாக இருக்கிறார்கள்.

**மக்களை அரசு சரியான பாதையில் வழிநடத்த வேண்டும். அதற்கு மாறாக அரசின் ஒரு பகுதியாக இருக்கும் அமைச்சர்களே மக்களை தவறாக வழிநடத்துகிறார்கள்.**

**உலகமே கொரோனாவை கண்டு பயந்திருக்கும் மாட்டு மூத்திரத்தை கையில் ஏந்தி திரியும் சங்கிகளை சிறைப்படுத்த வேண்டும்.**





# ஊரடங்கு

## மக்களின் உரிமைகளை பறித்து சிறையில் தள்ளுவதற்காக அல்ல

### - திரை பிரபலங்கள்

டெல்லியில் பிப்ரவரி மாத இறுதியில் முஸ்லிம்களுக்கெதிராக பெரிய கலவரம் நிகழ்த்தப்பட்டது. இதில் 53 பேர் உயிரிழந்தனர். இந்த கலவரத்திற்கு காரண மானவர்களை கைது செய்ய வேண்டும் என்று அனைவரும் குரல் கொடுத்து வந்த நிலையில் பாதிக்கப்பட்டோர்களையும், அவர்களுக்காக குரல் கொடுக்கும் சமூக ஆர்வலர்களையும் டெல்லி காவல்துறை கைது செய்து வருகிறது. அதிலும், குறிப்பாக கலவரங்களுக்கு பிறகு உதவி புரிந்து வந்த ஜாமியா மில்லியா கல்லூரியின் இரண்டு மாணவர்களையும் கைது செய்திருக்கிறது டெல்லி காவல்துறை.

காவல்துறையின் இந்த அடக்குமுறைக்கு எதிராக அனுராக் கஷ்யாப், விஷால் பரத்ராஜ், மஹேஷ் பட் உட்பட பிரபல திரைப்பிரபலங்கள் 20 பேர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள்.

அதில், இந்த மிக மோசமான நோயின் அச்சுறுத்தலில் இருந்து வெளிவர முயற்சித்து கொண்டிருக்கும் காலத்திலும் மக்களின் அடிப்படை உரிமையை பறிக்கும் வேலையை காவல்துறை செய்யக்கூடாது.

போராடும் உரிமை அரசியலமைப்பு கொடுத்திருக்கிறது. ஆனால், போராட்டங் களில் கலந்து கொண்டார்கள் என்பதற்காக கைது செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏற்கனவே முஸ்லிம் சமூகத்தின் மீது அடக்குமுறைகள் ஏவப்பட்டு வருகிறது. கலவரத்தின் மூலம் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பெரும் இழப்புக்கு உள்ளாகியிருக் கிறார்கள். அவர்களின் மீது இன்னும் அடக்கு முறைகள் செலுத்த கூடாது.

மாணவர்கள் தினந்தோறும் காவல் நிலை யத்துக்கு விசாரனை என்று அழைத்து செல்லப் படுகிறார்கள். பிறகு சிலர் சிறைக்கு தள்ளப் படுகிறார்கள். அவர்களுக்காக குரல் கொடுக் கும் சமூக ஆர்வலர்களும் சிறையில் அடைக் கப்படுகிறார்கள். ஊரடங்கு என்பது மக்களை காப்பதற்காக போட்டப்பட்டிருக்கிறது. மக் களின் உரிமைகளை நசுக்குவதற்காக அல்ல.

கைது செய்யப்பட்ட மாணவர்களையும் சமூக ஆர்வலர்களையும் விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்."

**கொரோனா நோய்த் தடுப்புக்காக போடப்பட்ட ஊரடங்கில் வட இந்தியாவில் சமூக ஆர்வலர்கள் பலர் காவல்துறையினரின் அடக்குமுறைக்கு ஆளாகியிருப்பது பெரும் சர்ச்சையை உருவாக்கி வருகிறது.**




## டெல்லி முஸ்லிம்கள் முதலமைச்சர் கேஜிரிவாலுக்கு எழுதிய கடிதம்

**அன்புள்ள கேஜிரிவால் அவர்களே, எங்களுக்கு வேண்டாம் உங்கள் பெருநாள் வாழ்த்துகள்.**

### டெல்லி முஸ்லிம்களின் கடிதம்

*டெல்லியில் பிப்ரவரி 24,25,26 (2020) ஆகிய தேதிகளில் வகுப்புக் கலவரங்கள் என்ற பெயரில் மிகப்பெரியதொரு இனப்படுகொலை நடைபெற்றது. இந்த இனப்படுகொலையின் பலிகள் முஸ்லிம்கள்.*

*இதனைப் பற்றி மனித உரிமை ஆர்வலர் ஹர்ஷ் மந்திர் அவர்கள் இந்து பத்திரிகையில் எழுதிய கள ஆய்வு ஒன்றை நாம் வைகறை வெளிச்சம், ஏப்ரல் 2020 இதழில் வெளியிட்டி ருந்தோம்.*

*அங்கு சென்று வந்த பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்களும் தகவலைத் தந்திருந்தார்கள்...*

*அதில் ஹர்ஷ் மந்திர் அவர்கள் டெல்லி முதலமைச்சர் கேஜிரிவால் கலவரத்தின் போது எப்படி நடந்து கொண்டார் என்பதை தக்க ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினார். டெல்லி கலவரத்தின்போது டெல்லி முதலமைச்சர் கேஜிரிவால் அவர்களின் செயல்பாடுகள், முஸ்லிம்களைப் பொறுத்தவரை வெந்த புண்ணிலே பாய்ச்சிய வேலாக இருந்தன என்பதை அவர்கள் அண்மையில் கேஜிரிவால் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் வழி தெரிந்திடலாம். அந்தக் கடிதத்தை நாம் இங்கே தருகின்றோம்.*

*இந்தக் கடிதம் கேஜ்ரிவால் அவர்கள் முஸ்லிம்களுக்குச் சொன்ன ரமழான் வாழ்த்தின் எதிரொலி..!*

*அந்த ரமழான் வாழ்த்தை ஏற்க மறுத்து விட்டார்கள் முஸ்லிம்கள்.*

கெழுதகு கேஜிரிவால் அவர்களே! உங்கள் ரமழான் வாழ்த்துகளை (பெருநாள் வாழ்த்து களை) எங்களால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. நாங்கள் ஒருவடைய வாழ்த்துகளை வேண்டாம் எனச் சொல்லிடும் அளவிற்கு நாகரிகமற்ற வர்களோ, இங்கிதமற்றவர்களோ அல்ல. ஆனால், உங்களுடைய பெருநாள் வாழ்த்துகளை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதை

வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காரணம்,

*1)* பாரதீய ஜனதா கட்சியின் மதவெறியர்கள், கபில் மிஸ்ரா, அனுராக் தாக்கூர், பர்வேஷ் வர்மா ஆகியோரின் விஷம் கக்கும் பேச்சுக்களைத் தாராளமாக அனுமதித்தீர்கள். அவர்கள்தாம் டெல்லியின் சூழலை விஷமேற்றி கொலைகளைச் செய்யத் தூண்டினார்கள்.

*2)* இவர்கள் முஸ்லிம்களின் மேல் விஷத்தையும் வன்மத்தையும் ஏவிவிட்டார்கள். இவர்கள் மீது நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நிச்சயமாக நாங்கள் அறிவோம் டெல்லியின் காவல்துறை உங்கள் கட்டுப்பாட்டில்இல்லை. ஆனால், உங்களிடம்தான் உள்துறை இருந்தது. அதேபோல் சட்டத்துறையும் உங்கள் கையில்தான் இருந்தது. நீங்கள் இந்த மூன்று ஆபத்தான தனி மனிதர்கள் மீது (FIR) முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்திருக்கலாம். இதை நீங்கள் டெல்லி காவல்துறையின் சார்பிலேயே செய்திருக்கலாம். அதை நீங்கள் செய்யவில்லை.

ஆனால், நீங்கள் கண்ணைய்யா குமார் மீது தேசத் துரோக வழக்கை நடத்திட அனுமதி வழங்கினீர்கள். அதே நேரத்தில் இந்த மூன்று வெறிப்பிடித்த விஷமிகள் மீதும் ஒரு சிறு புகாரைக் கூட பதிவு செய்திடவில்லை.

*3)* மேற்கு டெல்லியில் 24-பிப்ரவரியில் நடந்த கொலை வெறித் தாக்குதலை அனுமதித்தீர்கள். ஆனால், இன்றளவும் அந்த இடத்தைச் சென்று பார்த்திடவில்லை. அதுபோலவே வகுப்புக் கலவரத்திற்கு பலியானவர்களைச் சென்று பார்த்திடவில்லை.

*4)* நீங்கள் பாரதீய ஜனதா கட்சியின் பிரச்சாரத்தை நம்பினீர்கள். அந்தப் பொய்களுள் ஒன்று மத்திய உள்துறை அதிகாரி ஒருவர் கொலை செய்யப்பட்டதில் ஒரு முஸ்லிம் கவுன்சிலருக்குத் தொடர்புண்டு என்பது. இதையும் நீங்கள் கண்ணைப் பொத்திக் கொண்டு நம்பினீர்கள். அவரை கைதும் செய்தீர்கள். அவர் தனக்கும் அந்தக் கொலைக்கும் சம்மந்தமில்லை என்பதற்கு பல ஆதாரங்களைத் தந்தார்கள்.

*5)* அந்த மத்திய உளவுத் துறையின் அதிகாரியின் குடும்பத்திற்கு, ஒரு கோடி ரூபாயை தருவதாக அறிவித்தார்கள். ஆனால் அந்தக் கலவரத்தில் கலவரக்காரர்களால் கொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களைப் பற்றிக் கவலைப்படவில்லை.

*6)* வரலாறு காணாத அளவில் ஆறு பள்ளிவாசல்களையும் நான்கு புனித ஸ்தலங்களையும் இடித்துத் தகர்த்துத் தரைமட்டம் ஆக்கினார்கள். இவற்றில் ஒன்றைக் கூட நீங்கள் சென்று பார்க்கவில்லை. நீங்கள் மட்டுமல்ல உங்கள் அமைச்சர்களில் ஒருவர் கூட சென்று பார்க்கவில்லை.

*7)* டெல்லி அரசாங்கம், வீடுகளை இழந்த அலைக்கழிந்த முஸ்லிம்களுக்கு ஒரு தங்குமிடத்தை ஏற்படுத்தித் தந்திடவில்லை. ஆனால் நீங்கள் எங்கள் வக்ஃப் போர்டு ஏற்படுத்தித் தந்த தங்குமிடங்களைக் கொண்டு பெருமை கொண்டீர்கள்.

*8)* கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ரூபாய் ஒரு கோடியை வக்ஃப் போர்டு தலைவர் (Chairman) வசூலித்தார். அது பாதிக்கப்பட்ட மக்களை வந்து சேருவதற்கு முன்னால், நிங்கள் "அவர் தனது எல்லையைக் கடந்து விட்டார்" என்று கூறி அவரைத் தடுத்து விட்டீர்கள். அத்தோடு அவரை வக்ஃப் போர்டு தலைவர் பதவியிலிருந்து அகற்றியும் விட்டீர்கள். அதற்குப்பொடு போக்குத் தனமாகச் சில காரணங்களைச் சொன்னீர்கள். இதனால் அனைத்தையும் இழந்த அறுபது குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கூட கிடைக்காமல் போய் விட்டது.

*9)* (வஃக்ப் போர்டு என்ற) வஃக்ப் வாரியத்தால் நியமிக்கப்பட்ட இமாம்களுக்கு ஐந்து மாதங்களாக (சம்பளம்) ஊதியம் தந்திட வில்லை. நாங்கள் பலமுறை உங்களிடம் முறையிட்டோம். நீங்கள் கண்டுகொள்ளவில்லை. ஐந்து மாதங்களுக்குப் பின்னரே அவர்களுக்கு ஊதியம் கிடைத்தது.

*10)* (வஃக்ப் போர்டு) - வஃக்ப் வாரியத்தில், தற்காலிக ஊழியர்களாக நியமிக்கப்பட்ட பலருக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. நீங்கள் தேர்தலுக்கு முன், ஆணை வழங்கிடுவோம்

என வாக்களித்தீர்கள். ஆனால் அது இன்னமும் (நிறைவேற்றப்படவில்லை) அப்படியே இருக்கின்றது. உங்களுடைய அதிகாரிகள், பாரதீய ஜனதா கட்சியின் ஆலோசனையின் கீழ், வஃக்ப் வாரியத்தை அழிவில் அமிழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

*11)* கொரோனா கொள்ளை நோயைப் பயன் படுத்தி தப்லீக் ஜமாஅத்தையும், அதன் வழி முஸ்லிம்களையும் பழித்தீர்கள். தொலைக் காட்சிகள், முஸ்லிம்கள்மேல் தீவிரவாதத்தைக் கட்டவிழ்த்திட ஒருபெரும் பிரச்சாரப் போரைத் தொடுத்தன. அதைத் தடுக்கவோ பலவீனப் படுத்தவோ நீங்கள் எதையும் செய்யவில்லை. (அதை ஆதரிக்கவே உதவி செய்தீர்கள்)

*12) (2000)* இரண்டாயிரம் தப்லீக் ஜமாஅத்தை சார்ந்தவர்களை நீங்கள் தடுப்புக் காவலில் வைத்தீர்கள். அவர்களைக் கொண்டு தான் 30% கொரோனா பரவுகின்றது என்றீர்கள். சொல்லொண்ணா தொந்தரவுகளுக்கு ஆளாக் கினீர்கள். இந்தத் தொந்தரவுகள் இரண்டு மாதங்கள் தொடர்ந்தன. அவர்களின் பெரும் பாலோரக்குத் தொற்று இல்லை என்பது தெரிய வந்தது. தொற்று இருந்ததாகச் சொல்லப்பட்ட வர்களுக்கு என்ன வைத்தியம் செய்தீர்கள் என்பதை நாங்கள் திரும்பத் திரும்பக் கேட்ட பிறகும் நீங்கள் சொல்லிடவில்லை. (தொற்று இல்லாத சிலர், உணவு நீர் போன்றவைக் கிடைக்காமல் மரணித்தார்கள். மேட்டுப்பாளை யத்தைச் சார்ந்த பொறியாளரும், அதில் ஒருவர். இன்னாலில்லாஹி. அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக. சொர்க்கத்தைத் தருவானாக)

*13)* 70% சதவிகிதம் கொரோனா யாரால் பரவியது என்பதை நீங்கள் வெளிப்படுத்த வில்லை. ஆனால் அந்த 30% சதவிகிதம் பற்றியே அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தீர்கள். (காரணம் முஸ்லிம்களைப் பழிக்க அது பயன்பட்டது)

*14)* விஷத்தை உமிழும் உங்களுடைய கொள்கைகளில் டெல்லியில், முஸ்லிம் காய்கறி வியாபாரிகள் கீழ்த்தரமான பாகுபாடுகளக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அவர்களை வீதியிலே வைத்து அடித்துத் துவைத்தார்கள். அவர் களுடைய காய்கறிகளையும், பழங்களையும் கொள்ளை அடித்தார்கள். இந்த ஏழை வியாபாரிகள் தாக்கப்படுவதைத் தடுத்திட நீவிர் எதையும் செய்யவில்லை. ஓர் அனுதாப வார்த்தையைக் கூட சொல்லவில்லை.

*15)* கொரோனாவின் பெயரில் நடந்த ஊரடங்கின்போது டெல்லி கலவரத்தின் பலிகடாக்களான முஸ்லிம்கள்மேல், குரூரமான கொடுமைகளை நரக வேதனைகள் கட்டவிழ்த் திடப்பட்டன. முஸ்லிம் இளைஞர்கள், முஸ்லிம் குழந்தைகள் இவர்களெல்லாம் கூட காவல்துறை யினரால் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் நீங்களோ வாய்மூடி மௌனமாக இருந்தீர்கள்.

இப்போது சொல்லுங்கள் யார் இதுபோன்ற சூழலில் (ஈத்-ஐ) பெருநாளை கொண்டாடு வார்கள். இன்னும் எத்தனை முகங்கள் உண்டு உங்களுக்கு. உங்களின் உண்மை நிறங்களும், முகங்களும் எங்களுக்குத் தெரிந்திட வில்லை. உங்கள் முழு நிறமும் வெளிப்பட இன்னும் நான்கு நீண்ட ஆண்டுகள் இருக்கின்றன. மத்தியிலிருக்கும் பாரதீய ஜனதாவின் ஆட்சி காலத்தைப்போல்.

மேலே சொன்ன காரணங்களால் உங்கள் மீது நாங்கள் வைத்திருக்கும் எல்லா எதிர்பார்ப்பும் தூள் தூளாக பறந்துபோயின. இந்நிலையில் வஞ்சகத்தனமாக பெருநாள் வாழ்த்துகளால் வாழப் போவதென்ன.

இந்தப் பெருநாள், 40 நாள்கள் பீதி நிறைந்த ஊரடங்கிற்குப் பிறகு வந்திருக்கின்றது. முஸ்லிம்கள் தங்கள் பள்ளிவாசல்களில் தொழுகையை நிறைவேற்றிட இயலாத நிலை. இந்நிலையில் உங்கள் பெருநாள் வாழ்த்துகளை ஏற்றிட இயலவில்லை என்பதினால் இழப்பதற் கும் எதுவுமில்லை.

முன்னரே சொன்னார்

**நாங்கள் வாழ்த்துகளை வேண்டாம் எனச் சொல்லிடும் நாகரிகமற்றவர்களல்ல, மகிழ்ச்சியே இல்லாத இந்தப் பெருநாளில், உங்கள் பெருநாள் வாழ்த்துகளைத் திரும்பத் தருகின்றோம். உங்களுக்குப் பெருநாள் வாழ்த்துகள்.**

- MMN

9 வயதான உவைஸ், வீடுகளில் இருக்கும் ஐந்து ஜன்னல்களின் வெளிச்சம் கண்ணில் பட்டுவிடக் கூடாது என பெரிய போர்வையில் தன்னை எப்போதும் போர்த்தியவாறு படுத் திருக்கிறான். கண்ணுக்கு மருந்திட வேண்டும் என அவன் அப்பா ஃபயாஸ் போர்வையை நகர்த்தி எழுப்ப முயன்றால், " போர்வையை எடுக்காதீர்கள். என்னால் வெளிச்சத்தை பார்க்கமுடியவில்லை. வெளிச்சம் படபட என் வலி அதிகரிக்கிறது. தயவு செய்து என்னை விடுங்கள்" என்று அலறி விட்டு போர்வைக்குள் சென்று விடுகிறான்.

உவைஸின் அம்மா ஆமினா சொல்லும் போது, இராணுவத்தினர் நடத்திய அந்த தாக்குதலுக்கு பிறகு என் மகனது கண் மட்டு மல்ல அவனது மனதும் பெரிதளவு பாதிக்கப் பட்டிருக்கிறது. அவனுக்கு அவனே அதிகமாக கோவப்படும் சிறுவனாக மாறிவிட்டான். இரவில் தீடிரென எழுந்து இராணுவத்தினர் தாக்குவதாக கூறி அழுது கொண்டே இருக் கிறான். என் மகனை எங்களால் இந்த நிலையில் பார்க்க முடியவில்லை என்று அந்த தாய் அழுகிறார்.

இவ்வளவு கொடுமைகளை அனுபவிக்க வெறும் ஒன்பது வயதான உவைஸ் என்ன தவறு செய்தான்? அதுவும் துப்பாக்கி ஏந்தி கொண்டு பெல்லட் குண்டுகளால் குறி வைத்து கண்ணில் தாக்கும் அளவுக்கு என்ன தவறு செய்தான்?..

அதற்கு பதில், அருகிலிருக்கும் பகுதிக்கு குளிக்க சென்றிருந்தான். ஆம், காஷ்மீரில் வீட்டை விட்டு வெளியேறியவர்கள் வீட்டுக்கு திரும்பும் போது அதே நிலையில் திரும்புவதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

தனக்கு நேர்ந்த கொடுமையை சிறுவன் உவைஸே கூறுகிறான்,

"அன்று அருகில் குளிப்பதற்காக சென்றிருந் தோம். திடீரென சத்தம் வந்ததும் அங்கே இராணுவத்தினர் இருந்தனர். எதிர்தரப்பில் இராணுவத்தினரின் சோதனையை எதிர்த்து கற்களை வீசினார்கள். நான் வேறு புறம் ஓடி வந்து விட்டேன். ஒரு மசூதிக்கு வெளியே வந்து நிற்கும் போது இராணுவத்தினர் எனக்கு மிக நெருக்கமாக இருப்பது தெரிந்தது. எனக்கு அருகே வந்த இராணுவ வீரர் எனது கண்ணில் வேகமாக சுட்டார். அவ்வளவுதான்."

உவைஸுக்கு இதுவரை நான்கு அறுவை சிகிச்சைகள் நடந்திருக்கிறது. உவைஸ் அடி பட்ட போது அவரது அப்பா ஃபயாஸ் உட்பட கிராமத்திலிருந்த பலர் இராணுவத்தின் பிடியில் இருந்தனர். இராணுவத்தினரால் கிராமம் முழுக்க வீடு வீடாக சோதனை செய்யப் பட்டது.

இந்த சோதனையின் காரணமாகவே உவை ஸுக்கு மருத்துவம் கிடைக்கவும் இரண்டு மணி நேரங்கள் தாமதமானது.

உவைஸை போல காஷ்மீரில் சிறுவர்களை வீதிக்கு வீதி காண முடியும். இந்த சிறு வயதில் உவைஸின் கண்களில் இரண்டு மெட்டல் பிளேட் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இயல்பு நிலைக்கு திரும்ப முடியவில்லை.


SOURCE: KASHMIRWALLA 02.06.2020

- அபூ சித்திக்.



# காஷ்மீர் - துயரத்தின் பூமி

# வெள்ளை மாளிகையை சுற்றி வன்முறை போராட்டம்



## பதுங்கு குழியில் அதிபர் டிரம்ப்

அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையை சுற்றி வன்முறை போராட்டம் நடைபெற்று வரும்நிலையில், மாளிகையின் பதுங்கு குழியில் அதிபர் டிரம்ப் தஞ்சமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், வன்முறையை கட்டுக்குள் கொண்டு வர 25 நகரங்களில் ஊரடங்கு அறிவிக்கப் பட்டுள்ளது. அமெரிக்காவின் மின்னபொலிஸ் என்ற இடத்தில் கருப்பின காவலாளியை சில போலீசார் கடுமையாகத் தாக்கினர். அதில், ஜார்ஜ் பிளாய்ட் என்ற இளைஞர் போலீசாரால் கழுத்தில் காலால் அழுத்தி கொல்லப்பட்டார். இதுதொடர்பான வீடியோ வெளியான நிலையில், கருப்பினத்தவர்களுக்கு எதிரான அடக்குமுறை நீடிப்பதாகக் கூறி பல்வேறு இடங்களிலும் காவலரின் மரணத்துக்கு நீதி கேட்டு போராட்டங்கள் வெடித்தன.

மின்னசொட்டா மாநிலத்தை தொடர்ந்து லாஸ் ஏஞ்சலீஸ், சிகாகோ, மியாமி உட்பட பல்வேறு நகரங்களிலும் போராட்டம் வலுவடைந்து வருகிறது. போராட்டங்களின் போது பல்வேறு இடங்களில் வன்முறைச்சம்பவங்களும் அரங்கேறின. இதனால் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதனால் அட்லாண்டா, லாஸ் ஏஞ்சலீஸ், பிலடெல்பியா, டென்வர், சின்சினாட்டி, போர்ட்லேண்ட், லூயிஸ்வில், கெண்டக்கி, ஓரேகான் ஆகிய 25 நகரங்களில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

ஆனாலும் ஊரடங்கை மீறி அப்பகுதிகளில் போராட்டம் நடந்து வருகிறது. இதனிடையே வெள்ளை மாளிகையை பொதுமக்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தடுப்புகளைத் தாண்டி முன்னேறிய அவர்கள் அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். இதனால் பாதுகாப்பு கருதி வெள்ளை மாளிகை முன் ராணுவ கவச வாகனங்கள், டேங்குகள் நிறுத்தப்பட்டிருந்தன. ஜார்ஜ் பிளாயிட்டின் மரணத்திற்கு நீதி கேட்டு அமெரிக்கா மட்டுமின்றி இங்கிலாந் திலும் போராட்டங்கள் வெடித்துள்ளன. லண்டனில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாகவும் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் ஒன்றிணைந்து ஜார்ஜ் பிளாயிட் மரணத்திற்கு நீதிகேட்டும், கருப்பின மக்களும் வாழ வேண்டும் என்று முழக்கங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே, அமெரிக்க அதிபர் டிரம்ப் தங்கியிருக்கும் வெள்ளை மாளிகையின் அருகே நிலைமை மோசமடைந்து வருவதால், பாதுகாப்பு பணியில் இருந்த ரகசிய சேவை ஏஜென்சி முகவர்கள், அதிபர் டொனால்ட் டிரம்பை வெள்ளை மாளிகையில் உள்ள பாதுகாப்பு பதுங்கு குழிக்கு அழைத்துச் சென்றனர். அதனால், டிரம்ப் அங்கிருந்தே உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். இருந்தும், வாஷிங்டன் போலீஸ் வெள்ளை மாளிகையைச் சுற்றி ஆர்ப்பாட்டம் செய்தவர்களை விரட்டியது.

தொடர்ந்து கலவரம், வன்முறை, போராட்டம் போன்ற காரணங்களால் அமெரிக்காவில் பதற்றம் அதிகரித்து வருவதால், ராணுவம் தயார் நிலையில் இருக்க அதிபர் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

- நன்றி தமிழ் முரசு

# யாரும் யாரையும் விட உயர்ந்தவர்கள் இல்லை



## இஸ்லாமியத்தில் தன்னை ஈர்த்த விஷயங்களைப் பகிர்ந்த யுவன்

இஸ்லாம் மதத்தில் உங்களுக்கு பிடித்த விஷயம் என்ன என்ற கேள்விக்கு யுவன் பதிலளித்துள்ளார்.

முன்னணி இசையமைப்பாளரான யுவன் சங்கர் ராஜா 2014-ம் ஆண்டு இஸ்லாம் மதத்தைத் தழுவினார். மேலும், அப்துல் காலிக் என்று தனது பெயரையும் மாற்றினார். 2015-ம் ஆண்டு ஷாஃப்ரூன் நிஷா என்பவரை திருமணம் செய்து கொண்டார். 2016-ம் ஆண்டு இந்த தம்பதிக்கு பெண் குழந்தை ஒன்று பிறந்தது. ஷாஃப்ரூன் நிஷா ஆடை வடிவமைப்பாளராக உள்ளார்.

சில நாட்களுக்கு முன்பு தனது இன்ஸ்டா கிராம் பக்கத்தில் ரசிகர்களின் கேள்விக்கு பதிலளிக்கத் தொடங்கினார் ஷாஃப்ரூன் நிஷா. அப்போது பலரும் யுவனின் மதம் மாற்றம் தொடர்பாக கேள்வி எழுப்பினார்கள். அதற்குத் தகுந்த பதில் அளித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து யுவனிடம் ஏதேனும் கேள்விகள் இருந்தால் கேளுங்கள், அதற்கு அவரே பதிலளிப்பார் என்று ஷாஃப்ரூன் நிஷா அறிவித்தார். அதில் யுவனிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும்:

**கேள்வி : இஸ்லாம் மதத்தில் உங்களுக்கு பிடித்த விஷயம் என்ன?**

**யுவன்:** இந்த கேள்வியைக் கேட்டதுமே என் மனதில் தோன்றிய முதல் விஷயம் யாரும் யாரையும் விட உயர்ந்தவர்கள் இல்லை என்பது தான். நாம் தொழுகைக்கு செல்லும்போது நம் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் யார் வேண்டுமானாலும் நிற்கலாம். அப்போது இவர்தான் முதலில் நிற்க வேண்டும் என்று யாருக்கும் முன்னுரிமை கிடையாது. இதுதான் என்னை முதலில் ஈர்த்த விஷயம்.

**கேள்வி: குர்ஆனில் என்ன மாதிரியான விடைகள் உங்களுக்கு கிடைத்தது?**

**யுவன்:** பொதுவாக நான்கு பேர் பேசிக் கொண்டிருக்கும்போது என்ன மாதிரியான கேள்விகள் வருமோ அவை எனக்கும் வந்தன.

நாம் இறந்தபிறகு நம் ஆன்மா எங்கு செல்கிறது? நம்மை சுற்றி ஏழை பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வுகள் ஏன் உள்ளது? இது போன்ற பலவகையான கேள்விகள் நமக்குள் வரும்? அந்த சமயத்தில் நான் குர்ஆனை எடுத்து படிக்கும்போது அதற்கான விடைகள் எனக்கு நேரடியாக கிடைத்தது போல இருந்தது.

வீட்டுக்கு ஒரு தலைவன், நாட்டுக்கு ஒரு தலைவன் இருப்பது போல உலகத்துக்கு ஒரு தலைவன் என்னும் விஷயம் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. - நன்றி தி இந்து

# புத்தகத்திலிருந்து




ஜான் பெர்க்கின்ஸ், காலனியாதிக்கம், மேற்கத்தியர்கள், ஏகாதிபத்தியம், ஜனநாயகம், மதச்சார்பின்மை, ஆங்கிலேயர்கள் போன்ற வார்த்தைகளால் அறியப்படும் வெள்ளைகிறிஸ்தவ நாகரிகத்தின் சுரண்டல், பயங்கரவாதம் போன்றவற்றையும் இதன் நிழலில் நிலை நிறுத்தப்படும் கிறிஸ்தவ மிஷினரிகளின் கிறிஸ்தவ மதமாற்றத்தையும் போட்டுடைத்தவர். இவர் எழுதிய "பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்" நூலின் மிகச்சிறிய பகுதியை (பக்கம் 82,83) எடுத்தாளப்பட்டுள்ளது.

யூது - கிறிஸ்தவ பன்னாட்டு கம்பெனிக்காக இந்தோனேஷியாவில், இவர் மேற்கொண்ட பல்வேறு தில்லுமுல்லு தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்கு இடையே, அங்கு முஸ்லிம் இளைஞர்களிடம் தேநீர் கடையில் அளவளாவிய உரையாடல் இது. (சம்பவ ஆண்டு 1971,1975)

"உண்மையான குறி இஸ்லாமிய உலகம்தான்" என்றாள், ஆங்கிலம் படிக்கும் மாணவி.

"அமெரிக்கா இஸ்லாமியர்களுக்கு விரோதி என்று நீங்கள் சொல்லவே முடியாது" என்றேன் நான் (ஜான் பெர்க்கின்ஸ்)

"ஓ இல்லையா? எப்போதிருந்து? உங்கள் வரலாற்றாசிரியர் டோன் பீ (Toyn bee) -ஐப் படித்ததில்லையா? அவர் ஓர் ஆங்கிலேயர். அடுத்த நூற்றாண்டில் நடக்கப்போகும் உண்மையான யுத்தம் கம்யூனிஸ்டுகளுக்கும், முதலாளித்துவவாதிகளுக்கும் இடையேயானதாக இருக்காது. கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையேயானதாக தான் இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்" என்றாள் அவள்.

அர்னால்ட் டோன் பீ இப்படிச் சொல்லி இருக்கிறாரா?, நான் அதிர்ச்சியுடன் கேட்டேன்.

ஆமாம், "விசாரணையில் ஒரு நாகரிகம், உலகமும் மேற்கும்" (Civilzation on trial and the world and west) படித்துப் பாருங்கள்!".

"ஆனால், இப்படி ஒரு பகைமை கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஏன் நிலவ வேண்டும்?".

"ஏனென்றால்" ஏதோ காது கேளாதவனுக்கோ, அடி முட்டாள்களுக்கோ சிரமம்பட்டு புரிய வைப்பதை போன்ற தொனியில் அவள் நிதானமாக தொடர்ந்தாள், "மேற்கு உலகம் குறிப்பாக அதற்க தலைமை வகிக்கும் அமெரிக்கா உலகம் முழுவதையும் அடக்கியாள உறுதி பூண்டுள்ளது. இதுவரை வரலாறு காணாத மாபெரும் பேரரசாக தன்னை மாற்றிக்கொள்ள முயன்று வருகிறது.சோவியத் யூனியன் குறுக்கே நிற்பது உண்மைதான். ஆனால், அதனால் தாக்குப்பிடிக்க முடியாது. டோன் பீயால் அதைபார்க்கமுடிகிறது.

சோவியத்துக்களுக்கு மதம் கிடையாது. தத்துவார்த்த பின்புலம் கிடையாது. ஆன்மாவிலும், மனிதனுக்கும் மேம்பட்ட சக்திகளிலும் நம்பிக்கை கொள்வது அவசியம் என்பதை வரலாறு காட்டுகிறது. இஸ்லாமியர்ககளான எங்களிடம் அந்த ஆன்ம பலம் உள்ளது. கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட வேறு எவரையும் விட எங்களிடம் தான் ஆன்ம பலம் அதிகம் உள்ளது. நாங்கள் காத்திருக்கிறோம். வலிமை பெறுவோம் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

மக்கள் உணவின்றி பட்டினி கிடக்கிறார்கள். நீங்களோ உங்கள் கார்களுக்கு தேவையான பெட்ரோலை பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். குழந்தைகள் குடிக்க நீரின்றி மடிந்து கொண்டிருக்கின்றன. நீங்களோ நவநாகரீக பயணிகளுக்காக (Styles) ஃபேஷன் (Fashion) இதழ்களை தேடிக் கொண்டிருக்கிறீர்கள்.

எங்களைப் போன்ற நாடுகள் வறுமையில் கழுத்தளவு மூழ்கி போயிருக்கிறோம். எங்கள் ஓலக் குரல்கள் உங்கள் செவிகளில் விழுவதில்லை. யாராவது உங்களுக்கு சொல்ல முயற்சித்தால் உடனே அவர்களுக்கு புரட்சியாளர்கள் என்றும் கம்யூனிஸ்ட்டுகள்என்றும் முத்திரை குத்துகிறீர்கள். ஒடுக்கப்பட்ட ஏழை மக்களை மேலும் மேலும் வறுமையிலும், அடிமைத்தனத்திலும் தள்ளுவதற்கு பதிலாக உங்கள் இதயங்களை திறக்க வேண்டும். காலம் கடந்து கொண்டிருக்கிறது. இன்னும் உங்களை மாற்றிக் கொள்ளவில்லை என்றால் ஒழிந்தீர்கள்.!"

# ஆர்.எஸ்.எஸ். ஊழியரின் ஒப்புதல் வாக்குமூலம்



- குடந்தை கருணா

ராஜஸ்தான் மாநிலத்தில் பில்வாரா மாவட்டத்தில் ஒரு சிறிய கிராமம் சிர்தியாஸ். அக்கிராமத்தில், 13 வயது சிறுவன், பன்வார் மேக்வான்சி. ஆர்.எஸ்.எஸ். நடத்தும் ‘சாகா’ பயிற்சியில் கலந்து கொள்கிறான். ஒடுக்கப்பட்ட, தாழ்ந்த சாதி என பிறரால் கருதப்படும் சமூகத்தில் பிறந்த அந்த தலித் சிறுவனுக்கு, இந்த பயிற்சி பள்ளியில் சமூகத்தில் இருந்த வேறுபாடு எதுவும் இல்லாமல் நடத்தப்பட்ட விதம், பெருமை அளிப்பதாக இருந்தது. அந்த பயிற்சியில் தீவிரமாக கலந்து கொண்டு குறுகிய காலத்தில் அதனை வழி நடத்தும் பயிற்சியாளராக உயர்வு பெறுகிறான். தன்னைப் போலவே, பல பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இப்பயிற்சிப் பள்ளிகளில் ஆர்வத்துடன் கலந்து கொள்வதையும் இச்சிறுவன் கவனம் கொள்கிறான்.

அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கு தனது பகுதியில் இருந்து செல்லும் கரசேவகர்கள் பட்டியிலில் இடமும் பெறுகிறான். ரயிலில் ஏனைய கரசேவகர்களோடு தனது வாழ்நாள் இலட்சியத்தை அடைந்த மகிழ்வோடு அமர்ந்திருக்கிறான். ரயில் புறப்படுகிறது. தன்னோடு வருவார்கள் என்று எண்ணிய பல தலைவர்கள் ஒவ்வொருவராக ரயிலில் இருந்து இறங்கினார்கள். சிறுவனுக்கு திகைப்பு. தனது அருகில் இருந்த சிலரிடம் கேட்டபோது, அதற்கு தெளிவான பதிலும் இல்லை. பின்னாளில்தான் மேக்வான்சிக்கு விடை கிடைத்தது.

## முஸ்லீம் மீது வெறுப்பு

அனைத்துக்கும் அவர்களே காரணம் என்பது பாலபாடமாக ’சாகா’வில் பயிற்றுவிக்கப்பட்டது. தனது கிராமப் பகுதியில் ஒரு முஸ்லீம் கூட இல்லாத நிலையில் அவர்கள் பற்றி எந்த புரிதலும் இல்லாமலே அவர்கள் மீது ஒரு வெறுப்பை அச்சிறுவன் மனதில் பதிய வைக்கிறான். அதே போன்று, சமஸ்கிருத மொழிதான் அனைத்திற்கும் மேலானது. அது கடவுளின் மொழி எனக் கற்பிக்கப்பட்டது.


இவ்வாறான நிலையில், ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் கொல்லப்படுகிறான். முஸ்லீம்களால்தான் கொல்லப்பட்டான் என பஜ்ரங்தள் அமைப்பினரால் சொல்லப்பட்டது. அந்த இளைஞனின் உடலின் சாம்பல் ஊர்வலமாக மேக்வான்சி வசிக்கும் கிராமம் வழியே செல்ல இருப்பதை அறிந்து, அதில் கலந்து கொள்ளும் தலைவர்கள் அனைவரும் தனது இல்லத்தில் உணவு அருந்திட வேண்டுகோள் விடுக்கிறான். தலைவர்கள் அதனை ஏற்றுக் கொண்டதை எண்ணி எண்ணி பெருமிதம் கொள்கிறான். தாழ்ந்த ஜாதி என அறிவிக்கப்பட்ட தனது வீட்டில் தலைவர்கள் உணவு அருந்திட உள்ளதை கிராமத்தில் உள்ள ஏனையோரிடம் மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறான்.

ஆனால், அடுத்த நாள் ஊர்வலம் செல்கிறது. தலைவர்கள் தனது வீட்டிற்கு வர மறுக்கிறார்கள். நேரம் இல்லாததால் அடுத்த ஊர் செல்லும்போது அங்கே சாப்பிடுகிறோம் என்று வாங்கிச் செல்கிறார்கள். மறுநாள் தனது நண்பன் மூலம், தலைவர்கள் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட உணவு, வழியில் சாலையில் வீசிக் கிடப்பதை அறிந்து அதிர்ச்சி அடைகிறான் மேக்வான்சி. தன்னையே வீசி எறிந்ததாக உணர்கிறான்.

இதற்கான விடை தேடலில், தான் இதுவரை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு பற்றி கொண்டிருந்த பெருமிதக் கருத்து தகர்கிறது. மாவட்ட, மாநிலத் தலைவர்கள் மட்டுமன்றி, ஆர்.எஸ்.எஸ். தலைவருக்கே விளக்கம் கேட்டு கடிதம் எழுதிய பன்வார் மேக்வான்சிக்கு கிடைத்தது ஏமாற்றமே.

தனது தந்தையார், ஆர்.எஸ்.எஸ். பயிற்சிப் பள்ளிக்கு செல்வதை எதிர்த்ததையும், அந்த அமைப்பு, தலித்துகளின் நன்மைக்கு எதிரான அமைப்பு என்று சொன்னதும் தற்போது நினைவு வருகிறது.

மேக்வான்சியின் நண்பர் மூலமாக ஓஷோவின் நூல் படிக்கத் தொடங்கியதும் அதனைத் தொடர்ந்து, அண்ணல் அம்பேத்கல், தந்தை பெரியார், கபீர், ஜோதிராவ் பூலே ஆகியோரின் நூல்களைப் படிக்கப் படிக்க, கண் திறக்கிறது. அறிவு விசாலமாகிறது.




ஆர்.எஸ்.எஸ். சாகாவில் கூறப்பட்ட கருத்து அனைத்தும் எதிராக இருப்பதை உணர் கிறான். பார்ப்பன - பனியா மேலாதிக்கத்திற்கும், இவர் களுக்கு பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் அடியாட் களாக இருந்து முஸ்லீம்களை எதிர்ப்பதற்கும் தான் என்பது மேக்வான்சிக்குப் புரிகிறது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இரட்டை வேடத்தை அம்பலப் படுத்த துணிகிறான் இளைஞன் மேக்வான்சி. 2002-ல் குஜராத்தில் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் தொடர்பாக ஏற்பட்ட படுகொலை களை விசாரித்திட்ட மனித உரிமைக்குழுவின் முன்பாக மேக்வான்சி சாட்சியம் அளிக்கிறார். நண்பர் துணையுடன் துவங்கிய டைமண்ட் இந்தியா எனும் சிறு இதழ் மூலம் தனது எதிர்ப்பைப் பதிவு செய்கிறார்.

ஆனால், சங் பரிவாரங்கள் மூலம் அச்சுறுத்தல் துவங்குகிறது. தனக்குத் துணையாக எழுத்தாளர்கள், மனித உரிமைக் குழுவினர் இருப்பது ஆறுதல் அளிக்கிறது. இதில் குறிப் பிடத்தக்கவர் தந்தை பெரியாரின் இயக்கத்தில் தனது தந்தையும் இருந்ததாக கூறிய முன்னாள் அய்.ஏ.எஸ். அதிகாரி அருணா ராய்.

இவரது கடும் எதிர்ப்பை அறிந்து ஆர்.எஸ். எஸ். அமைப்பினர் மீண்டும் மேக்வான்சியை சேர்த்திடவும் அரசியலில் பதவி தர முன் வருவதையும் அவர் நிராகரிக்கிறார். தன்னை ஒரு அம்பேத்கரியவாதியாக அறிவித்து, சமூகத்தில் நிலவும் ஒடுக்குமுறைக்கும், சமூக அநீதிக்கும், சமத்துவமின்மைக்கும் எதிராக செயல்பட உறுதி ஏற்கிறார் தற்போது 45 வயதை நெருங்கும் பன்வார் மேக்வான்சி.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு எந்த முறையில் செயல்படுகிறது; அதன் உறுப்பினர் தன்மை என்ன? அதன் தலைமையில் யாருக்கு முக்கியத்துவம்? எத்தனை அமைப்புகள் அதன் பின்னணியில் உள்ளது? அதன் 'சாகா'வில் எத்தகைய ஆயுதப் பயிற்சி தரப்படுகிறது என்பது பற்றியும், ஹிந்து என்ற போர்வையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் எந்தவித புரிதல் இல்லாமல் தன்னைப் போலவே ஆயிரக்கணக்கில் ஈடுபட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், தாழ்த் தப்பட்டோர் உணர்ந்திட வேண் டும் என்பதையும், முஸ்லீம் எதிர்ப்பு என்பது எவ்வாறு திட்ட மிட்டு உருவாக்கப்படுகிறது என்பதையும், விளக்கமாக "நான் ஏன் இந்துவாக இருக்க முடிய வில்லை" "I could not be Hindu" எனும் நூலில் தெரிவித்துள்ளார் பன்வார் மேக்வான்சி. இந்தியில் எழுதப்பட்ட நூல், ஆங்கிலத்தில் சிறப்பாக மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. நிறைய செய்திகள், சம்பவங்கள் என நூல் முழுவதும் தனக்கு ஏற்பட்ட நிகழ்வுகளை சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

**மத்தியில் ஆட்சியாளர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வழிகாட்டுதலில் செயலாற்று பவர்களாகவும், பயிற்சி பெற்றவர்களாகவும் உள்ள இந்த காலகட்டத்தில், அந்த அமைப்பில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் சூழலில், பன்வார் மேக்வான்சியின் இந்த நூல், ஆர்.எஸ். எஸ்.-ன் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்து கிறது. மேலும், அந்த அமைப்பை பற்றிய விழிப்புணர்வையும், புரிதலையும் உருவாக்கும் என்பதில் அய்யமில்லை.**



# பொது சேவைக்கான நிறுவனங்கள்
## இஸ்லாத்தின் வரலாற்றில்
# மக்கள் நல்வாழ்வு கூறும் நிறுவனங்கள்

**தான தர்மங்களை வழங்குவது ஒரு கொள்கை என்பதைத் தலையங்கத்தில் குறிப்பிட்டோம்.**

**தான தர்மங்கள் வழங்கவது இஸ்லாத்தின் வரலாற்றில் எப்படி வளர்ந்தது, வாழ்ந்தது என்பதை இங்கே தருகின்றோம்.**

ஒரு சமுதாயம் நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்றால், அதில் வாழும் தனி மனிதர்கள் தயாள சிந்தனையும், தாராள மனப் பான்மையும் கொண்டவர்களாக வாழ்ந்திட வேண்டும். அந்தச் சமுதாயத்தை வழி நடத்தும் கொள்கைகள், அந்தத் தனி மனிதர்களிடம் வாழ்வற்றோருக்கு வாரி வழங்கிடும் மன நிலையை வளர்த்திட வேண்டும்.

மனிதர்களுக்கு மட்டும் என்றில்லாமல், இந்தத் தாராளத் தன்மையும், தயாள கணமும் மிருகங்களிடமும் காட்டப்பட வேண்டும்.

இஸ்லாம், தன்னைப் பின்பற்றுபவர் களிடையே இத்தகையதொர மனநிலையை ஏற்படுத்தவதில் மகத்தான் வெற்றிகளைக் குவித்திருந்தத.

ஒவ்வொரு சமுதாயமும், தங்களடைய தாராளத் தன்மையையும், தயாள சிந்தனை களையும் தங்கள் வழிபாட்டுத் தலங்களோடு மட்டமே மட்டுப்படுத்திக் கொண்டார்கள். வழிபாட்டுத் தலங்களை விட்டால் கல்வி நிறுவனங்களில் இந்தத் தயாள சிந்தனை வெளிப்பட்டது.

மேலை நாடுகளில் சில தாம் தோற்றுவித்த நிறுவனங்களின் வழி பொதுமக்கள் பலனடைய பல ஏற்பாடுகளைச் செய்தன. அவற்றின் வழி பலர் பலனடையவும் செய்தார்கள். அனால் இந்த நிறுவனங்களை நிறுவியர்களின் எண்ணங் களுக்கும், முஸ்லிம்களால் நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கும் பின்னால் உள்ள எண்ணங் களுக்கும் இடையே வேறுபாடு உண்டு.

மேலை நாடுகளில் நிறுவப்பட்ட பொது நிறுவனங்கள் பொதுமக்களுக்கு நன்மைகளைச் செய்யும் நிறுவனங்கள் தங்கள் இறைவனின் திருப்தியைப் பெற்றிட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு நிறுவப்பட்டன என்ற கண்ணி யத்தைப் பெறவில்லை. அவை சில பல உலகியல் நன்மைகளைக் கருத்தில் கொண்டே நிறுவப் பட்டன. முஸ்லிம்களால் நிறுவப்பட்ட நிறுவனங்கள், நலவாழ்வு மையங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் மகிழ்ச்சியைப் பெற வேண்டும் என்பதற்காகவே நிறுவப்பட்டன. அவற்றிற்குப் பின்னால் வேறு எண்ணங்களோ, நினைவுகளோ இருக்கவில்லை.

முஸ்லிம்களால் நிறுவப்பட்ட மக்கள் நல்வாழ்வு நிறுவனங்களும், கல்விக் கூடங்களும் முஸ்லிம்கள் மட்டுமே பலன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் நிறுவப்பட்டவை அல்ல. முஸ்லிம்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிறுவனங்களால் எல்லா தேசத்தைச் சேர்ந்தவர் களும், எல்லா இனத்தைச் சார்ந்தவர்களும், எல்லா மொழியைச் சார்ந்தவர்களும், எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும் பலனடைந்தார்கள்.

# மக்கள் நல்வாழ்வு குறித்து இஸ்லாம் சொல்லித் தந்த அடிப்படைக் கோட்பாடுகள்

திருக்குர்ஆன், மக்களை அழைத்து நன்மையை ஏவுங்கள். தீமையைத் தடுங்கள் என அடிக்கடி அறிவுறுத்துகின்றது. அதேபோல் வழங்கி வாழுங்கள் என மக்களை உந்தித் தள்ளுகின்றது திருக்குர்ஆன். இவை இரண்டையும் செய்துவிட்டு திருக்குர்ஆன் கூறுகின்றது.

"(தான தர்மங்கள் செய்வதினால் வறுமை உண்டாகி விடும் என்று அதைக் கொண்டு ஷைத்தான் உங்களைப் பயமுறுத்தகின்றான். ஒழுக்கமில்லா செயல்களைச் செய்யுமாறும் உங்களை ஏவுகின்றான். ஆனால், அல்லாஹ்வோ நீங்கள் தான தர்மங்கள் செய்தால்) தன்னிடமிருந்து மன்னிப்பும் (அருளும், பொருளும் மிக்க) செல்வமும் கிடைக்கும் என்று வாக்களிக்கின்றான். நிச்சயமாக அல்லாஹ் விசாலமான கொடையுடையவன் ; யாவற்றையும் நன்கறிபவன்." (அல்குர்ஆன் - 2:268)

இஸ்லாம் எல்லோரையும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளை செய்திடப் பணிக்கின்றது. பணமும் பொருளும் உடையவர்களாக இருக்கின்றார்களே அவர்களையும் அதிகாரத்தில் இருக்கின்றார்களே அவர்களையும், உடலால் உழைக்க முடிந்தவர்கள் இருக்கின்றார்களே அவர்களையும், ஏழைப்பாழைகளாக வாழ்க்கின்றார்களே அவர்களையும், இஸ்லாம் மக்கள் நல்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளப் பணிக்கின்றது இன்னுஞ் சொன்னால் ஒரு இஸ்லாமியச் சமுதாய அமைப்பில் மக்கள் நல்வாழ்வு சேவைகளைச் செய்திட முடியாதவர்கள் என்று யாரும் இருக்க முடியாது.

இறைவனின் இறுதித்தூதர் (ஸல்) அவர்கள் காட்டு மிராண்டிகளாக வாழ்ந்து கொண்டிருந்த மக்களை, இருப்பதையெல்லாம் தாங்களே அனுபவித்திட வேண்டும் என்று அலைமோதி நின்ற மக்களை, அடுத்தவர் உடைமைகளையும் அபகரித்து நாமே அனுபவித்திட வேண்டும் எனக் காட்டாசைகளைத் தங்களுக்குள்ளால் வளர்த்துக் கொண்ட மக்களை, மனிதப் புனிதர்களாகப் புடம் போட்டு எடுத்தார்கள். அவர்களை எல்லா நிலைகளிலேயும் மக்கள் நல்வாழ்வு பணிகளில் கவனம் செலுத்திடப் பணித்தார்கள்.





அப்போது அடுத்தவர்களுக்கு அள்ளித்தந்து அதனால் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றிட இயலவில்லை. எங்களால்; காரணம் நாங்கள் ஏழைகள் எனக்கூறிச் சிலர் இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் 9ஸல்) அவர்கள் முன்னால் வந்தார்கள்.

வளமில்லை, அதனால் வழங்கி வாழ முடியவில்லை; அதனால் அல்லாஹ்விடம் அதிகமான கூலிகளைப் பெற்றிட முடியவில்லை என்று நின்ற அந்த மக்களுக்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படி வழிகாட்டினார்கள்.

"மக்களுக்கு நல்லது செய்யும் எல்லாப் பணிகளும் அல்லாஹ்வின் வழியில் வழங்கப் பட்ட தர்மமாகவே கணிக்கப்படும். அல்லாஹ்வைத் துதியுங்கள். அல்லாஹ் தூய்மையானவன் என்று சொல்லுங்கள். அதுவும் ஒர தர்மமாகக் கணக்கிடப்படும். நல்லதை ஏவுவதம் ஒரு தர்மமாகக் (ஸதக்கா) கருதப்படும். தீயதைத் தடுப்பதும் ஒரு தர்மமாகக் கருதப்படும். நடந்து செல்பவர்களுக்கு தீங்கு செய்யும் வகையில் நடைபாதையில் கிடக்கும் ஒரு முள்ளை அல்லது ஒரு கல்லை அல்லது அதுபோன்ற ஒரு பொருளை அகற்றிடுவதும் ஒரு தானமாகவே கணக்கிடப்படும். சண்டையிட்டுக் கொள்ளும் இரு நபர்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதும் இறைவனின் வழியில் செய்யப்பட்ட ஒரு தர்மமாகவே கருதப்படும். தன் வாகனத்தில்

ஏறிட முடியாத ஒரு மனிதரை அவருடைய வாகனத்தில் ஏறிட உதவுவதும் ஒரு தர்மமாகவே கருதப்படும்." (புகாரி, முஸ்லிம்)

இருப்பவர்கள் செல்வத்தை வாரி வழங்கிச் செய்வதை இறைவனின் பாதையில் செலவிடப் படும் பணம் எனக் கணக்கில் எடுத்துக்கொள் ளும் இஸ்லாம். இல்லாதவர்கள் நற்செயல்களைச் செய்வதையும் மனிதர்களுக்கு பலனளிப் பவற்றைச் செய்வதையும் இறைவனின் வழியில் செலவிடப்படும் செல்வம் என எடுத்துக் கொள்கிறது.

இப்படிச் சமுதாயத்தின் அனைத்துத் தரப் பினரையும் நற்செயல்களின்பால் உந்தித் தள்ளு கின்றது இஸ்லாம்.

உழைப்பவர்கள், வியாபாரிகள், விவசாயிகள், ஆசிரியர்கள், பெண்கள், வயோதிகர்கள் இப்படி வாழ்வின் அனைத்துத் தரப்பினரையும் நல்லதைச் செய்திட உந்தித் தள்ளுகின்றது இஸ்லாம்.

செல்வத்தால் செழித்திருக்கவில்லை என்பது ஒருவர் நல்லதைச் செய்திட தடையாக இருக்க வில்லை. இஸ்லாமியச் சமுதாய அமைப்பில் அவர் தன் உழைப்பின் மூலம், தான தர்மங்களைச் செய்து தனவான்களின் அளவுக்கு அல்லாஹ்விடத்தில் நற்கூலிகளைப் பெறலாம்.

இறைவனின்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இப்படி நன்மைகளைச் செய்து வாழ்வதை எல்லா வரையறைகளையும் கடந்து சென்றிடச் செய்தார்கள். இந்த நற்செயல்கள், நிலம், நிறம், மொழி ஆகியவற்றை அவசியம் கடந்து சென்றிடவேண்டும்.

தேசியம் என்ற குறுகிய எல்லைகளையும் கடந்து சென்றிட வேண்டும். இந்த நல்லன வற்றைச் செய்திடும் நல்லெண்ணம்.

இதில் நன்மைகளைச் செய்பவர்கள் முழு முதற் கூலியைப் பெறுகின்றார். அல்லாஹ் விடத்தில்! அதேபோல் உலகில் மக்களிடம் அன்பையும் அரவணைப்பையும் அவர் வெகுமதிகளாகப் பெறுகின்றார்.

இறைவன் கூறுகின்றர்...

"நல்லதில் நீங்கள் எதைச் செலவிடினும், அது உங்களுக்கே நன்மை பயப்பதாகும். அல்லாஹ்வின் திருமுகத்தை நாடியே அல்லாது (வீண் பெருமைக்காச் செலவு செய்யாதீர்கள். நல்லவற்றிலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்தாலும் அதற்குரிய நற்பலன் உங்களுக்குத் திரும்பிக் கொடுக்கப்படும். நீங்கள் அநியாயம் செய்யப்பட மாட்டீர்கள்." (அல்குர்ஆன் - 2:272)

எவர் நல்ல செயல்களைச் செய்கின்றாரோ (அது) அவருக்கே நன்மையாகும். (அல்குர்ஆன் - 41:46)

இதுபோன்ற இறை வசனங்கள் தந்த ஊக்கங்களால் உருவானவையே இஸ்லாமிய நாகரிகத்தில் நன்மையும், நல்லனவும்!

உலகில் மனிதன் தன் சொந்த நலன்களைக் கொண்டே வழி நடத்தப்படுகின்றான். தன் சொந்த நலனைப்போல பொதுநலத்தையும் பேணினால் அது அவனுக்கு மேலும் பல நன்மைகளை இறப்பிற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் பெற்றுத்தரும் எனக் கூறிடும் போது அவன் பொதுநலத்தையும் பெரிதாகப் போற்றி வாழ ஆரம்பிக்கின்றான். கஞ்சத் தனத்தைக் கருத்தில் கொண்டவன் பெருந் தன்மையால் பிறர் நலன் பேண முன் வருகின்றான். இனி வரும்நாளில்நாமென்னசெய்வோம்? எதிர்வரும் தலைமுறையினர் என்ன செய்வார்கள்? என்றெல்லாம் அவன் கணக்குப் பார்த்து கதிகலங்கி இருப்பதையெல்லாம் தனக்கென கட்டிப்பிடித்துக் கொண்டு காவ லிருப்பதில்லை. அவன் அடுத்தவர் களுக்குகாகச் செலவு செய்ய முன் வருகின்றான்.



அல்லாஹ் மேலும் மேலும் இப்படி உற்சாகம் தருகின்றான் :

"அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடையவும், தங்கள் ஆத்மாக்களை உறுதியாக்கிக் கொள்ளவும், யார் தங்கள் செல்வங்களைச் செலவு செய்கின்றார்களோ அவர்களுக்கு உவமையானது, உயரமான (வளமுள்ள), பூமியில் ஒரு தோட்டம் இருக்கின்றது. அதன்மேல் பெரு மழை பெய்கிறது. அப்பொழுது அதன் விளைச்சல் இரட்டிப்பாகிறது. இன்னும் அதன் மீது அப்படி பெருமழை பெய்யாவிட்டாலும் பொடி மழையே அதற்குப் போதுமானது. அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் பார்க் கின்றவனாக இருக்கின்றான்." (அல்குர்ஆன் - 2:265)

"(கஷ்டத்திலிருப்பவர்களுக்கு) அழகிய கடனை அல்லாஹ்வுக்காகக் கடன் கொடுப்பவர் யார்? அதை அவன் அவருக்கு அநேக மடங்கு அதிகரிக்கும்படி செய்வான் அல்லாஹ். (பொருசை சிலருக்குச்) சுருக்கியும் பிடிப்பான். (சிலருக்குப்) பெருக்கியும் கொடுப்பான். அன்றி, அவனிடமே நீங்கள் மீண்டும் கொண்டு வரப்படுவீர்கள். (அல்குர்ஆன் - 2:245)

இந்த இறைவசனத்தைக் கேட்டவுடன் நபித்தோழர்களின் ஒருவர் எழுந்தார். அவரது திருப்பெயர் அபுத்தர்தா (ரழி). எழுந்தவர் இப்படிக் கேட்டார். தங்கள் தலைவர் அல்லாஹ்வின் அறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் :

"அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ்வுமா நம்மிடம் கடன் கேட்கிறான்?"

"இறைவனின் இறுதித்தூதர் (ஸல்) அவர்கள் "ஆமாம்" என்றார்கள். "அப்படியானால் இறை வனின் தூதர் அவர்களே! உங்கள் திருக்கரத்தை நீட்டுங்கள், இதோ உங்களிடம் என்னுடைய 'இன்னா' தோட்டத்தை ஒப்படைத்துவிட்டேன் அல்லாஹ்வின் பாதையில் அழகிய கடனாக! இதற்குச் சாட்சியாக இருங்கள். இந்தத் தோட்டத்திற்கு நானே சொந்தக்காரன் அதில் வேறு யாருக்கும் எந்தப் பாத்தியத்தையும் இல்லை. அந்தத் தோட்டத்தில் எழுநூறு பேரீத்த மரங்கள் இருக்கின்றன."

இப்படித் தன் தோட்டத்தை அல்லாஹ்வின் பாதையில் அழகிய கடனாகத் தந்துவிட்டு தன் இல்லம் திரும்பினார்கள் இந்த நபித்தோழர் அவர்கள். இந்தத் தோட்டத்தில்தான் அவர்கள் வசித்து வந்தார்கள். தன் மனைவியிடம், 'இந்தத் தோட்டத்தை நான் அல்லாஹ்வின் பாதையி கொடுத்துவிட்டேன்' எனக்கூறி அதைக் காலி செய்தார்கள். தோட்டத்தைக் காலி செய்து விட்டுத் திரும்பினார்கள். கடைசியாகத் தோட்டத்திலிருந்து வெளியேறும் போது அவரதுமனைவி இப்படிக் கூறினார்கள் :

"அபுத்தர்தா அவர்களே! அல்லாஹ்விடம் நீங்கள் செய்துகொண்ட இந்தப் பேரம் நிரம்ப நன்மைகளைப் பெற்றுத் தருவதாகும்"

## ஒரு இறை மொழியால் உருவாகின்றது முதல் இஸ்லாமிய அறக்கட்டளை

முதல் இஸ்லாமிய அறக்கட்டளையை உருவாக்கிய இறை வசனம் இதோ :

"நீங்கள் நேசிக்கும் பொருளிலிருந்து தானம் செய்யாத வரையில் நீங்கள் நன்மையடைய மாட்டீர்கள். எந்தப் பொருளை நீங்கள் செலவு செய்தாலும், நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்தவனாக இருக்கின்றான்." (அல்குர்ஆன் - 3:92)

இந்த இறைவசனத்தைச் செவிமடுத்ததும் அபூதல்ஹா அன்சாரி (ரழி) அவர்கள் இறைவனின் தூதர் (ஸல்) அவர்களிடம் இப்படிக் கூறினார்கள்.

"அல்லாஹ்வின் திருத்தூதர் (ஸல்) அவர்களே! 'பைரஹா' தான் என்னடைய சொத்துக்களிலெல்லாம் எனக்கு மிகவும் பிடித்த மானது. இதை நான் அல்லாஹ்வின் வழியில் தந்து விடுகின்றேன். அந்த அல்லாஹ் இதற்கான நற்கூலிகளைத் தந்திட வேண்டும் என எதிர் பார்க்கின்றேன். நீங்கள் விரும்புவதுபோல் செய்யுங்கள்" பெருமானார் (ஸல்) அவர்கள் இதற்குப் பதில் சொன்னார்கள் :

"இல்லை! இந்தச் சொத்து உங்களுக்குப் பயன் பல தருமு சொத்து. சொத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். அது உங்கள் பொறுப்பிலேயே இருக்கட்டும். அதில் விளைபவற்றை மட்டும் அல்லாஹ்வின் வழியில் தந்துவிடுங்கள்."

இந்த நன்கொடைதான் முதல் இஸ்லாமிய அறக்கட்டளை. இதிலிருந்து எத்தனையோ அறக்கட்டளைகள் பிரவாகமெடுத்து ஓடின.



அவற்றிலிருந்து எத்தனையோ நற்செயல்கள் முளைத்து கிளைத்து ஆலவிருட்சமாய் படர்ந்து பலன்களைப் பல்கிப் பெருகிடச் செய்தன.

இன்னுஞ் சொன்னால் இந்த அறக்கட்டளை இஸ்லாமிய நாகரிகத்திற்கு ஒரு மைல் கல்.

இந்த அறக்கட்டளையைத் தொடங்கி வைத்ததன் மூலம் இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் ரு பெரும் முன் மாதிரியை ஏற்படுத்தி வைத்து விட்டுப் போனார்கள். முஜாஹித் ஒருவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒப்படைத்த இரு தோட்டங்களைக் கொண்ட ஒரு அறக் கட்டளையைப் பெருமானார் (ஸல்) அவர்கள் அமைத்துக் காட்டினார்கள். இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த அறக்கட்டளையால் ஏழைகள், அல்லாஹ்வின் வழியில் போராடு பவர்கள் (அவர்களால் அவர்களுடைய தேவை களைப் பூர்த்தி செய்திட இயலவில்லையென்றால் இந்த அறக்கட்டளையிலிருந்து அவர்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்திடலாம்) ஆகியோருக்கு தேவையானதை ஏற்பாடு செய்துவிட்டுப் போனார்கள்.

இதற்குப் பின்னால் உமர் பின் ஹத்தாப் (ரழி) அவர்கள் தங்களுக்குச் சொந்தமான கைபர் என்ற பெருநிலச் சொத்தை அறக்கட்டளையாக அள்ளித் தந்தார்கள். தொடர்ந்தாற்போல் அபூபக்கர் (ரழி) அவர்கள், உதுமான் (ரழி) அவர்கள் ஆகியோர் தங்கள் சொத்துக்களைத் தந்து அறக்கட்டளை ஆரம்பித்து மக்கள் பயன டையச் செய்தார்கள். அலீ (ரழி) அவர்கள், ஜுபைர் (ரழி) அவர்கள் ஆகியோர் இந்த அணி வகுப்பில் அடுத்தடுத்து இடம் பெற்றார்கள்.

சங்கிலித் தொடராய் வந்த இந்த அறக் கட்டளைகளின் அணிவகுப்பு முடிவற்றுத் தொடர்ந்தது. ஓரளவுக்கு வசதியுள்ள ஒவ்வொரு நபித்தோழரும் தங்களிடம் இருப்பதைக் கொண்டு ஓர் அறக்கட்டளையை ஆரம்பித் தார்கள் என்ற அளவுக்குத் தொடர்ந்து கொண்டே இருந்தது.

தங்கள் சொத்துக்களை அல்லாஹ்வின் பாதையில் அள்ளித் தந்து அறக்கட்டளைகளின் வழி வக்கற்றோர், வகையற்றோர் வாழ்ந்திட திட்டத்தை இந்தப் பண்பாட்டுப் பணி உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் புத்துயிரும் புதுத் தெம்பும் பெற்று பொலிவோடு நடைப்போட்டத.

## பயன் பல பயக்கும் அறக்கட்டளைகளில் சில...

முஸ்லிம்களால் ஏற்படுத்தப்பட்ட எல்லா அறக்கட்டளைகளையும் பட்டியல் போட்டால் ஏடு கொள்ளாது. ஆகவே ஒருசிலவற்றை மட்டும் தொட்டுக் காட்டுகிறோம்.

*1) அல்லாஹ்விடம் மறுமையில் அளப்பரிய கூலிகளை அள்ளிக்கொள்ள வேண்டும் அலை மோதிய ஆர்வத்தால் எழுப்பப்பட்ட அறக் கட்டளைகளால் முதன் முதலாக எழுப்பப் பட்டவை பள்ளி வாயில்கள். அல்லாஹ்வால் அதிகமாக விரும்பப்படுவது என்ற அடிப் படையில் பள்ளிவாயில்கள் எழுப்பப்பட்டன. ஆட்சியாளர்களே போட்டி போட்டுக் கொண்டு இந்த இறைப் பணிக்காக அள்ளித் தந்தார்கள்.*

*2) பள்ளிவாயில்களுக்கு அடுத்தாற்போல் நற்செயல்களுக்காக எழுப்பப்பட்ட அறக்கட்ட ளைகளில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டவை கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் ஆகியவையாகும். (இவை தனி யானதோர் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது)*

*3) வழிப்போக்கர்களுக்காகக் கட்டப்பட்ட உணவகங்களும் தங்கும் விடுதிகளும் இந்த அறக்கட்டளைகளின் வரிசையில் அடுத்த இடத்தைப் பிடித்துக்கொண்டன. இஸ்லாமிய நாகரிகத்தில் இவை இலவச விருந்தினர் மாளிகைகளாகவே பயன்பட்டன.*

*இதை கலீஃபா உமர் (ரழி) அவர்களே தொடங்கி வைத்தார்கள். தனக்குச் சொந்தமான சொத்து ஒன்றை எழுதித் தந்து இதனைத் தொடங்கி வைத்தார்கள். அந்நாளில் உமர் (ரழி) அவர்கள் பொறுக்கியெடுத்தாற்போல் சில அன்சாரித் தோழர்களையும் சில முஹாஜிரின் தோழர்களையும் அழைத்து இந்த நற்செயலுக்கு நீங்கள் சாட்சியென சாட்சியம் சாட்டினார்கள். ஏனையோரையும் இந்த நற்செயல்களில் இறங்கிடச் செய்வதே இப்படிச் சாட்சியம் சாட்டியதன் நோக்கம்.*

*இதற்கப் பின்னால் அங்கே என்ன நடந்தது என்பதைக் கண்ணியமிக்க நபித்தோழர் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அன்சாரி (ரழி) அவர்கள் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள் :*

*"நபித்தோழர் ஒவ்வொருவரும் எதை யாவது தந்து அறக்கட்டளையை நிறுவாத நபித்தோழரே இல்லை என்று சொல்லும் அளவுக்கு அறக்கட்டளைகள் நிறுவப்பட்டதை நானறிவேன். இப்படி அவர்கள் எழுதி வைத்த சொத்துக்கள் எதையும் விற்பனை செய்ய இயலாத. அதேபோல் அவை எழுதி வைத்த வர்களின் வாரிசுகளுக்கும் கொடுக்கப்பட மாட்டாது."*

**அமெரிக்கா முஸ்லிம் நாடுகளுக்கு அதிநவீன ஆயுதங்களை விற்ப தில்லை. அப்படியே விற்றாலும் அவற்றை எப்படிப் பயன்படுத்திட வேண்டும் என்பதைக் கற்றுத் தருவதில்லை. இந்த விற்பனைகளில் நிரந்தரமானதோர் நிபந்தனையை அமெரிக்கா போட்டு வருகின்றது. அது இந்த ஆயுதங்களை வாங்கும் நாடுகள் அமெரிக்காவின் அனுமதி பெற்று உபயோ கப்படுத்த வேண்டுமாம். AWCS என்ற Advance Warning and Control System கிழக்காசிய நாடுகளில் அமெரிக்கா ஆயுதங்களை விற்ப தற்குப் பிறிதோர் நிபந்தனையை விதிக்கின் றது. அது இஸ்ராயீலை விஞ்சிடும் அளவில் ஆயுதங்களை எந்த முஸ்லிம் நாட்டுக்கும் விற்பனை செய்வதில்லை என்பதை! அளவிலும் சரி, தரத்திலும் சரி, கிழக்காசிய நாடுகளில் இஸ்ராயீலே ஆயுத பலத்திலும் விஞ்சி சிறக்க வேண்டும். இது அமெரிக்காவின் நிரந்தர ஆயுத விற்பனைக் கொள்கை! ஜிஹாதையும், ஆயுத ஆராய்ச்சியையும், புறக்கணித்தது முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணம். - மொழிப்பெயர்ப்பாளர்.**

*அடுத்து வந்த தலைமுறைகள் தங்களால் முடிந்தவற்றையெல்லாம் இந்த வகையிலே செய்து வைத்தார்கள். இதனால் ஏழைப்பாளர் களின் வாழ்வை வாட்டத்திலிருந்துக் காப்பாற்றும் அறக்கட்டளைகள் அலைமோதி நின்றன இஸ்லாமியச் சமுதாய அமைப்பில்*

*4) அல்லாஹ்வுக்காகத் தங்களை அர்ப் பணித்துக் கொண்டவர்களாக அமைவிடங்கள் கட்டித்தருவது இந்த அறக்கட்டளைகளில் அடுத்த இடத்தைப் பிடித்துக் கொண்டன.*

*5) வீடுகளைக் கட்டிடும் அளவுக்கு வசதி யற்றவர்கள், வாடகைக்குக் கூட வீடுகளை அமர்த்திக்கொள்ள முடியாதவர்கள் இவர் களுக்கு இலவசமாக உறைவிடங்களைக் கட்டித் தருவது இந்த அறக்கட்டளைகளின் வரிசையில் அடுத்து இடம் பெற்றன.*

*6) பாதசாரிகளுக்கும், நடந்தே நெடுந்தூரங் களையெல்லாம் கடந்து செல்பவர்களுக்கும் தாகந்தீர்ந்திட தண்ணீர்ப் பந்தல்களுக்கு நிரந்தர*

ஏற்பாடு செய்வதற்குப் பல அறக்கட்டளைகள் பயன்பட்டன.

7) வேலையற்றவர்கள் வந்து உணவருந்திச் செல்ல உணவங்கள் நிரந்தரமாக அமைத்துத் தரப்பட்டன. இதற்காக அமைக்கப்பட்ட உணவு விடுதிகள் இந்த அறக்கட்டகைளின் வரிசையில் அடுத்த இடத்தைப் பிடித்துக் கொண்டன.

8) ஹஜ் எனும் கடமையை நிறைவேற்றிட வருபவர்களுக்குத் தங்கிட மக்கமா நகரில் வீடுகளைக் கட்டித்தருவது இந்த அறக்கட்ட ளைகள் ஏற்படுத்தித் தந்த இன்னொரு புனிதமான செயலாகும். ஹஜ் பயணிகளுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் மக்கமா நகர் முழுவதும் அடர்ந்து படர்ந்து நின்றன. இவை எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்றன என்றால், இந்த வீடுகள் ஹஜ் அல்லாத நேரத்தில் வாடகைக்கு விடக்கூடாது என்ற மார்க்கத்தீர்ப்பைப் பெறும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றன.

9) மலைகள், பள்ளத்தாக்குகள், நீர் நிலைகள் அற்ற இடங்கள், இவற்றில் மேயும் விலங்கி னங்கள், இவற்றைக் கடந்து பயணம் செய்யும் வழிநடை பயணிகள் அருந்திட தண்ணீருக்கு ஏற்பாடு செய்திட அறக்கட்டளைகள் நிறுவப் பட்டன. இதற்காகக் கிணறுகள் வெட்டப் பட்டன. அவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக் கவும் இந்த அறக்கட்டளைகளிலிருந்து வரும் வருவாய் பயன்படுத்தப்பட்டது.

இப்படி வெட்டப்பட்ட கிணறுகள் மக்கமா நகரிலிருந்து ஆரம்பித்து பாக்தாத் வரை பரவிக்கிடந்தன. அதேபோல் மதீனா விலிருந்து ஆரம்பித்து டெமாஸ்கஸ் வரை விரவிக் கிடந்தன. இந்தக் கிணறுகள் வருவோர், போவோர் அனைவருக்கும் தாகந் தீர்த்துக் கொண்டிருந்ததால், அங்கே தண்ணீர், தண்ணீர் எனக் கதறும் நிலை இருக்கவில்லை. தாகத்தோடு பயணம் செய்தோம்; ஒரு மிடறு தண்ணீர் தருவாரில்லை என எவரும் இஸ்லாமிய அரசைச் சாடிட அங்கே வழி இருக்கவில்லை.

10) இதுபோன்ற அறக்கட்டளைகள் பிறிதோர் பாதுகாப்பு ஏற்பாட்டையும் செய்து தந்தன. இஸ்லாமிய அரசுக்கு எல்லைப் பகுதி களில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவோருக்கு உதவிட சில அறக்கட்டளைகள் நிறுவப்பட்டன.

இந்த அறக்கட்டளைகள் இந்தப் பாதுகாப் புப் பணியில் ஈடுபடுவோருக்கு வீடுகளைக் கட்டித்தந்தன. அவர்களது அடிப்படைத் தேவைகள் எந்தச் சிரமுமின்றிக் கவனிக்கப்பட்டு வந்தன. இதனால் இவர்கள் தங்கள் பணிகளில் (அதாவது எல்லையோரத்தில் வேற்று அரசுகள் இஸ்லாமிய அரசின் எல்லைகளை ஆக்கிர மிக்காமல் தடுத்திடும் பணிகளில்) முழுமை யாகக் கவனம் செலுத்திட முடிந்தது.

இதனால் விளைந்த நேரடி பலன்: அப்பாஸிய கலீஃபாக்களின் ஆட்சியின்போது ரோமர்கள் அடிக்கடி இஸ்லாமிய அரசின் எல்லைகளை ஆக்கிரமித்து வந்தார்கள். இந்த ஆக்கிரமிப்புக்கள் இந்த எல்லைப் பாதுகாப்புப் படையினரால் ஒட்டு மொத்தமாக ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. அதேபோல் சிலுவைப்போரில் விடுபட்டுப்போன கிறிஸ்த வர்கள் சிரியாவின் பகுதிகளில் தந்து கொண்டி ருந்த கெடுபிடிகளும் ஒரு முடிவுக்கு வந்தன.




11) நல்ல போர்க்குதிரைகள், வாள்கள் இன்னும் இவை போன்ற போர்த்தளவாடங்கள் உற்பத்திச் செய்திடவும், அவற்றில் ஆராய்ச்சி களைச் செய்து புதியனவற்றைக் கண்டு பிடித்திடவும் அறக்கட்டளைகள் நிறுவப்பட்டன. இந்த அறக்கட்ட ளைகள் தந்த வருவாயால் புதிய ஆயுதங்களம், நவீன ஆயுதங்களும் இஸ்லாமிய அரசுக்குத் தங்கு தடை யின்றிக் கிடைத்துக் கொண்டே

யிருந்தன. 'முஜாஹித்' என்ற அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவோர் தங்கு தடையின்றி ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டேயிருந் தார்கள்.

இவற்றால் விளைந்த இன்னொரு பலன் என்னவெனில் போர்த் தொழிற்சாலைகள் (War Industries) பல்கிப் பெருகின. போர்த் தொழிற்சாலைகள் இல்லாத இஸ்லாமிய நகரங்களே இல்லை என்ற அளவுக்கு அவை எங்கும் வியாபித்து நின்றன. இஸ்லாமிய நாடுகளில் கிறிஸ்தவர்கள் தாராளமாகச் சுற்றித் திரிந்து போர்த்தளவாடங்களை விலைக்கு வாங்கிச் சென்றனர். இதனால் பிற்றை நாள்களில் மார்க்க அறிஞர்கள் ஒரு மார்க்கத் தீர்ப்பை வழங்கிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். அதில், அவர்கள் எதிரிகளுக்கு ஆயுதங்களை விற்பதைத் தடை செய்திருந் தார்கள்.

இன்றைய முஸ்லிம்கள் இங்கே ஒரு நிமிடம் நின்று, தங்களைப் பற்றியதொரு சுய பரிதோசனையை நடத்திப் பார்க்க வேண்டும்.

இன்றைய நாள்களில் நாம் மேலை நாடுகளில் ஆயுதங்களை வாங்கிட அலை மோது கின்றோம். காரணம் அவர்கள் நவீன ஆயுதங் களின் தனிப்பெரும் வியாபாரிகளாக இருப்பதே! இந்த நிலைக்கு முஸ்லிம் நாடுகளைத் தள்ளியது எது? நாம் போர்த் தொழிற்சாலைகளையும், அவற்றில் நடந்த ஆராய்ச்சிகளையும் நிறுத்திக் கொண்டோம் என்பதே.[10]

*12)* சில பலர் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யத் தயாராக இருக்கலாம். அவர் களுடைய செலவினங்களை இஸ்லாமிய அரசால் ஏற்றுக்கொள்ள இயலாமல் போகலாம். இந் நிலையை ஈடுகட்ட என்றே சில அறக்கட்ட ளைகள் ஆரம்பிக்கப்பட்டன வாஞ்சையுள்ள முஸ்லிம்களால். இந்த அறக்கட்டளைகளுக்கு எழுதி வைக்கப்பட்ட சொத்துக்கள், அந்தச் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருவாய் இவையெல்லாம் அல்லாஹ்வின் வழியில் போர் புரிந்திட என்று இருப்பவர்களுக்காகவே செலவிடப்பட்டன. ஆகவே அல்லாஹ்வின் வழியில் போர் புரிந்திட வருவோர் வேறு எந்தக் கவலையுமின்றித் தங்கள் பணி தொடர்ந்தார்கள். அவர்கள் அல்லாஹ் வாக்களித்த அழகிய கூலிகளைத் தவிர வேறெதையும் எங்கேயும் எதிர்பார்க்காதவர்களே! எனினும் அவர்களின் உலகியல் தேவைகளும் சகோதர முஸ்லிம்களால் இதுபோன்ற அறக்கட்டளைகளின் வழி நிறை வேற்றப்பட்டன.

*13)* இன்னும் பல அறக்கட்டளைகள், சாலைகள் அமைக்கவும், பாலங்கள் கட்டவும், நடைபாதைகள் அமைத்துத் தரவும் ஏற்படுத் தப்பட்டன.

*14)* இறந்தவர்களை அடக்குவதற்குத் தங்களுக்குச் சொந்தமான நிலங்களை எழுதி வைத்து அறக்கட்டளைகளை ஏற்படுத்தித் தந்தார்கள் பல முஸ்லிம்கள்.

*15)* அநாதைகளையும் வழிப் போக்கர் களையும் இறந்துவிட்டால் அடக்குவதற்கென்றே சிலபல அறக் கட்டளைகள் நிறுவப்பட்டன.

*16)* வாழ்வில் வகையற்று நின்றவர் களுக்கு உதவிட ஏராளமான அறக்கட்டளைகள் இருந்தாலும், குழந்தைகள், இன்னும் வாழ்க்கைப் போட்டியில் கலந்துகொண்டு தங்களுக்கு வேண்டியதைச் சம்பாதிக்க இயலாதவர்கள் இவர் களையெல்லாம் பாதுகாக்கவும், பராமரிக்கவும் தனித்தனி அறக்கட்டளைகள் நிறுவப்பட்டன.

*17)* ஊனமுற்றோர், பார்வை இழந்தோர் இவர்களுக்குக் கல்வி அறிவு ஊட்டவும், இவர்களுக்கு உணவு முதல் அத்தனையும் தந்து பாதுகாக்கவும் அறக்கட்டளைகள் நிறுவப் பட்டன. இதனால் இவர்கள் மிகவும் கண்ணிய மானதொரு வாழ்க்கையை வாழ்ந்தார்கள்.

*18)* இளைஞர்களின் திருமணங்களுக்கு வகை செய்யும் அறக்கட்டளைகளும் நிறுவப் பட்டன. இந்த அறக்கட்ளைகள் மஹர் என்ற மணப்பெண்ணுக்குத் தந்திட வேண்டிய பணத்தைத் தந்திட இயலாத இளைஞர்களுக்கு மஹர் பணம் தந்து உதவின.

*19)* தாய்மார்களுக்கு உதவி செய்திடும் நிறுவனங்கள் : இந்த நிறுவனங்கள் தாய்மார் களின் உடல் வளத்தைப் பாதுகாக்கும் பொருட்டு பால்வார்த்து வந்தன. ஸலாஹூத்தின் அய்யூபி (ரஹ்) அவர்கள் தங்கள் கோட்டைக்குப் பக்கத்தில் இரண்டு தேக்கங்களைக் கட்டி வைத்திருந்தார்கள். ஒன்றில் பால் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. இன்னொன்றில் தெளிந்த



நீர் தேக்கி வைக்கப்பட்டிருந்து. தாய்மார்கள் காலையிலும் மாலையிலும் பால் கொண்டு சென்றார்கள். இன்றளவும்இந்தத் தொட்டிகளை டெமாஸ்கஸில் காணலாம்.

*20)* இஸ்லாமிய நாகரிகத்தில் விந்தை மிக்க அறக்கட்டளைகளை நாம் சந்திக்கின்றோம். ஆமாம்! உடைந்துபோன பாத்திரங்களை மாற்றி புதிய பாத்திரங்களை இலவசமாக மாற்றிட ஒரு அறக்கட்டளை அமைக்கப்பட்டால் அதனை விந்தையான அறக்கட்டளை என்றதானே சொல்வோம்! வேலையாட்கள், குழந்தைகள், அடிமைகள் ஆகியோர் அங்காடிக்கு வருகின்றார், பொருட்களை வாங்கிச் சென்றிட எடுத்துச் செல்லும் வழியில் அவை விபத்துக்குள்ளாகி உடைந்து விடுகின்றன. கவலை வேண்டாம், இந்தப் பொருள்களை அப்படி கொண்டுவந்து அதற்கென நிறுவப்பட்ட அறக்கட்டளைகளில் கொடுத்து அவற்றிற்கு மாற்றாகப் புதுப் பொருள் களைப் பெற்றுக்கொள்ளலாம். இஸலாமிய நாகரிகத்தில் மட்டுமே இதுபோன்ற அறக் கட்டளைகளைச் சந்திக்கின்றோம்.

*21)* ஊனமுற்ற ஆடு, மாடுகள், குதிரைகள், அதேபோல் நோய் வாய்ப்பட்ட மிருகங்கள், வயதான மிருகங்கள் இவற்றைப் பராமரிக்க சில அறக்கட்டளைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த மிருகங்கள் வயதாகி இறக்கும்வரை இந்த அறக்கட்டளைகள் அவற்றைப் பராமரித்து வந்தன.

இவைபோல் இன்னும் எத்தனையோ அறக்கட்டளைகள் நிறுவப்பட்டன. அவை அனைத்தையும் இங்கே பட்டியல் போட்டுக் காட்டிட இயலவில்லை. எடுத்துக்காட்டாக சிலவற்றைஇங்கே தொட்டுக் காட்டியுள்ளோம்.

என்னருமை இஸ்லாமிய சகோதரர்களே!

இந்த உலகம் அறியாமையினால் அல்லாடிக் கொண்டிருக்கும்போது நாம் எண்ணிடலங்கா சிகரங்களை எட்டிப் பிடித்தோம். அல்லாஹ் தன்னுடைய அளப்பரிய கருணையினால் அள்ளி வழங்கிய வழிகாட்டுதல் இஸ்லாம்! இது மட்டுமே உண்மையான, நேரான வழி! இந்த வழிகாட்டுதலை வையகத்தில் மேலோங்கச் செய்வதன் மூலமே நாம் மனித இனத்தை அழி விலிருந்தும் அவமானத்திலிருந்தும் காப்பாற்றிட இயலும்.

ஆனால், நாம் இந்த வழிகாட்டுதலை அல்லவா பின்னுக்குத் தள்ளிவிட்டோம்; பிற் போக்கான வழிகாட்டுதல்களில் அல்லவா நாம் நமது கவனத்தைப் பறிகொடுத்து நிற்கின்றோம்.!


**இப்போது பரபரப்பான**

**விற்பனையில்**




விலை ரு. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,

சென்னை - 600 001.

தொடர்ப்புக்கு : 8148129887

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் – ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் – மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு – மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது – டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு – பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் – 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X – மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்– டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது– ஹிந்தி – டி.எம். மணி, பக்கம் – 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் – முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் – 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது – கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் – செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் – 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்– பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் – பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை – டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 – விசாரணை – நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் – அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்-
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? -
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் - பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? -
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் - பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் - மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்-
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள்-
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் -
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

### BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

### BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

### BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது - டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி - கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.